

அல்லி
அமுதா கணேசன்
அல்லி • அமுதா கணேசன் •
அல்லி
அமுதா கணேசன்

# அல்லி



## 1

அந்த அறை முழுவதும் நறுமணம் கமழ்ந்து கொண்டு இருந்தது.

பட்டு இதழாக மொட்டு விரிந்த முல்லையும் மல்லிகையும் கமகமத்தன.

சந்தன ஊதுபத்தி சாம்பல் ஆகிக் கொண்டு இருந்தது.

ஆப்பிள், மாம்பழம், ஆரஞ்சு, திராட்சை மணம் வீசின.

ஒரு தட்டில் லட்டு, அல்வா, ஜாங்கிரி என்று அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. சுத்தமான நெய்யில் செய்யப்பட்ட அவையும் சுத்தமான மணத்தை வீசின.

பூத் தூவிய மஞ்சத்தில் புத்தாடையுடன் அமர்ந்து இருந்த மதியழகன், சென்ட் போட்டு இருந்தான். மற்ற மணத்துடன் அதுவும் போட்டியிட்டது.

ஊதுபத்தியின் புகை சுருள் சுருளாகக் காற்றில் மிதந்து கொண்டு இருந்தது. தான் மட்டும் அல்ல; நேரமும் கரைந்து கொண்டு இருப்பதை அது உணர்த்தியது.

என்ன பெரியவர்கள்!

ஒரு புது மாப்பிள்ளை எவ்வளவு நேரந்தான் காத்து இருப்பான்!

இவர்களுக்கு எல்லாம் முதல் இரவு என்று ஒன்று நடந்ததே இல்லையா?

வேறு யாராவதாக இருந்தால், இந்நேரம் தலையணையை இரண்டில் ஒன்று பார்த்து இருப்பார்கள்!

மதியழகன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

அதுவும் புதிதுதான். மாமனார் வாங்கிக் கொடுத்தது.

மனைவி-கைக்கடிகாரம் - பேனா, மூன்றும் ஒரு கைப்பட இருக்க வேண்டும் என்பார்கள். எனவே, அவனுக்குப் புது மனைவியுடன், புதுக் கைக் கடிகாரமும் மாமனார் அளித்தார் போலிருக்கிறது!

மனைவியைத் தங்கத்தில் வார்த்துத் தந்தார். கைக்கடிகாரமும் அப்படியே பொன்னிற மெருகூட்டப்பட்ட தங்கச் சங்கிலி மின்னிப் பளபளத்தது.

மணி பத்தைத் தாண்டிவிட்டது.

இரவுச் சாப்பாடு முடிந்ததும், நண்பர்களைக் கூட அடித்து விரட்டிவிட்டு, அவன் பள்ளி அறைக்குள் வந்தான். ஆனால் அல்லி இன்னும் வந்தபாடாக இல்லை.

அலங்காரம் நடந்து கொண்டு இருக்கிறதோ?

அல்லிக்கு என்ன அலங்காரம் வேண்டிக் கிடக்கிறது! அல்வாவுக்கு யாராவது சர்க்கரை போட்டுக் கொள்வார்களா?

அவளே பட்டை தீட்டப்பட்ட வைரம் ஆயிற்றே!



தோழிகள் பிடித்து வைத்து இருப்பார்களோ? சொல்ல முடியாது! இப்பொழுதுதான் பிஞ்சிலேயே பழுத்து விடுகிறார்களே! அல்லி கல்லூரியில் வேறு படித்தவள்.

மதியழகன் பொறுமை இழந்து விட்டான். எழுந்தான். அறைக்குள் நடை பயின்றான்.

காலையில் அவனுக்கும், அவளுக்கும் வந்த பரிசுப் பொருட்களை ஓர் ஓரமாக அடுக்கி வைத்து இருந்தார்கள். சில பரிசுப் பொருட்கள், கன்னி கழியாத பெண் போல, பரிசுத் தாளில் சுற்றப்பட்டு வைக்கப்பட்டு இருந்தன. உள்ளே இருப்பது பிரித்துப் பார்க்கப்படவில்லை. மணமக்கள் பிரிக்கட்டுமே என்று அப்படியே வைத்து விட்டார்கள் போலிருக்கிறது.

அந்தச் சாமான்கள் இடையே ஒரு பெட்டி. அந்தப் பெட்டி மீது தந்திகளும், அஞ்சல்களும் அடுக்காக இருந்தன. காலையில் வந்த வாழ்த்துச் செய்திகள் சில பிரிக்கப்பட்டும், பல பிரிக்கப்படாமலும் இருந்தன.

மதியழகன் காலையில் சில தந்திகளைப் பார்த்தான். பிறகு பார்க்க நேரம் இல்லை. மணமக்கள் பார்க்கட்டுமே என்று இப்பொழுது இங்கே வைத்திருக்கிறார்கள் போலும்.

நெருங்கிய நண்பனான நெடுஞ்செழியன் திருமணத்துக்கு வரவில்லை. வாழ்த்துச் செய்தியாவது அனுப்பியிருப்பானா?

மதியழகன் அருகில் சென்று நாலைந்து தந்திகளைக் கையில் எடுத்தான். இரண்டைப் பிரித்துப் பார்த்தான். அதற்கு மேல் பொறுமை இல்லை. வைத்துவிட்டு மீண்டும் கட்டிலுக்கு வந்தான்.

அவன் தலைக்கு மேல் பூச்சரம் தொங்கியது. ஒரு மல்லிகை மொட்டு இன்னும் மலராமல் இருந்தது. சரத்தில் இருந்து அதை உதிர்த்து எடுத்தான். அல்லியை நினைத்துக்கொண்டே அதன் இதழ்களைக் கையினால் விரித்தான். 'குப்' என்று மணந்தது. கையை உயர்த்தி முகர்ந்தான்.

அப்பொழுது கதவு திறந்தது.



## 2

சொர்க்க வாசல் திறந்தது போல இருந்தது!

மதியழகன் சட் என்று திரும்பிப் பார்த்தான்.

நாலைந்து தோழிகள் அல்லியை அறைக்குள் தள்ளிக் கொண்டு இருந்தார்கள்.

''தாழ் போட்டுக் கொள்ளடீ!''

''கலீர்'', ''கலீர்'' என்று சிரிப்புகள்.

''குபீர்''ச் சிரிப்பு வீட்டையே குலுங்க வைத்தது.

அல்லி படார் என்று கதவைச் சாத்திக் கொண்டு தாழிட்டாள்.

தோழிகள் கதவை இடித்துத் திறந்து விடுவார்கள் என்ற அஞ்சியது போலக் கதவில் சாய்ந்து கொண்டு நின்றாள்.

பூச்சுமை தாங்காமலோ என்னவோ, அவள் தலை குனிந்து இருந்தது.

மதியழகன் அவளைப் பார்த்தான்.

அவள் யார்? அல்லிதானா? அல்லது வேறு பெண்ணை அனுப்பியிருக்கிறார்களா?



இன்று காலையில்தான் முதன் முறையாக அவன் அல்லியை நேரடியாகப் பார்த்தான்.

பெண் பார்க்கக்கூடப் பெற்றோரையும், உடன் பிறந்தாளையும் மட்டுமே அனுப்பியிருந்தான். கல்லூரிக்குப் போய்க் கொண்டு இருந்த அவளை ஜாடை மாடையாய் அவன் பார்த்து இருக்கிறான். பெண் பார்ப்பதாம்; பிறகு பிடிக்கவில்லை என்று வருவதாம். இது எல்லாம் என்ன சடங்கு? காட்டுமிராண்டித்தனம் என்று சாடுகிறவன் அவன்.

முன்பு எல்லாம் வயதுக்கு வந்த பெண்கள் வாசலைத் தாண்டுவது இல்லை. அப்பொழுது பெண் பார்க்க வீட்டுக்குப் போக வேண்டியது இருந்தது. இப்பொழுது அப்படியா? பெண்களை வீட்டில் மட்டுந்தான் பார்க்க முடிவது இல்லை! பிறகு எதற்குப் பெண் பார்க்கும் படலம்? இது அவனது வாதம். ''அம்மா! நீங்களும் தங்கையும் பார்த்தால் போதும்!'' என்று முடிவாகச் சொல்லிவிட்டான்.

மணமேடையில் அவளை ஓரக் கண்ணால் பார்த்தான். அதன்பின் நடந்த சடங்குகளில் அவளை நேருக்கு நேர் பார்க்க முடிந்தது. மாலையில் வரவேற்பு நடந்தபொழுது இருவரும் சளசள என்று பேசிக்கொண்டு இருந்தார்கள்—பன்னிரண்டு மணி நேரத்துக்குள் அவ்வளவு நெருக்கமாகப் பழகி விட்டார்கள்.

ஆனால், அந்த அல்லியா இவள்!

பட்டுச் சேலையில் சுற்றப்பட்ட தங்கச் சிலை போலிருக்கிறாளே!

அழகிக்கும் அலங்காரம் தேவைதான் போலிருக்கிறது! பூக்கடைக்கும் விளம்பரம் தேவைப்படுகிறது அல்லவா? பட்டுச் சேலைக்குத் தங்கச் சரிகை தனி அழகு தருகிறதே!

ஏற்கெனவே மணந்து கொண்டு இருந்த அந்த அறை, இப்பொழுது மேலும் மணம் பெற்றது. அல்லியும் 'சென்ட்' போட்டிருப்பாள் போலிருக்கிறது. அவள் கூந்தலில் வகை வகையான வண்ண மலர்கள். அவள் கையில் வெள்ளிச் செம்பு. அதில் குங்குமப் பூப் போட்டுக் காய்ச்சிய பசும்பால், அதுவும் மணத்தது.

அவன் வாழ்க்கையே நல்ல மணத்துடன் தொடங்குகிறது. ஆம், மணத்துடன் தானே முழுமையான வாழ்க்கை தொடங்குகிறது! வாழ்நாள் முழுவதும் மணக்க வேண்டும் என்பதற்காகத்தான் வாழ்க்கை ஒப்பந்தத்தை 'மணம்' என்றார்களோ!

அவன் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

கொடியுடன் பறிக்கப்பட்ட தாமரை மொட்டுப் போல அவள் தலை குனிந்து நின்றாள்.

முதல் இரவு. மோகந் தரும் உறவு. விளக்கு வெளிச்சம். விண்ணகத்து நட்சத்திரம் போல அவள் தோன்றினாள். பூங்கொடிக்குப் பட்டுச் சேலை கட்டிவிட்டது போல விளங்கினாள். அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பெருமையாக இருந்தது.

அவனுக்கு 27 வயது ஆகிறது.

21 வயது ஆன நாளில் இருந்தே அவனுக்குப் பெண் பார்க்கத் தொடங்கினார்கள். பொறியியல் படித்து முடித்து அவன் வேலை தேடினான். நல்ல வேலை கிடைத்தது. நல்ல மனைவியும் கிடைத்தாள். 'இத்தனை நாள் தேடியது



காத்திருந்தது வீண் போகவில்லை' என்று அவன் அக மகிழ்ந்தான்.

பெயருக்கு ஏற்ப அவள் அல்லிக் கொடி போல இருந்தாள். அவன் ஒரு கையில் அவளைப் பிடித்து விடுவான். 'கொடியுடல்' என்று படித்திருப்பவன், அவளைப் பார்த்த அன்றுதான், அதை அனுபவபூர்வமாகக் கண்டான். அடர்ந்த கூந்தல், அகன்ற விழிகள், அழகிய மூக்கு, ஆப்பிள் கன்னம், அடங்கிய பல்வரிசை. அவளைப் பார்த்த பொழுது அவனுக்கு ஒரே ஒரு வருத்தந்தான் ஏற்பட்டது—காய்களைத் தாங்காமல் அவள் இடை ஒடிந்துவிடக் கூடாதே என்று துயருற்றான்.

மெல்ல அவளை நோக்கி நகர்ந்தான்.

அருகில் சென்று அவள் கையைப் பற்றினான் — "அல்லி!"

பனி மழை நனைந்தது போல, அவள் மெய்சிலிர்த்தாள்.

அரவணைத்து அணைத்தபடி அவளைக் கட்டிலுக்கு அழைத்து வந்தான்.

பாலைப் பக்கத்தில் வைத்து விட்டு, அவன் காலில் விழுந்தாள் அவள்.

அவன் அவளை அள்ளியெடுத்துக் கட்டிலில் அமர்த்தினான். தானும் அவளை ஒட்டியபடி உட்கார்ந்து கொண்டான்.

அவள் பாலை எடுத்து நீட்டினாள்.

அவன் வாங்கிப் பக்கத்தில் வைத்துவிட்டு, அவளை உற்றுப் பார்த்தான்.

அவள் நாணத்துடன் தலை குனிந்தாள்.

ஏற்கெனவே மணந்து கொண்டு இருந்த அந்த அறை, இப்பொழுது மேலும் மணம் பெற்றது. அல்லியும் 'செண்ட்' போட்டிருப்பாள் போலிருக்கிறது. அவள் கூந்தலில் வகை வகையான வண்ண மலர்கள். அவள் கையில் வெள்ளிச் செம்பு. அதில் குங்குமப் பூப் போட்டுக் காய்ச்சிய பசும்பால், அதுவும் மணத்தது.

அவன் வாழ்க்கையே நல்ல மணத்துடன் தொடங்குகிறது. ஆம், மணத்துடன் தானே முழுமையான வாழ்க்கை தொடங்குகிறது! வாழ்நாள் முழுவதும் மணக்க வேண்டும் என்பதற்காகத்தான் வாழ்க்கை ஒப்பந்தத்தை 'மணம்' என்றார்களோ!

அவன் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

கொடியுடன் பறிக்கப்பட்ட தாமரை மொட்டுப் போல அவள் தலை குனிந்து நின்றாள்.

முதல் இரவு. மோகந் தரும் உறவு. விளக்கு வெளிச்சம். விண்ணகத்து நட்சத்திரம் போல அவள் தோன்றினாள். பூங்கொடிக்குப் பட்டுச் சேலை கட்டிவிட்டது போல விளங்கினாள். அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பெருமையாக இருந்தது.

அவனுக்கு 27 வயது ஆகிறது.

21 வயது ஆன நாளில் இருந்தே அவனுக்குப் பெண் பார்க்கத் தொடங்கினார்கள். பொறியியல் படித்து முடித்து அவன் வேலை தேடினான். நல்ல வேலை கிடைத்தது. நல்ல மனைவியும் கிடைத்தாள். 'இத்தனை நாள் தேடியது



காத்திருந்தது வீண் போகவில்லை' என்று அவன் அக மகிழ்ந்தான்.

பெயருக்கு ஏற்ப அவள் அல்லிக் கொடி போல இருந்தாள். அவன் ஒரு கையில் அவளைப் பிடித்து விடுவான். 'கொடியுடல்' என்று படித்திருப்பவன், அவளைப் பார்த்த அன்றுதான், அதை அனுபவபூர்வமாகக் கண்டான். அடர்ந்த கூந்தல், அகன்ற விழிகள், அழகிய மூக்கு, ஆப்பிள் கன்னம், அடங்கிய பல்வரிசை. அவளைப் பார்த்த பொழுது அவனுக்கு ஒரே ஒரு வருத்தந்தான் ஏற்பட்டது—காய்களைத் தாங்காமல் அவள் இடை ஒடிந்துவிடக் கூடாதே என்று துயருற்றான்.

மெல்ல அவளை நோக்கி நகர்ந்தான்.

அருகில் சென்று அவள் கையைப் பற்றினான் — "அல்லி!"

பனி மழை நனைந்தது போல, அவள் மெய்சிலிர்த்தாள்.

அரவணைத்து அணைத்தபடி அவளைக் கட்டிலுக்கு அழைத்து வந்தான்.

பாலைப் பக்கத்தில் வைத்து விட்டு, அவன் காலில் விழுந்தாள் அவள்.

அவன் அவளை அள்ளியெடுத்துக் கட்டிலில் அமர்த்தினான். தானும் அவளை ஒட்டியபடி உட்கார்ந்து கொண்டான்.

அவள் பாலை எடுத்து நீட்டினாள்.

அவன் வாங்கிப் பக்கத்தில் வைத்துவிட்டு, அவளை உற்றுப் பார்த்தான்.

அவள் நாணத்துடன் தலை குனிந்தாள்.

அவன் அவள் தலையை நிமிர்த்தினான். மீண்டும் நோக்கினான்.

''அப்படிப் பார்க்காதீர்கள்.'' அவள் வெட்கத்துடன் மீண்டும் குனிந்து கொள்ள முயற்சித்தாள்.

''அல்லி! எனக்கு ஒரு சந்தேகம். நீ படித்த பெண்தானா? பி.ஏ. படித்து இருப்பதாகச் சொன்னார்களே?''

அவள் பதில் சொல்லவில்லை. எதிர்த்த சுவரைச் சுட்டிக் காட்டினாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

பட்டம் பெற்ற உடையுடன் அவள் சுவரில் நின்று கொண்டு இருந்தாள்.

''உன்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே!'' என்றான் அவன். ''பட்டிக்காட்டுப் பெண்கள் கூட எவ்வளவு முன்னேறி விட்டார்கள்! அறைக்குள் மளமள என்று வரவேண்டியதுதானே? காலில் என்ன விழுவது!''

''படித்தால் பழக்க வழக்கம் பண்பாடு எல்லாம் மாறி விடுமா?'' அவள் மெல்லப் பேசினாள்.

''ஆணும் பெண்ணும் சமம்தானே? நீ ஏன் என் காலில் விழ வேண்டும்?'' அவன் விடவில்லை.

''தப்புதான். பதிலுக்கு நீங்கள் என் காலில் விழுந்து விடுங்கள். சரியாகிவிடும்!'' அவள் முறுவலித்தாள்.

இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று நினைத்தான். ''நீ சரியான போக்கிரிதான்!''



''பார்த்தீர்களா? இதற்குத்தான் நான் வாயே திறப்பது இல்லை.''

அவன் ஒரு லட்டை எடுத்தான். ''இதற்காகவாவது வாயைத் திறக்கலாமா?''

''எனக்கு அவ்வளவு பெரிய வாய் இல்லை!'' அவள் அவன் கையில் இருந்த லட்டைத் தன் கையில் வாங்கிக் கொண்டாள்.

''ஆ!'' அவன் வாயைத் திறந்து காட்டினான்.

''என்னையா விழுங்கப் போகிறீர்கள்? லட்டுதானே!'' அவன் வாய்க்குள் லட்டைத் திணித்தாள்.

விழுங்க முடியாமல் அவன் அதைக் கையில் எடுத்துக் கொண்டான். ''எனக்கு நீதான் லட்டு!'' அவளை இரு கையாலும் அணைத்தான்.

அவள் நழுவி எழுந்து மெல்ல நடந்தாள்.

அவன் பின் தொடர்ந்தான்.

''இந்தத் தந்திகளைப் பார்த்தீர்களா?'' அவள் பேச்சை மாற்றினாள்.

''நாளைக் காலையில் பார்க்கலாம்!'' அவள் கையில் இருந்த தந்திகளைப் பறித்து, அவன் கீழே வைத்தான்.

''நமக்கு வந்த பரிசுகளை நாம் பார்க்கவே இல்லை!'' வண்ணத்தால் சுற்றப்பட்ட ஒரு பெட்டியை அவள் கையில் எடுத்தாள்.

''அதற்கு இப்பொழுது என்ன அவசரம்?'' அவன் சிணுங்கினான்.

''வேறு எதற்கு அவசரம்!'' அவள் கேலி செய்து கொண்டே தாளைப் பிரித்தாள்.

அது—

'நிரோத்' பாக்கெட்டு!

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அசடு வழிந்து சிரித்துக் கொண்டார்கள்.

''உங்களுக்குத்தான். வைத்துக் கொள்ளுங்கள்!''அவள் நீட்ட, அவன் வாங்கிக் கொண்டான்.

அது குளியலறை இணைந்த அறை.

குளியலறையை நோக்கி அவன் நடந்தான்.

''என்ன செய்யப் போகிறீர்கள்?'' அவள் திகைப்புடன் கேட்டாள்.

''இன்றைக்கே பயன்படுத்தப் போகிறேன்!'' என்றான் அவன்.

அவன் கையில் இருந்த பெட்டியை அவள் பறித்துக் கொண்டாள்.

''ஏன்?'' அவன் அவளைப் பார்த்தான்.

''ஒன்றுக்குப் பிறகு இப்போது வேண்டாம். இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் என்பவர்களுக்குத்தான் இது தேவை!'' படித்த பெண்ணுக்கே உரிய துணிச்சலுடன் அவள் பேசினாள்.

''முதல் குழந்தையைக்கூடத் தாமதப்படுத்தலாம்!'' என்றான் அவன்.



''உங்களுக்குப் பதினெட்டு வயதும், எனக்குப் பதினாறு வயதும் இருந்தால் அப்படிச் செய்யலாம்!'' என்ற அவள், அந்தப் பெட்டியை மற்றச் சாமான்களுடன் சேர்த்து வைத்தாள்.

''அப்படியானால் சரி!'' என்ற அவன், அவளை 'அலேக்' பண்ணிவிட்டான்.

அவளுக்கு உடல் முழுக்கக் கூசியது. ''விடுங்கள்!'' என்று கெஞ்சினாள்.

அவன் அவளைப் படுக்கையில் கிடத்தினான்.

அவள் சட் என்று புரண்டு குப்புறப் படுத்துக் கொண்டாள்.

அவன் விளக்கை அணைத்தான்.

சிணுங்கல்,

சிணுங்கல்.

இரவில் எங்கோ மலர்ந்த ஓர் அல்லிப் பூவில் எங்கு இருந்தோ வந்த ஒரு வண்டு அமர்ந்தது!



## 3

**வ**ழக்கமாக மதியழகன் எட்டு மணிக்குத்தான் எழுந்திருப்பான். நேற்று இரவு எப்பொழுது தூங்கினான் என்பது அவனுக்கே தெரியாது. தூங்கினானா என்பதே சந்தேகந்தான்! எப்பொழுதோ, எப்படியோ தூங்கிப் போனான். ஆனால், அதிகாலையில் விழித்துக் கொண்டான். அல்லியைக் காணோம்! அவனும் எழுந்து அமர்ந்து கொண்டான். யாரும் கேலி பண்ணக் கூடாதே.

"இதை வைத்துக் கொள்ளுங்கள்!" ஒரு தலையணையை எடுத்து அவன் கையில் கொடுத்துவிட்டு அவள் நழுவினாள்

"இரவு இந்தப் பக்கந்தானே வருவாய்? அப்பொழு உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறேன்!" போலியாக அவளை மிரட்டிவிட்டு, அவன் கால்களை நீட்டினான். கண்களை மூடினான்.

சற்று முன்பு தூக்கம் வருவது போல இருந்தது. படுத்தா ஏக்கம் அல்லவா வருகிறது!

அவன் கண்களில் நித்திராதேவி வருவதற்குப் பதில் அல் வந்தாள்.

முதல் இரவை அசை போட்டான்!

அல்லி என்று அவளுக்குப் பெயர் வைத்தவர் வாயில் ஒ மூட்டை சர்க்கரையைக் கொட்ட வேண்டும்! அல்லி பூப்போல அவ்வளவு மென்மையாக அவள் இருந்தா அவள் சதை அல்லி இதழ்களை விட மெத் என்று இருந்த அதரங்களும் அல்லி இதழ்களே, இடையோ அல்லிக் கொ அல்லிக் கொடியில் தாமரைப் பூக்கள்.

நினைத்துப் பார்த்தால் எல்லாம் புதிய அனுபவமா தோன்றியது. ஒரு பெண்ணிடம் இவ்வளவு இன்ப இருக்கிறதா? வெறும் சதை, எலும்பு, நரம்பு, இரத்த இத்தனையும் ஒன்று சேரும்பொழுது, இன்ப மெத்தைய விடுகின்றனவே! பெண்மையுடன் ஆண்மை இரண்ட கலக்கும்பொழுது அதைவிடச் சொர்க்கம் இனிமைய இருக்குமா என்ன! "காயமே இது பொய்யடா! காற்றடை பையடா!" என்று பாட எப்படித்தான் மனம் வந்ததோ!



அல்லியை மீண்டும் தொட்டுப் பார்க்க வேண்டும் போல அவனுக்கு இருந்தது.

பகல் எப்பொழுது தொலையும்? இரவு எப்பொழுது வரும்? இரண்டாவது இரவை விரைவில் எதிர்பார்த்து ஊக்கப் பெருமூச்சு விட்டான். அழுதுகொண்டே தூங்கி விடும் குழந்தை போல அந்த ஏக்கத்துடன் தூக்கத்தில் ஆழ்ந்து போனான்.

மதியச் சாப்பாட்டுக்கு அல்லி வந்து எழுப்பினாள்.

"பசியேயில்லை!" காலையில் கனத்த சாப்பாடு. அதன்பின் அயர்ந்த தூக்கம். கல்லுப்போலக் கிடந்த வயிற்றைத் தட்டிக் காட்டினான். ஆனாலும் அவளைப் பின் தொடர்ந்தான்.

கோழிக் குழம்புடன் சாப்பாடு. சாப்பிட்டு முடிந்ததும் அவன் எழுவதற்கு அல்லி கை கொடுக்க வேண்டியிருந்தது!

அவன் மீண்டும் பள்ளி அறைக்குள் புகுந்து கொள்ள, அல்லி வெற்றிலைத் தட்டை எடுத்து வந்தாள். "வெற்றிலை போடுவீர்களா?"

"கொண்டு வா, கொண்டு வா!" என்றவன், "நீதான் மடித்துக் கொடுக்க வேண்டும்!" என்று கெஞ்சினான்.

"எனக்குத் தெரியாது. நான் வெற்றிலை போடுவது இல்லை!" என்றாள் அல்லி.

"ஏன்?"

"எங்கள் வீட்டில் சின்னப் பிள்ளைகள் வெற்றிலை போட அனுமதிக்க மாட்டார்கள்."

"இப்பொழுது நீ சின்னப் பிள்ளை அல்லவே, பெரிய மனுசி. நான் மடித்துத் தருகிறேன்."

''வேண்டாம். பழக்கம் இல்லாதவர்கள் வெற்றிலை போட்டால், மயக்கம் வருமாம்.''

''வெற்றிலை போட்டாலும் போடா விட்டாலுந்தான் உனக்கு மயக்கம் வருமே!''

''ஏன்?''

''மூன்று மாதம் கழித்துத் தெரியும்.''

''என்ன தெரியும்?''

''மசக்கை.''

''அச்சோ!'' அவள் நாணத்துடன் கைகளால் முகத்தை பொத்திக் கொண்டாள்.

அவன் அவள் கைகளை விலக்கினான்.

அவள் நல்ல சிவப்பு. இப்பொழுதோ அவள் முக மிளகாய்ப் பழம் போல இருந்தது.

''நான் போகிறேன்.''

அவள் எழுந்தாள். அவன் பிடித்துக் கொண்டான்.

''நீ வெற்றிலை போடாவிட்டால், என் மீது உனக் இருக்கும் அன்பு எனக்கு எப்படித் தெரியும்?''

''வெற்றிலை போட்டால்தான் தெரியுமா?''

''ஆமாம். உன் அதரங்கள் எவ்வளவு சிவக்கிறதே அவ்வளவு அன்பாம் என் மீது உனக்கு.''

''அதற்கு வெற்றிலை ஏன் போட வேண்டும்? லிப்ஸ்டி அடித்தால் போதுமே.''



''அதுகூட வேண்டாம். நானே சிவக்க வைக்கிறேன்.'' அவன் அவளைக் கட்டிப் பிடித்தான்.

''யாராவது வரப் போகிறார்கள். விடுங்கள்!'' அவள் தூண்டில் மீன் போலத் துடித்தாள்.

''இங்கே யாரும் வர மாட்டார்கள்!'' அவன் விடவில்லை.

''விடுங்கள்.''

''ஏன்?''

''இதெல்லாம் இரவில்தான்.''

''இரவு எப்பொழுது வரும்?''

''படுத்துத் தூங்குங்கள். வரும்.''

அவள் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

''மாலையில் கோவிலுக்குப் போக வேண்டுமாம். அம்மா சொன்னார்கள்.''

அவள் போய் விட்டாள்.

படுத்துத் தூங்க அவனுக்கு விருப்பம் இல்லை. நேற்று ஓர் இரவு அவளுடன் படுத்தது. இப்பொழுது தனியாகப் படுப்பது என்றாலே வெறுப்பாக இருந்தது. வேற என்ன செய்வது? சுற்று முற்றும் பார்த்தான்.

வாழ்த்துச் செய்திகளை இன்னும் பார்த்து முடிக்க வில்லையே.

கையில் எடுத்தான்.

ஒவ்வொன்றாகப் படித்தான்.

நண்பர்கள்... உறவினர்கள்... சிலர் யார் என்று தெரிய வில்லை. அல்லிக்கு வேண்டியவர்கள் ஆக இருக்கக் கூடும்.

நூறு தந்தியாவது இருக்கும். சிலர் மூன்று ரூபாயை மிச்சப் படுத்த, வாழ்த்துச் செய்தியைக் கையில் எழுதி அனுப்பி யிருந்தார்கள். அனுப்பியிருப்பவர் பெயரை மட்டுமே பார்த்தான்.

இது என்ன, நீண்ட கடிதம் போல!

கடிதம்தான் — அவன் பெயருக்கு வந்து இருந்தது.

யார் எழுதியது?

உறையைக் கிழித்தான்.

''நண்பனே!'' என்று தொடங்கியது. ''இன்று உனக்கு முதல் இரவு.''

அடுத்த வரியைப் படித்ததும் அதிர்ச்சிக்கு ஆளானான்.

''ஆனால், உனக்கு மட்டுமே இது முதல் இரவு. உன் மனைவி அல்லிக்கோ இது இரண்டாவது இரவு.''

அடுத்த வரிகளைப் பரபரப்புடன் படித்தான்.

''அல்லி கைப் பட்ட ரோஜா. என் குழந்தை அவள் வயிற்றில் வளர்ந்து கொண்டு இருக்கிறது. ஆகவேதான் இவ்வளவு அவசரமாக அவளை உன் தலையில் கட்டியிருக்கிறார்கள்.

இப்படிக்கு,
உன் நலம் நாடும்
நண்பன்,
உண்மை விளம்பி.





# 4

மதியழகன் கல்லாகிப் போனான்.

கையில் கடிதத்தைப் பிடித்தபடி சிலையாக அமர்ந்து இருந்தான்.

உணர்வை இழந்த, உயிரில்லாப் பொருள் ஆகிவிட்டான்.

உணர்ச்சி பெறச் சிறிது நேரம் ஆயிற்று.

மழையில் நனைந்த கோழிக் குஞ்சு போல உடலைச் சிலிர்த்துக் கொண்டான்.

தயக்கத்துடன் அந்தக் கடிதத்தை மீண்டும் படித்துப் பார்த்தான்.

...அல்லிக்கு இது இரண்டாவது இரவு...

...என் குழந்தை அவள் வயிற்றில் வளர்ந்து கொண்டு இருக்கிறது...

மதியழகனின் கண்கள் இருண்டன. வெகு சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

எழுதியது யார் என்று பார்த்தான்.

ஊர் இல்லை. பேர் இல்லை. தேதியில்லை. ''உன் நலம் நாடும் உண்மை விளம்பி'' என்பதைத் தவிர, எழுதியவரைப் பற்றிய எவ்விதக் குறிப்பும் காணப்படவில்லை.

மொட்டைக் கடிதம்.

எவனோ பொட்டைப் பயல் எழுதியிருக்கிறான்.

இப்படிப்பட்ட கடிதங்களை நம்பக் கூடாது என்பார்கள் அறிவு சொல்லுகிறது. ஆனால், உள்ளம் கேட்கவில்லையே குளத்துள் சின்னக் கல்லைத் தூக்கிப் போட்டது போல மன பேதலிக்கிறதே!

அஞ்சல் முத்திரையைப் பார்த்தால் ஊராவது தெரியுமே எப்பொழுது அஞ்சலில் போடப்பட்டது என்ற விவர இருக்குமே!

அவன் கிழித்துப் போட்ட உறை அருகில்தான் கிடந்தது அதை எடுத்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.

சாணி தட்டியது போல் இருந்தது அஞ்சல் முத்திரை.

மிகவும் சிரமப்பட்டு ஓரிரு எழுத்துக்களைக் கண் பிடித்தான். அவை இந்தி எழுத்துக்கள் என்று தெரிந்தனவே தவிர, வேறு ஒன்றும் புரியவில்லை.

கடிதத்தில் எழுதப்பட்டு இருப்பதைத் தவிர, கடிதத்தை பற்றி எவ்வித விவரமும் தெரியவில்லை. தெரிந்து கொள் வழியும் இல்லை.

சரி, கடிதத்தில் எழுதப்பட்டு இருப்பது உண்மையா இருக்குமா?

அல்லி...

ஓராயிரம் ஊசியால் ஒரே நேரத்தில் குத்தப்பட்டது போ அவன் உடல் சிலிர்த்தது.

அல்லி—

பூவிதழ் என்று நினைத்தானே! புனிதமான பெண்மை என் போற்றினானே! அவனுக்காகவே பாதுகாக்கப்ப பெட்டகம் என்று மகிழ்ந்தானே அவள்...



அவனால் வேறு விதமாக நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. ஒரே நாளில் அவ்வளவு உயர்ந்த இடத்தில் அவனிடம் அவள் அமர்ந்து விட்டாள். முதலிரவில் அவளுடன் பின்னிப் பிணைந்தபொழுது, மறக்க முடியாத புதிய அனுபவமாக இருந்தது. ஆனால், அவள் எச்சில் இலையா? இன்னொருவர் சாப்பிட்டு எறிந்த இலையிலா அவன் சாப்பிட்டான்!

எச்சிலையைக் கழுவி விட்டால், என்ன வேறுபாடு தெரியும்?

ஓட்டலில் தேநீர் குடிக்கிறான். அதே கிண்ணத்தில் சற்று முன்கூட வேறு ஒருவன் தேநீர் குடித்துவிட்டுப் போயிருக்கக் கூடும். ஆனால் அந்தச் சுவடுகூடக் கிண்ணத்தில் தெரிவது இல்லையே.

சே சே! அல்லி எவ்வளவு உத்தமமான பெண்ணாகத் தோன்றுகிறாள். இனிய பேச்சும், கனிந்த பார்வையும், பணிந்த செயல்களும், கள்ளம் கபடமற்ற குறும்புகளும்... அவளா? இருக்கவே முடியாது.

எங்கோ படித்த ஒரு வாக்கியம் ஏனோ அப்பொழுது அவன் நினைவுக்கு வந்தது.

"எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியானவர்கள்தான்."

நல்லவள், கெட்டவள் என்பது எப்படித் தெரியும்?

அல்லி பிறந்தது, உயர்ந்த குடும்பம். பரம்பரையாகப் புகழ்பெற்றது. செல்வத்திலும் செல்வாக்கிலும் சிறந்தது. நல்ல பழக்க வழக்கங்களுடன் வளர்க்கப் பட்டவள். பட்டை தீட்டப்பட்ட வைரம் அவள். அந்த வைரத்திலும் கரும் புள்ளியா?

கல்லூரியில் படித்து பி.ஏ. பட்டம் பெற்றவள் அவள். இதை ஒரு சிறப்புத் தகுதியாக எடுத்துக் கொள்வதா? அல்லது, இது அவளை ஒரு படி கீழே இறக்குகிறதா?

கதைகளில் படிக்கிறான். கண் எதிரில் பார்க்கிறான். கையில் புத்தகங்களுடன் எவனோ ஒருவனுடன் கை கோத்துக் கொண்டு படம் பார்க்க வரும் பாவைகளைத் திரை அரங்குகளில் கவனித்து இருக்கிறானே! விளக்குகள் அணைந்து விட்டால் அவர்களே ஒரு படந்தான்!

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ, எப்படிச் சொல்ல முடியும்!

நெருப்பில் நிற்கச் சொல்ல முடியுமா? அல்லது மதுரையை எரிக்கச் சொல்ல முடியுமா? ''மழை பெய்யச் சொல் பார்ப்போம்!'' என்றுதான் ஏவ முடியுமா! இப்படியெல்லாம் எண்ணக் கூடாது என்றுதான் அவன் நினைத்தான். ஆனால், பாழும் உள்ளம் கேட்க மாட்டேன் என்கிறதே! சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போல அது ஆகிவிட்டதே.

அவசர அவசரமாகவா அவன் தலையில் அல்லியைக் கட்டினார்கள்?

நினைத்துப் பார்த்தால் ''ஆம்'' என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அவள் வீட்டாரே அவனைத் தேடி வந்தார்கள். அவனை மிகவும் பிடித்துவிட்டது என்றார்கள். நகை, தொகை பற்றிப் பேசினார்கள். எவ்விதப் பேரமும் இல்லாமல், இவன் அப்பா சொன்னதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அடுத்து வந்த முகூர்த்த நாளையே மணநாளாகக் குறித்தார்கள்.

''ஒரு மாதம்கூட இல்லையே...'' இவன் அப்பா கேட்டார்.



''எங்கள் பாடு அல்லவா? எங்களால் முடியும்!'' என்று சிரித்தார் அவள் அப்பா. ''பிடிடா வெற்றிலை பாக்கு, கொட்டுடா மேளத்தை!'' என்ற கதையாக எல்லாம் முடிந்து விட்டது.

அப்படியானால், கடிதத்தில் கண்டபடி, இது அவசரக் கல்யாணம்தானா?''

அவர்களுக்கு வசதி இருந்தது. அவனையும் பிடித்து இருந்தது. வீட்டிலேயே பந்தலைப் போட்டுத் திருமணத்தை நடத்தி விட்டார்கள்... அறிவு சொல்லுகிறது. ஆனால் மனம் வேறு மாதிரி நினைக்கிறதே.

''என் குழந்தை அவள் வயிற்றில் வளர்ந்து கொண்டு இருக்கிறது...''

நினைத்துப் பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. உள்ளத்தில் மின்னல், வயிற்றில் இடி, பயங்கரம், படு பயங்கரம்! அடிவயிற்றைப் புயல் கலக்கியது.

இது மட்டும் உண்மையாக இருந்தால், கடிதம் முழுவதுமே உண்மைதான்.

ஆனால், இதை எப்படிக் கண்டுபிடிப்பது?

முடியைப் பிய்த்துக் கொண்டான் மதியழகன்.

அல்லி வந்தாள். அதற்கு முன்பே அந்தக் கடிதத்தை அவன் பைக்குள் திணித்துக் கொண்டான்.

''காபி கொண்டு வரட்டுமா?'' குயில் கொஞ்சியது.

''கொண்டு வா... வேண்டாம்... சரி, தா... அதுக்குள் ளாகவா...'' அவன் தடுமாறினான்.

''வேறு எதுவும் போட்டீர்களா!'' அவள் கேலி செய்தாள்.

''வேறு என்ன...'' அவளுடன் சரியாகப் பேச அவனால் முடியவில்லை.

''காபியைக் குடித்துவிட்டுச் சீக்கிரம் கிளம்புங்கள். நாம் இருவரும் முதலில் கோவிலுக்குப் போக வேண்டுமாம். பிறகு சினிமாவுக்கு டிக்கெட் எடுத்து வைத்திருக்கிறார்கள்...''

''எந்தப் படம்?'' என்றுகூட அவன் கேட்கவில்லை பிள்ளையார் போல உட்கார்ந்து இருந்தான்.

அவளே தொடர்ந்து பேசினாள். ''காபி கொண்டு வரட்டுமா? முகத்தைக் கழுவிக் கொள்ளுகிறீர்களா?''

''காபி...''

அவன் சொல்லி முடிக்குமுன், ''காபியில்தான் முகம் கழுவுவீர்களா!'' என்று அவள் சிரித்தாள். சரியான வாயாடி போலிருக்கிறதே.

போய்க் காபி கொண்டு வந்தாள். ஒரு தட்டு நிறைய ஜாங்கிரி. இன்னொரு தட்டில் மிக்சர். ''எல்லாம் உங்களுக்குத்தான். சாப்பிடுங்கள்.''

அவன் சாப்பிடும் நிலையில் இல்லை. கொறித்தான் காபியைக் குடித்தான்.

''நீங்கள் தயார் ஆகுங்கள். அதற்குள் நானும் கிளம்பு கிறேன்.''

அவனுக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்து வைத்து விட்டு, அவள் போனாள்.

திரும்பி வந்த பொழுது அவள் புதுப் பெண் போல இருந்தாள். பட்டுச் சேலை சரசரத்தது. கழுத்து காய்த்து



தொங்கியது. கூந்தல் பூத்துக் குலுங்கியது. கைகளில் வளையல் சங்கீதம் பாடியது.

அவனோ லுங்கி, பனியனுடன் நின்றான்.

''என்ன, நீங்கள் இன்னும் புறப்படவில்லையா?''

''ஆமா, இதோ புறப்பட்டு விட்டேன்.''

அவள் வீட்டில் கார் இருந்தது. அந்தக் காரில் இருவரும் கோவிலுக்குப் போனார்கள். அல்லியின் தங்கை—ஏழு எட்டுவயதுத் தாமரை — அவர்களுடன் வந்தாள். காரில் இருவருக்கும் இடையில் அவளை அமர்த்திக் கொண்டான் மதியழகன்.

கோயிலில் சாமி கும்பிட்டார்கள்.

அங்கே யிருந்து நேராகத் திரையரங்கு. இங்கும் தாமரை நடுவில் அமர்ந்து கொண்டாள். ஒரு கிள்ளல்.. ஒரு சீண்டல்.. ஊகூம். எதுவும் கிடையாது. அல்லிக்குப் படம் பார்த்தது போலவே இல்லை!

மீண்டும் வீட்டுக்கு வந்தபொழுது சுடச்சுட மீன் குழம்பு இருந்தது.

நாலு கவளம் விழுங்கிவிட்டு மதியழகன் எழுந்து விட்டான்.

தங்கள் அறைக்கு வந்தான். கட்டிலில் அமர்ந்தான். மின் விசிறியைச் சுழல விட்டான். அப்படியும் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. ரோடு என்ஜின் போல அவன் உள்ளம் படபடவென்று அடித்துக் கொண்டது.

பால் செம்புடன் அல்லி வந்தாள்.

அவனைப் பார்த்துப் பொருள் நிறைந்த பார்வையுடன் புன்னகைத்தாள்.

கதவைத் தாழிட்டாள்.



## 5

இது இரண்டாவது இரவு.

முதல் இரவில் இருந்த நாணம், மோனம், குழைவு இப்பொழுது அல்லியிடம் காணப்படவில்லை. பகல் முழுவதும் அவனுடன் பழகியிருந்ததால், ஒருவித நட்புரிமை ஏற்பட்டு இருந்தது.

கதவு அடியில் அவள் நிற்க, அவன் கட்டிலில் இருந்து எழுந்து வந்து அவளை அழைத்துச் செல்ல வேண்டும், அணைத்துப் போக வேண்டும், அப்படியே அள்ளிக் கொள்ள வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவனை நோக்கிப் புன்னகைத்தபடி கட்டிலை நோக்கி அவளே நடந்தாள்.

முதல் இரவில் அவனிடம் காணப்பட்ட மோகமோ, தாகமோ, வேகமோ இப்பொழுது அவனிடம் தென்பட வில்லை. அவளது புன்னகைக்கு அவன் பதில் கூட அளிக்கவில்லை.

பகல் முழுவதும் அவளை அவன் சுற்றிச் சுற்றி வந்தான். அவள் தள்ளி விடவிட அவள்மீது அவன் பற்றிப் பற்றிப் படர்ந்தான். அவளே வந்திருக்கும் இப்பொழுது அவன் பாய்ந்து அணைத்துக் கொள்வான் — கைகளைச் சுற்றி வேய்ந்து மூச்சுத் திணற வைத்து விடுவான் என்று அவள் எதிர்பார்த்தாள்.



ஆனால், மதியழகனோ நடந்து வந்த அவளைச் சாதாரணமாகப் பார்த்தான். ஏதோ ஒன்றை அவளிடம் அவன் கண்கள் தேடுவது போலத் தோன்றியது.

அவளது நடையில் அவளது நடத்தையைத் தேடுகிறானோ!

உடையை நடையைக் கொண்டு ஒருவரை எடைபோட முடியுந்தான். ஆனால், பொதுவான அவரது போக்கினைக் காண முடியுமே தவிர, எப்பொழுதோ வழுக்கி விழுந்ததைக் காண முடியுமா, என்ன?

அல்லி வழுக்கி விழுந்தவளா?

அப்படியும் கொள்ளவும் முடியவில்லை. 'இருக்காது'' என்று தள்ளவும் முடியவில்லை!

மனிதனுக்கு ஒரு மனமா? இரு மனமா? உண்மையைச் சொன்னால், ஆயிரம் மனம்!

மனிதனின் மனமும் அறிவும் ஒன்றுபட்டுச் செயல்படுவது இல்லை.

செயல்பட்டால் அவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றவன் ஆகிறான். ஞானியாகவும் ஆகிவிடுகிறான்.

அல்லி வழுக்கி விழுந்தவள் என்று வைத்துக் கொண்டாலும், அவளுக்கு வெளிக்காயம் இல்லையே. உள் காயந்தானே! அது நடந்து வரும் அவளிடம் எப்படித் தெரியும்?

அதற்குள் அவள் அருகில் வந்துவிட்டாள்.

''என்ன, அப்படிப் பார்க்கிறீர்கள்?'' அவள் குவளை விழிகள் அவனைக் குறும்பாகப் பார்த்தன.

''ஒன்றும் இல்லை.''

அவனிடம் அவள் ஒரு காவியத்தை எதிர்பார்த்தாள் அவன், ''ஒன்றும் இல்லை,'' என்று சொன்னதும், அவளுக்[illegible] உப்புச் சப்பு இல்லாமல் போய்விட்டது.

''சரி, பாலைக் குடியுங்கள்!'' அவளும் ஒருவித[illegible] சலிப்புடன் அவனிடம் தம்ளரை நீட்டினாள்.

தம்ளரை வாங்கி வாயில் வைத்தவன், மடமட என்[illegible] குடித்து முடித்து விட்டுத் தான் வாயை எடுத்தான்.

காலித் தம்ளரை அவளிடம் நீட்டினான்.

அல்லி விழிகள் அகல ஆச்சரியத்துடன் அவனை[illegible] பார்த்தாள்.

அவளை அரவணைத்து, ''நீ குடி!'' என்று அவளுக்[illegible] ஊட்டிவிட வேண்டாம்; அவளுக்குக் கொஞ்சம் மீதியாவ[illegible] வைக்க வேண்டாமா?

இரண்டாவது இரவுக்குள்ளா ஆண்கள் இப்படி மாறி[illegible] போவார்கள்!

ஆண் இனத்தின் மீதே அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

தம்ளரை ''வெடுக்'' என்று வாங்கி அருகில் வைத்து விட்டு கட்டிலில் அமர்ந்தாள்.

அவன் அவளைப் பார்த்தான்.

அவளிடம் எதையோ தேடுவது போலத்தான் அந்[illegible] பார்வை இருந்ததே தவிர, அவளது அழகை - உருண்[illegible] திரண்டு தங்கக் கிண்ணம் போல இருந்த அவ[illegible] அங்கங்களைச் சுவைப்பதாகத் தெரியவில்லை.



அவள் தலை குனிந்தபடி அமர்ந்து இருந்தாள்.

முதல் இரவை அவள் மறந்து விடவில்லை. மறக்கக் கூடியதா அது? அனுபவமற்ற இரவு அது. அவளை அவன் அள்ளிப் பருகினானே தவிர, அவள் அவனுடன் இரண்டறக் கலந்து விடவில்லை. ''ஈத்துவக்கும் இன்பம்'' கண்டாளே தவிர, அவன் வண்டு ஆகி விடவில்லை. அவன் கையில் மலர்ச் செண்டாக மட்டுமே இருந்தாள்.

முதல் இரவு முன்னுரையாக இருக்க, இந்த இரண்டாவது இரவில்தான் உண்மையான இன்பக் காப்பியத்தை இருவருமாகச் சேர்ந்து படிக்கப் போகிறோம் என்று அவள் எதிர்பார்த்தாள். இன்றுதான் அவனது விளையாட்டுக்கு எல்லாம் அவள் ஈடு கொடுக்கப் போகிறாள். அவனோடு அவளும் விளையாடப் போகிறாள். அவன் மட்டுமே மீட்டிக்கொண்டு இருக்க அவள் வெறும் வீணையல்ல. அவள் கன்னத்தை அவன் கிள்ளினால், அவன் கன்னத்தை அவள் கிள்ளப் போகிறாள்! ஒரு நாளைக்குள் அவ்வளவு உரிமை அவளுக்கு வந்துவிட்டது.

திரை அரங்கிலேயே அவள் எவ்வளவோ எதிர்பார்த்தாள். விளக்குகள் அணைந்தன. படம் ஓடத் தொடங்கியதும் என்ன என்ன கூத்துக்களோ நடக்கும் — அவன் கை சும்மாவே இருக்காது; பிள்ளைப் பூச்சி போல அவளைக் குடைந்து கொண்டே இருப்பான்; அங்கே மன்மதன் அரங்கேறிக் கொண்டு இருப்பான் என்று அவள் கதைகளில் படித்து இருக்கிறாள். அதில் ஒன்றுகூட அங்கே நடக்கவில்லையே. அவள் தங்கை நந்திபோல நடுவில் வந்து அமர்ந்து விட்டாள். அங்கே விட்டுப் போனதை இங்கே வட்டியும் முதலுமாகத் தருவான் என்று எதிர்பார்த்தாள். அவனோ அவளைப் பார்வையால் அளந்து கொண்டு இருந்தான்.

அவள் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

என்னதான் செய்கிறான் என்று பார்ப்போமே என்று குனிந் தலை நிமிராமல் சிலையாக இருந்தாள்.

அவன் ஒன்றும் செய்யவில்லை. சிறிது நேரத்தி பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

ஏன்?

அவளுக்குத் திகில் ஏற்பட்டது.

இந்நேரம் அவளை அணைத்து, பிணைத்து, கடித் சுவைத்து, பாலிலே தண்ணீர் கலந்தது போல, பான அவளுடன் இரண்டறக் கலந்திருக்க வேண்டியவ எதையோ பறிகொடுத்தவன் போல, அவளை வெறித்து பார்ப்பதும், விலகியிருப்பதும் ஏன்?

''உடம்பு சரியில்லையா?''

பரிவுடன் அவன் கைகளைப் பற்றினாள். பாசத்துட அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை!'' அவன் அவள் கைகள் இருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்டான்.

''பிறகு ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?''

''நன்றாகத்தான் இருக்கிறேன்.''

''இல்லை. உங்கள் முகம் வாட்டமாக இருக்கிறது.''

''இல்லை, இல்லை. தூக்கம் வருகிறது. பகலில் தூங்க இல்லையே.''

தூக்கம் வருகிறதாமே! சே! என்ன மனிதர்!

தூக்கம் வருகிற மனிதனை அவள்தான் தூங்கவிடாமல் பிடித்து வைத்துக் கொண்டு இருப்பதாக இனிச் சொல்வானோ!

அவளுக்குக் கோபம் வந்தது.

''தூக்கம் வந்தால் தூங்க வேண்டியதுதானே?''

அவள் குரல் சற்று உரக்க ஒலித்தது.

அவனுக்கு முன்னே அவள் படுத்து விட்டாள்.

விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மலர்ந்த தாமரை போல அவள் கட்டிலில் கிடந்தாள்.

கண்களை மூடிக் கொண்டாள்.

அழகு தூங்குவது போல இருந்தது.

சுருண்ட கூந்தல், பரந்த நெற்றி, கறுப்புப் புருவம், சிவந்த ஆப்பிள் கன்னம், ஆரஞ்சு அதரம், நீண்ட மூக்கு, கொடியிடை, பட்டுச் சேலை, பளிங்குச் சிலை போலக் கிடந்தாள். மார்புச் சேலை சற்று நழுவிக் கிடக்க, மாம்பழங்கள் எட்டிப் பார்க்க... மதியழகன் பெருமூச்சு விட்டான்.

அவன் கைகளை அந்தக் கடிதம் கட்டிப் போட்டு விட்டதே.

அவளைத் தொடக்கூட அவனுக்குத் தயக்கமாக இருந்தது.

அவளைத் தொடாவிட்டால், ''ஏன்?'' என்று அவள் கேட்பாளே; என்ன பதில் சொல்வது? அச்சமாகவும் இருந்தது.

உண்மை உறுதியாகத் தெரியுமுன் அவளிடம் வாய் திறக்க முடியாது. திறக்கவும் கூடாது. அதே நேரம் அவளுடன் உறவாடவும் அவனுக்கு உளம் இல்லை.

திடீர் என்று அவள் கண்களைத் திறந்தாள்.

''தூக்கம் வருகிறது என்றால் விளக்கை அணைத்துவிட்( படுக்க வேண்டியதுதானே?''

முகம் சிவக்கக் கூவிக்கொண்டே எழுந்து அமர்ந்தாள்.

''கோபமா அல்லி?'' அவன் குழைவாகக் கேட்டான்.

''உங்களைப் பார்த்தால்தான் கோபித்துக் கொண் இருப்பவர் போலத் தெரிகிறது.''

''கோபமா? உன் மேலா? சே... சே...''

''பிறகு யார் மீது?''

''ஆ..!''

வயிற்றைப் பிடித்துக் கொண்டான் மதியழகன்.

''என்னங்க?'' அவள் பதைத்துப் போனாள். கட்டி அமர்ந்து இருந்தவள் துள்ளி எழுந்து அவன் அரு நின்றாள்.

''வயிற்றை வலிக்கிறது!'' அவன் முனகினான்.

''ஏன்?... உங்களுக்கு அடிக்கடி வயிற்றுவலி வருமா அவள் முகத்தில் அச்சம் படர்ந்தது.

''இல்லை, இல்லை. இன்று சாப்பாடு அளவுக்கு விட்டது.

''அதுதானா?'' அவள் முகம் தெளிவு பெற்றது. ''சோ வாங்கி வரச் சொல்லட்டுமா?''

''வேண்டாம்.''

''ஏதாவது மாத்திரை...''

''இந்நேரம் ஊரைக் கூட்டிக் கலாட்டா பண்ணி விடாதே. ாலையில் பார்த்துக் கொள்வோம். அதற்குள் சரியாகி விடும்.''

''வயிற்றைத் தடவி விடட்டுமா?''

''வேண்டாம். தூங்கினால் சரியாகி விடும்'' அவன் குப்புறப் டுத்துக் கொண்டான்.

அவளிடம் இன்ப எண்ணங்கள் செத்துவிட்டன. அவனைப் ற்றிய கவலை மேலோங்கியது. அவனது பரந்த முதுகும், பிரிந்த தோள்களும் அவளைக் கவர்ந்தன. அவன் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்தாள். அதுவே அவனுக்கு ஒரு கமாக இருந்தது.

அவன் அதை விரும்பவில்லை. ஆனாலும், அவளைத் ள்ளிவிட அவனால் முடியவில்லை.

வெகு நேரம் அவன் முதுகை அவள் தடவிக் கொண்டு இருந்தாள். அவன் முதுகில் தலை வைத்துச் சாய்ந்தவள், அப்படியே தூங்கிப் போனாள்.



## 6

திடீரென்று விழித்துக் கொண்டான் மதியழகன்.

விழித்ததும் அல்லியைத்தான் திரும்பிப் பார்த்தான்.

அவனுக்குப் பக்கத்தில் அவள் படுத்துக் கிடந்தாள்.

படுத்து இருந்தாள் என்பதைவிட, விழுந்து கிடந்தாள் என்பதே சரியாக இருக்கும். அவன் முதுகில் தலை வைத்துப் படுத்த அவள், எப்படியோ தூங்கி, தூக்கத்திலேயே புரண்டு

மல்லாந்து விழுந்து கிடந்தாள். விடிவிளக்கு எரிந்து கொண்
இருந்தது.

மணி என்ன இருக்கும்?

அருகில் கழற்றி வைத்து இருந்த கைக் கடிகாரத்
எடுத்துப் பார்த்தான்.

சின்ன முள் மூன்றைத் தாண்டிவிட்டது.

இன்னும் இரண்டு, மூன்று மணி நேரத்துக்குள் கதிரவ
கண் விழித்துக் கொள்வான்.

அல்லி கிடப்பதைப் பார்த்தால், அதற்குள் விழிப்பா
என்று எதிர்பார்ப்பதற்கே இல்லை.

ஆக, அவளால் இந்த இரவில் ஆபத்து இல்லை.

மதியழகனுக்குச் சிறிது நிம்மதியாக இருந்தது.

வயிற்று வலி என்று நடித்து, இன்றைய இரவு அவ
ஏமாற்றியாகி விட்டது.

நாளைய இரவு?

அடுத்து அடுத்து வர இருக்கும் இரவுகளில்...?

இரவில் ஏற்படும் உறவு மட்டுமா? பகலில் ஏற்ப
நெருக்கம்? எப்படிச் சமாளிப்பது?

அவளைச் சும்மா தொடக்கூட அவனுக்கு விருப்
இல்லை.

அதே நேரம், அவன் விலகிச் செல்வதையும் அவள் அறி
கூடாது; உணரக் கூடாது.





நெருப்பை மூட்டிக் குளிர் காய்வது போல அவன் நடந்து கொள்ள வேண்டியிருந்தது.

இது மொட்டைக் கடிதம். எனவே, சட்டென்று ஒரு முடிவுக்கு வர முடியாது. வரவும் கூடாது.

பாவம், இது ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பிரச்சினை. பெண் பாவம் பொல்லாததாமே!

பாவம் புண்ணியம் கிடக்கட்டும்; ஒரு பெண்ணுக்குப் பழி ஏற்பட்டு விட்டது என்றால், அது வழி வழியாக வருமே. ஆகவே அதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்தக் கடிதம் உண்மையாக இருக்கும் என்றால், அடுத்த நடவடிக்கை எடுப்பது சிரமமான ஒன்று அல்ல. ''உனக்கும் எனக்கும் உறவு அறுந்துவிட்டது. ஓடிப்போ உன் அம்மா வீட்டுக்கு!'' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ள வெகு நேரம் ஆகாது.

ஆனால், இது தலையும் வாலும் இல்லாத வெறும் மொட்டைக் கடிதம் என்று உறுதியாகி விட்டால், அவள் முகத்தில் எப்படி விழிப்பது? இவனையும் ஒரு மனிதன் என்று அவள் மதிப்பாளா? கணவன் என்ற மரியாதை அளிப்பாளா? ''சே! நீயும் ஒரு மனிதனா?'' என்று கேட்க எவ்வளவு நேரம் ஆகும்! அதன்பின் அவர்களின் உறவு சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் போல ஒட்டாது போய் விடுமே! அதைவிடப் பெரிய நரகம் என்று ஒன்று இருக்குமா என்ன?

ஆனால் இந்தக் கடிதம் உண்மையானதா, அல்லது கெட்ட எண்ணத்துடன் எவனோ ஒருவன் விட்டெறிந்த கல்லா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததை விட சிரமமானதாக இருக்கலாம்! ஆனால், கண்டுபிடித்தே ஆ வேண்டுமே! அதில்தானே அவனது இல்லறமே இருக்கிறத கண்டுபிடிக்காவிட்டால், அவனுக்கு அமைதி ஏது? உறக்க ஏது? நடமாடும் பிணம் ஆகிவிடுவானே!

ஆனால், மெய் பொய்யை எப்படி அறிவது?

அல்லியைத் திரும்பிப் பார்த்தான் அவன்.

தொட்டிலில் தூங்கும் குழந்தை போல, கொஞ்சம்கூட களங்கம் இல்லாமல், சலனம் இல்லாமல், அவள் தூங்கி கொண்டு இருந்தாள்.

''பால் வடியும் முகம்'' என்பார்களே, அப்படியிருந்த அவள் முகம்.

இவ்வளவு பெரிய தவறைச் செய்துவிட்டு, இவ்வள நிம்மதியாக—தாலி கட்டியவனுக்கு அருகிலேயே ஒ பெண்ணால் எப்படித் தூங்க முடியும்?

அவள் உடலில் ஏதாவது களங்கம் தெரிகிறதா?

உச்சி முதல் உள்ளங்கால்வரை பார்த்தான்.

'எவர்சில்வர்' பாத்திரம் என்றாலாவது கைதவறிக் கீ விழுந்தால் சொட்டையிருக்கும். எலும்பும் தோலுமா பெண்ணிடம் என்ன மாறுதல் இருக்கும்!

அவளது மார்புச் சேலை விலகிக் கிடந்தது. கனிந் வாழைப் பூவாக அது காணப்படவில்லை. காயாக, மலர தாமரை மொட்டாக - கட்டாக இருந்தது.

அவள் வயிற்றில் ஒரு குழந்தை வளர்ந்து கொண் இருப்பதாகக் கடிதத்தில் இருந்ததே?



வயிற்றைப் பார்த்தான்.

மடித்து வைத்த பட்டுச் சேலை போல, மடிப்புகளுடன் அழகாக இருந்தது. அடி வயிற்றில் இரு ஓரங்களிலும் ஒயிலான பள்ளம். ''பாவம்! வீட்டில் சாப்பாடு போட மாட்டார்கள் போலிருக்கிறதே!'' என்று பரிதாபப்படும் அளவுக்கு வயிறு ஒட்டிக் குழி விழுந்து கிடந்தது.

அவளிடமே கேட்டுவிட்டால் என்ன?

அதைவிட வேறு விபரீதமே வேண்டாம்!

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்ததுபோல ஆகிவிடக் கூடாதே!

முள்ளில் விழுந்த பட்டுச் சேலை இது. கிழியாதபடி கவனமாக எடுக்க வேண்டும்.

அதற்கு எத்தனை நாள் ஆகுமோ!

ஆனால், அதுவரை இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதான்!

''வயிற்றை வலிக்கிறது!'' என்று மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் கூடச் சொல்லிக் கொண்டு இருக்கலாம்! வைத்தியர்களால் கூடக் கண்டுபிடிக்க முடியாது.

ஒரு பத்துநாள் மாமியார் வீட்டுச் சாப்பாடு. பிறகு அவனது வீட்டுக்குப் போய் விடுவார்கள். அங்கே ஓர் இருபது நாள். அவனது விடுப்பு முடிந்து விடும். அதன்பின் வேலைக்குப் போக வேண்டும். அங்கே வீடு பார்ப்பதாக இரண்டு மூன்று மாதத்தைக் கடத்திவிடலாம். இதற்குள் அவள் வயிற்றில் குழந்தை வளர்கிறதா இல்லையா என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிடும்.

இப்படி ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டான் மதியழக இதை அசை போட்டுக் கொண்டு இருந்தவன் அப்படி தூங்கிப் போனான்.

மீண்டும் அவன் கண் விழித்த பொழுது கதிரவனின் ஒ அந்த அறை முழுவதும் பரவியிருந்தது. அவன் அருகி அல்லி அமர்ந்து இருந்தாள். அவன் கண் மலர்ந்ததும், அவ முகம் மலர்ந்தாள்.

''இரவில் நன்றாகத் தூங்கினீர்களா?'' பரிவுடன் கேட்டா

''ஆமாம்,'' என்றான் அவன்.

'''வயிற்று வலி சரியாகி விட்டதா?''

அவன் வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டா ''சரியாகி விட்டது போலிருக்கிறது.''

''எழுகிறீர்களா? நான் காப்பி கொண்டு வருகிறேன்.''

''சரி,'' என்று அவன் பல் துலக்கச் சென்றான்.

அவன் திரும்பி வருமுன் அவள் காபியுடன் நின்றாள்.

மாமனார் வந்தார். ''நேற்று இரவு வயிற்று வலியாமே மிகவும் அக்கறையுடன் விசாரித்தார்.

''இப்பொழுது சரியாகி விட்டது!'' அவன் அச வழிந்தான்.

''ஒரு சோடா குடித்து இருந்தால் அப்பொழுதே சரியா யிருக்கும்.''

''இரவு நேரத்தில் உங்களையெல்லாம் தொல்லைப்படு வேண்டாம் என்றுதான்...''



''இதில் என்ன தொல்லை? பக்கத்துக் கடையிலேயே சோடா விற்கிறது. இன்று தயாராக வாங்கி வைத்து விடுகிறேன். அதற்காகச் சாப்பாட்டைக் குறைத்து விடாதீர்கள். நன்றாகச் சாப்பிடுங்கள்.''

வேடிக்கையாகப் பேசிவிட்டது போலச் சிரித்துக் கொண்டே மாமனார் போனார்.

அவன் குளிப்பதற்கு அல்லி ஏற்பாடு செய்தாள்.

குளித்து முடித்ததும் சாப்பாடு. எண்ணெய் வேண்டாம் என்பதற்காக மாமியார் தோசை வார்க்கவில்லை. பூப்போன்ற இட்லி. கணவனுக்குப் பொடி போடும் வாய்ப்பையும் இழந்தாள் அல்லி. பொடி போட்டால் எண்ணெய் விட்டுக் கொள்ள வேண்டுமே? எனவே பொடி வேண்டாம் என்று சொல்லி விட்டார் மாமியார். சட்னி கூட இரண்டு மிளகாய் குறைத்து வைத்துத்தான் அரைத்து இருந்தார்.

சாப்பாடு முடிந்ததும் எங்கள் வீடுவரை போய் வருகிறேன் என்று மதியழகன் கிளம்பினான்.

''நானும் வரட்டுமா?'' அல்லி கேட்டாள்.

அவள் முதல் நாள் மறுவீடு போய் வந்ததுதான். நேற்றுக்கூடச் செல்லவில்லை.

''எதற்கு? நான் மட்டும் போய் வந்துவிடுகிறேன்,'' என்றான் அவன்.

அல்லி போய் அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தாள். ''மதியம் சாப்பிட இங்கே வந்துவிட வேண்டுமாம். அம்மா சொன்னார்கள்.''

''சரி,'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

வாசல்வரை அவனை வழி அனுப்பி வைத்தாள் அல்லி.

அவன் திரும்பிப் பார்க்கக் கூடும் என்ற நப்பாசையுட தெருக் கோடியில் அவன் தலை மறையும் வரை வாசலி நின்றாள் அவள். ஆனால், அவன் முன் வைத்த காலைப் பி வைக்காமல் நடந்தான்.

படுக்கையை ஒதுக்க, அவள் தங்கள் அறைக்கு வந்தாள்

அப்பொழுதுதான் அவளுக்குச் சட் என்று ஒரு நினை வந்தது.

நேற்றுக் காலையில் சாப்பிடும்பொழுது அவன் எவ்வள வம்பு செய்தான். எப்படியெல்லாம் குறும்பு பண்ணினான் இன்று ஒன்றுமே இல்லையே, நல்ல பிள்ளையாகச் சாப்பிட் விட்டுப் போய்விட்டானே. இத்தனைக்கும் நேற்று இரவு வே ''பட்டினி.''

அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. இதுதா வாடிக்கையோ என்று எண்ணிக் கொண்டாள். தான்தா கற்பனை செய்கிறோமோ என்று நினைத்துக் கொண் படுக்கை விரிப்பை மாற்றினாள்.

தனிமையில் இருக்க அவளுக்கு என்னவோ போ இருந்தது. பேசாமல் படுத்துவிட்டாள்.

அவள் விழித்து எழுந்தபொழுது மணி ஒன்று.

''அவர் வந்தாரா அம்மா?'' அன்னையிடம் போய் கேட்டாள்.

''எல்லாம் ஆறி அவலாகிக் கொண்டு இருக்கிறது. இன்னு காணோமே!'' தாய் பெருமூச்சு விட்டாள்.

அல்லி வாசலைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

மணி இரண்டு...

இரண்டே கால்...

இரண்டரை...

இரண்டே முக்கால்...

மூன்றும் ஆகிவிட்டது.

அவன் வரவேயில்லை!



## 7

வீட்டுக்கு வந்ததும் மதியழகன் நன்றாகத் தூங்கி விட்டான்.

''புது மாப்பிள்ளை இரவில் தூங்கினானோ இல்லையோ!'' யாரும் அவனை எழுப்ப முயற்சி செய்யவில்லை.

மணி ஒன்று.

''மதியழகனை எழுப்பி விடக்கூடாது?'' அவனுடைய அப்பா கேட்டார்.

''அயர்ந்து தூங்கிக் கொண்டு இருக்கிறானே!'' அம்மா சொன்னார்.

''சாப்பிட வேண்டாம்?''

''கொஞ்சம் பார்ப்போம்.''

இரண்டு மணிக்கு அவனே எழுந்து வந்தான்.

''அம்மா, நம்ம வீட்டில் இன்று என்ன சமையல்?''

''ஏன், அங்கே சாப்பிடப் போகவில்லையா?''

''சாப்பாட்டுக்காக அங்கே போக வேண்டுமா?''

''அப்படி அல்லப்பா. உனக்காகச் சமையல் செய் வைத்துக் கொண்டு காத்துக் கொண்டு இருப்பார்கே அல்லிகூட உனக்காகச் சாப்பிடாமல் காத்துக் கொண் இருப்பாள்.''

''எனக்குப் பசிக்கிறது. சாப்பாடு தருகிறீர்களா இல்லையா?''

பிள்ளை ''பசிக்கிறது'' என்றால் எந்தத் தாய்தான் தாங்கி கொள்வாள்? ''சாப்பிட வா, நம்ம வீட்டிலும் இன்று மீ குழம்புதான்.''

சாப்பிட்டதும் மதியழகன் மீண்டும் படுக்கச் சென்றான்.

''அங்கே போகவில்லையா?'' அம்மா கேட்டார்.

''அங்கே போய் என்ன செய்யப் போகிறேன்? படுத்து தூங்கத்தான் வேண்டும். அதற்காக இந்த வெயிலி அவ்வளவு தூரம்போக வேண்டுமா? இங்கேயே இன்னும் ஒ தூக்கம் போட்டுவிட்டு வெயில் இறங்கியதும் போகிறேன்.''

படுத்துக் கொண்டான்.

பழைய சிந்தனைகள்.

அந்தக் கடிதம் உண்மையானதா? பொய்யானதா?

பொய்யானது என்றால், யார் எழுதியது? ஏன் எழுதியது

அவனுக்கு எதிரி என்று யாரும் இல்லை.

அல்லிக்கு?



அவள்மீது எவனாவது ஆசைப்பட்டு இருக்கலாம். அதற்கு அவள் இடம் கொடுக்க மறுத்து இருக்கலாம். அதனால் ஆத்திரம் அடைந்து, அவளது வாழ்க்கையை அழிக்க அவன் எழுதிய கடிதமாக இருக்கலாம்.

அல்லது, அவளை எவனாவது காதலித்து இருக்கலாம். அந்தக் காதலுக்கு அல்லியின் வீட்டில் எதிர்ப்பு ஏற்பட்டு இருக்கலாம். அவர்கள் அவளது திருமணத்தை நடத்தி யிருக்கலாம். இதனால் ஏமாற்றம் அடைந்த அந்த 'மஜ்னு' இந்தக் கடிதத்தை எழுதியிருக்கலாம்.

அவளது வாழ்க்கையைக் கெடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கடிதம் எழுதப்பட்டு இருக்க வேண்டும். எழுதியது யார்? ஏன் எழுதினான்? இதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

அதற்கு முன்—

அவள் அணில் கடித்த பழமா?

வண்டு வந்து அமர்ந்து, அந்த மகரந்தச் சேர்க்கையால் அவள் வயிற்றில் பிஞ்சு பிடித்து இருக்கிறதா?

இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எப்படித் தெரிந்து கொள்வது?

மூளையைக் குழப்பிக் கொண்டே தூங்கிப் போனான்.

ஆனால், ஆழ்ந்த தூக்கம் அல்ல, நாலு மணிக்குள் விழித்துக் கொண்டான்.

''அம்மா! தலையை வலிப்பது போல இருக்கிறது. காபி கொடுங்களேன்.''

"ஏன் தலையை வலிக்கிறது?"

"தெரியவில்லை."

"ஏதாவது மாத்திரை வேண்டுமா?"

"வேண்டாம் அம்மா. சூடா ஒரு தம்ளர் காபி சாப்பிட்ட சரியாகி விடும்."

அம்மா காபி கலந்து கொடுக்க, அவன் பருகினான். அ பின்பு கொஞ்சம் தெளிவாக இருந்தது.

"மீண்டும் படுத்துக் கொண்டு விடாதே. அங்கே அ உனக்காகக் காத்துக் கொண்டு இருப்பாள். புறப்ப வெயிலும் இறங்கி விட்டது."

"அங்கேதான் போகப் போகிறேன் அம்மா."

மதியழகன் முகத்தைக் கழுவி வெள்ளை அடித் கொண்டு கிளம்பினான்.

திடீர் என்று ஓர் எண்ணம்.

இவனது போக்கில் ஏதோ ஒரு மாறுதல் ஏற்ப இருக்கிறதே என்று அல்லி ஐயப்பட்டு விடக்கூடாதே என நினைத்தான்.

ஐந்து முழம் மல்லிகை வாங்கினான்.

அரைக் கிலோ திருநெல்வேலி அல்வா.

மணக்க மணக்க மாமனார் வீட்டுக்குத் திரும்பினான்.

அவனைப் பார்த்ததும் அல்லி பெரிதாக மகிழ் போனாள்.

அதுவும் அவன் பூ வாங்கி வந்ததில் அவள் பூரித் போனாள்.



"ஏன் மதியச் சாப்பாட்டுக்கு வரவில்லை? உங்களுக்காக மூன்று மணிவரை எல்லோரும் சாப்பிடாமல் காத்து இருந்தோம்."

"வீட்டுக்குப் போனதும் நன்றாகத் தூங்கி விட்டேன். எழுந்ததும் பசி. சாப்பிட்டு விட்டு மீண்டும் படுத்துக் கொண்டேன்."

"சிற்றுண்டி எடுத்து வருகிறேன்."

அவனை அறையில் அமரச் செய்துவிட்டு, அவள் அடுப்படிக்கு வந்தாள்.

ஜாங்கிரி, மிக்சர், காபி எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

அவன் மறுப்புச் சொல்லாமல் சாப்பிட்டான்.

மன்மதன் தேர் ஏறி வரும் மாலை நேரம். தனி அறைக்குள் இருப்பதா? ஆபத்து ஆயிற்றே!

"அல்லி! பொருட்காட்சி நடக்கிறதே... போய்ப் பார்த்து விட்டு வரலாமா?"

"ஓ!"

அவள் உற்சாகமாகக் கிளம்பினாள்.

இருவரும் முகத்தைக் கழுவி ஒப்பனை செய்து, உடை மாற்றிக் கொண்டார்கள்.

அவன் வாங்கி வந்த பூவை அல்லி அவன் கையிலேயே கொடுத்தாள்.

"ஏன்?" அவன் விழித்தான்.

அவள் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, அவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றாள்.

ஓ, அவள் கூந்தலில் அவன் சூடிவிட வேண்டுமா!

அவளுக்கு ஆசை இருக்காதா என்ன!

அவன் தயங்கினான்.

ஏன் பூ வாங்கிக் கொண்டு வந்தோம் என்று வருந்தினான்.

"உங்களுக்கு ஆசை இல்லையா? உங்களைப் பார்த்தால் புது மாப்பிள்ளை போலவே இல்லை!"

அவளது உளக் குமுறலை அவள் மறைவாக வெளியிட்டாள்.

அவன் துணுக்குற்றாலும் சமாளித்துக் கொண்டான்.

"இல்லை. எனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லாதது..." என்று மென்று விழுங்கினான்.

"திருமணம் ஆகிவிட்டால், எல்லாம் பழகிக் கொள்ள வேண்டியதுதான்!" அவள் கேலி செய்தாள். "உம்... வையுங்கள்!" அவள் விடவில்லை.

அவன் வேண்டா வெறுப்பாக அவள் கார் கூந்தலில் பூவைச் செருகினான்.

"போவோமா?" அல்லி தன்னை ஒருமுறை கண்ணாடியில் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"மீனா எங்கே?" அவளுடைய தங்கையைத் தேடினான் மதியழகன்.

"மீனா எதற்கு?" எதிர்ப்புக் குரலுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.

"கட்டுச் சோற்றுக்குள் பெருச்சாளியை வைத்துக் கட்டினானாம்!" அவள் பார்வை சொல்லாமல் சொல்லியது.

1059
நாந்துக்குடி



"அவளையும் அழைத்துக் கொண்டு போகலாமே?" அவளது எதிர்ப்பை அவன் பொருட்படுத்தவில்லை.

அதற்குள் அவளுடைய அம்மாவே மீனாவைத் தயார்ப் படுத்திவிட்டாள். "அக்கா! நானும் வருகிறேன்!" என்று அவள் கன்றுபோல் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடி வந்தாள்.

புதுப் பெண்ணைத் தனியாக வெளியில் அனுப்பக் கூடாதாம். ஒரு "வால்" கூடவே போக வேண்டுமாம். புது மாப்பிள்ளை மீது அவ்வளவு நம்பிக்கை.

வீட்டுக்குத் திரும்ப ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது.

அல்லி சாப்பாடு எடுத்து வைத்தாள்.

சாப்பிட்டு விட்டு மதியழகன் தங்கள் அறைக்குப் போனான்.

அதன் பின் அல்லி சாப்பாட்டை முடித்துக் கொண்டு அவனுக்கு ஒரு தம்ளர் பால் எடுத்துக் கொண்டு அறைக்கு வந்தாள்.

அவன் குப்புறப் படுத்து இருந்தான்.

அவள் கதவைத் தாழிட்டு விட்டு அருகில் வந்தாள்.

"தூக்கமா? பாலைக் குடித்துவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள்."

"அம்மா... அப்பா!" அவன் முனகினான்.

"என்னங்க...?" அவள் பயந்து போனாள்.

"வயிற்றை வலிக்கிறது!" அவன் புழுப் போலத் துடித்தான்.

"அப்பாவை அழைக்கட்டுமா?" அவள் அச்சத்துடன் கேட்டாள்.

"வேண்டாம்!" என்றான் அவன். "நீ எங்கேயும் போகாதே என் பக்கத்திலேயே இரு!" அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

"உங்களுக்கு அடிக்கடி வயிற்று வலி வருமா?"

"இல்லை. இந்த இரண்டு நாளாகத்தான் வருகிறது. ஏன் என்றே தெரியவில்லை."

அவள் அவன் வயிற்றைத் தடவிக் கொடுத்தாள்.

"இப்பொழுது பரவாயில்லை."

படுத்துக்கொண்ட அவன் அப்படியே தூங்கிப் போனான்.

அவளும் தலையணையில் சாய்ந்தாள்.

"பொல பொல" என்று பொங்கி வந்த கண்ணீர் தலையணையை நனைத்தது.



## 8

பொழுது இன்னும் புலரவில்லை.

மதியழகன் விழித்துக் கொண்டான்.

விடிவிளக்கு எரிந்து கொண்டு இருந்தது.

எழுந்து அமர்ந்து பக்கத்தில் பார்த்தான்.

அவன் எழுந்ததும், அல்லியும் எழுந்து கொண்டாள்.

எருமை கலக்கிய குளம் போல அவள் எழில் கண்கள் இருந்தன. கலங்கி சிவந்து காணப்பட்டன.



"இரவில் தூங்கவில்லையா?" அவன் பரிவுடன் கேட்டான்.

"இல்லை," என்பது போல அவள் தலையை அசைத்தாள்.

"ஏன்?"

அவளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

இரவு முழுக்க அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. வாய்விட்டு அழ முடியாது. கண்ணீரை மட்டும் சிந்தினாள். மற்றப்படி ஏன் அழுதாள் என்று அவளுக்கே தெரியாது.

அவன் வயிற்று வலியால் துடித்தான். அவனுக்காக அவள் அனுதாபப்பட்டாள்.

திருமணம் என்றதும் அவள் எவ்வளவோ இன்பக் கனவுகள் கண்டாள். அவள் தோழிகள் வேறு விசிறிவிட்டு இருந்தார்கள். கதைகளில் படித்ததை, திரைப்படங்களில் பார்த்ததை அனுபவிக்கப் போகிறோம் என்று அகமகிழ்ந்து கொண்டு இருந்தாள். உள்ளூர ஓர் இன்ப ஊற்று சுரந்து கொண்டு இருந்தது. ஒரே நாளில் அது வரண்டுவிட்டதே!

பகல் முழுக்க அவளைத் தனிமையில் விட்டு விட்டு, அம்மா வீட்டுக்குப் போய்விட்டான். மாலையில் வந்தான். "பொருட்காட்சிக்குப் போகலாமே!" என்று அவனே அழைத்தான். அவள் குதூகலத்தில் துள்ளிக் குதித்தாள். புறப்படும்பொழுது, அவள் தங்கை மீனாவையும் அவன் அழைத்துக் கொண்டான்.

பொருட்காட்சி முழுக்க மீனாவின் கையைப் பற்றிக் கொண்டு சுற்றினான். அவளுக்கு வளையல், காதணி வாங்கிக் கொடுத்தான். பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள்

வாங்கித் தந்தான். ஐஸ்கிரீம், முறுக்கு, சுண்டல்... ஊட்டிவிடாத குறைதான். குழந்தைகள் ரெயிலில் அவளுடன் ஏறிக்கொண்டு மூன்று சுற்று சுற்றினான். இவள் ஒருத்தி உடன் வந்ததை மறந்தே விட்டான்.

வீட்டுக்கு வந்ததும், வயிற்றுவலி என்று குப்புறப்படுத்துக் கொண்டான்.

அவள் அழாமல் என்ன செய்வாள்?

ஆனால், இதையெல்லாம் வாய் திறந்து அவளால் சொல்ல முடியவில்லை.

''நோயாளியான ஒருவனை நம் தலையில் கட்டி விட்டார்களே என்று வேதனைப்படுகிறாயா அல்லி?'' அவன் துயரத்துடன் கேட்டான்.

''அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!'' அவன் வாயைப் பொத்தினாள் அவள்.

''உங்களை அடைய நான் தவம் செய்திருக்க வேண்டும்.''

''அல்லி! என்னை நம்பு. நான் உண்மையாகச் சொல்லுகிறேன். விவரம் தெரிந்த நாளில் இருந்து எனக்கு வயிற்று வலியே வந்தது இல்லை. இந்த இரண்டு நாளாகத்தான் வருகிறது.''

''டாக்டரிடம் பார்க்கலாமா?''

''எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு டாக்டர் இருக்கிறார். அவரிடம் போகலாம் என்று இருக்கிறேன்.''

''எங்கள் குடும்ப டாக்டர் கூட இருக்கிறார்.''



''இல்லை. அந்த டாக்டரை எனக்குத் தெரியும். உன் அம்மா அப்பாவிடம் இப்பொழுது ஒன்றும் சொல்லிவிடாதே. அவர்கள் வீணாகக் கவலைப்படப் போகிறார்கள்.''

''சொல்லவில்லை.''

''இது நமக்குள் இருக்கட்டும்.''

அவன் இல்லறம் நடத்தவில்லை என்பது வெளியில் தெரிய வேண்டாம் என்று அவன் நினைத்தான்.

தன் கணவன் நோயாளி என்று எந்தப் பெண்தான் வெளியில் சொல்ல விரும்புவாள்? எனவே அவள் தலையை ஆட்டினாள்.

அறைக் கதவைத் திறக்க இன்னும் நேரம் இருந்தது. அவர்கள் ஏதோ பேசிக்கொண்டு இருந்தார்கள். திடீர் என்று அவன் பேச்சைத் திருப்பினான்.

''ஆமாம், நீ எந்தக் கல்லூரியில் படித்தாய்? முதல் நாளே கேட்க வேண்டும் என்று இருந்தேன்.''

''ஏன் கேட்கவில்லை?''

''அன்றைக்குப் பேச்சு வேறு எங்கோ போய்விட்டது.''

''நான்கூடச் சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தேன்.''

''ஏன் சொல்லவில்லையாம்?''

''நீங்கள்தான் என் வாயைத் திறக்கவே விடவில்லையே.''

அவன் வாயைக் கொண்டு அவள் அதரங்களை அசைக்க முடியாமல் செய்து விட்டான் அவன். அப்பொழுது சுகமாகத்தான் இருந்தது. இப்பொழுது உள்ளத்தில் ஊசியால் குத்தியது போல இருந்தது அவனுக்கு.

ஒரு கணம் கழித்துக் கேட்டான். ''இப்பொழுதுதான் சொல்லேன்.''

''மேரி அரசி கல்லூரியில்.''

''அது கடற்கரையில் அல்லவா இருக்கிறது.''

''ஏன் கடற்கரையில் இருக்கக் கூடாதா?''

''அங்கே காற்று வாங்க வரும் கூட்டம் அதிகமாக இருக்குமே என்றேன்.''

''எங்கேதான் கூட்டம் குறைவு? கரும்பு கட்டோடு இருந்தாலும், எறும்பு செட்டோடு வருமாம்! இதற்கு என்று அலைகிறவர்கள் எங்கே இருந்தாலும் வந்துவிடத்தான் செய்வார்கள்.''

''வர வர இவர்கள் தொல்லை அதிகமாகி விட்டது.''

''ஊசி இடங்கொடுத்தால்தானே நூல் நுழையுமாம்! நாம் நடந்து கொள்வதைப் பொறுத்துத்தான் எல்லாம் இருக்கிறது.''

''கல்லூரிக்கு எப்படிப் போவாய்?''

''பஸ்ஸில்தான்.''

''நிரம்பக் கஷ்டமாக இருந்து இருக்குமே!''

''நான் மகளிர் பஸ்சில் போய்விடுவேன்.''

''காலம் மிகவும் கெட்டுவிட்டது. உன்னைப் போன்ற அழகான பெண்கள் வெளியில் போவது கூட ஆபத்தாக இருக்கிறது.''

''பெண்கள் வெளியில் வருகிறார்கள் என்பதற்காக ஆண்கள் அனைவரும் குதிரைகளுக்குப் போல முகமூடி



போட்டுக் கொள்ள முடியுமா? பூனை வளர்கிற இடத்தில் தான் எலியும் குடும்பம் நடத்திக் குட்டி போட வேண்டியிருக்கிறது.''

''நீ எப்பொழுது குட்டி போடப் போகிறாய்?''

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றியது போல, பேச்சு வாக்கில் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு கேட்டான்.

''உக்கும். இராத்திரிக்கு இராத்திரி வயிற்றை வலிக்கிறது என்று நீங்கள் குப்புறப்படுத்துக் கொள்ளுங்கள். நான் எப்படிக் குட்டி போடுவது?''

அவள் முகம் சிவந்து நாணத்துடன் சொன்னாலும், அவளது ஆற்றாமையும் அதில் வெளிப்பட்டது.

''நான் என்ன, வேண்டும் என்றா வயிற்றை வலிக்கிறது என்கிறேன்.''

''என் பக்கத்தில் வருவது என்றாலே உங்களுக்கு வயிற்றைக் கலக்குகிறது போலிருக்கிறது!'' அவள் குறும்பாகச் சிரித்தாள்.

''சே சே! எனக்கு என்ன பயம்? என் ஆண்மையை இப்பொழுது காட்டட்டுமா?''

அவன் போலியான கொஞ்சலுடன், அவளை இறுகப் பிடித்து அணைத்து நடித்தான்.

''போதுமே, விடுங்கள்! பொழுது விடிந்து விட்டது.''

அவன் பிடியில் இருந்து விடுபட்டு, அவனுக்குக் கேலியாக ''டா... டா...'' காட்டி விட்டு அவள் கதவைத் திறந்து கொண்டு வெளியில் சென்றாள்.

அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அவளது கல்லூரி வாழ்க்கை பற்றிய பேச்சை அவன் வேண்டும் என்றே எடுத்தான். அவளோ "நறுக் நறுக்" என்று பேசினாள். அந்தப் பேச்சில், கள்ளங் கபடு இல்லை. அவளைப் பார்த்தால், பனங்காட்டு நரியாகவும் தெரிய வில்லை.

"நீ எப்பொழுது குட்டி போடப் போகிறாய்?" என்று கேட்டதற்குக் கூட, "நீங்கள் இப்படிக் குப்புறப்படுத்துக் கொண்டால், நான் எப்படிக் குட்டி போடுவது?" என்றாளே, அப்படியானால், அவள் வயிற்றில் இப்பொழுது 'குட்டி' இல்லையா?

மதியழகன் தலையைப் பிடித்துக் கொண்டான்.

காலைச் சாப்பாடு முடிந்தது.

மதியழகன் கிளம்பினான்.

"டாக்டர் என்ன சொன்னார் என்று உடனே வந்து என்னிடம் சொல்ல வேண்டும். நான் வாசலில் காத்துக் கொண்டே இருப்பேன்!" அல்லி கண்டிப்புடன் கூறினாள்.

"மதியம் சாப்பிட இங்கே வர வேண்டும் என்று சொல். நேற்றுப்போல அங்கேயே இருந்து விடப் போகிறார்!" திரை மறைவில் நின்று மாமியார் மந்திரம் ஓதினார்.

"அம்மா சொன்னது காதில் விழுந்ததா?"

"ஆமாம்."

"போனதும் வந்து விடுங்கள்."

"சரி."

"மாலையில் வேண்டுமானால் நாம் இருவரும் உங்கள் வீட்டுக்குப் போவோம்."



"ஆகட்டும்."

மதியழகன் தனது வீட்டுக்கு வந்தான்.

"அல்லியை அழைத்து வரவில்லையா?"

"இல்லை, அம்மா. நான் மட்டும் டாக்டரைப் பார்க்க வந்தேன்."

"ஏன், என்ன செய்கிறது?"

"வயிற்றை வலிக்கிறது. டாக்டர் மாத்திரை கொடுத்தார். சரியாகி விடும் என்றார்."

"அவர்கள் வீட்டுச் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லையா? காரம் அதிகமாக இருக்கிறதா?

"தெரியவில்லை."

"சூடாக இருக்கும். நிறையப் பால் குடி. எண்ணெய் தேய்த்துக் குளி."

"சரி அம்மா."

"அல்லியை அழைத்துக் கொண்டு வா."

"மாலையில் வர வேண்டும் என்று அவளே சொன்னாள்."

மாத்திரை சாப்பிடப் போகிறவன் போல அம்மாவிடம் ஒரு தம்ளர் தண்ணீர் வாங்கிக் கொண்டு தனது அறைக்குப் போனான்.

ஏதோ வெள்ளையாக மாத்திரைகள் வாங்கிச் சட்டைப் பையில் வைத்து இருந்தான். ஒரு மாத்திரையை எடுத்து சன்னல் வழியே வெளியில் எறிய அருகில் சென்றான்.

அப்பெழுது தெருவில் இருவர் பேசிக் கொண்டு போனது அவன் காதில் விழுந்தது—

''முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்.''

அவன் மூளையில் ஒரு பொறி தட்டியது.

மாத்திரையை வீதியில் வீசிவிட்டுத் தண்ணீரைக் குடித்தான்.

தாளையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு அமர்ந்தான்.



## 9

''டாக்டர் என்ன சொன்னார்?''

''வழி மேல் விழி வைத்து நின்றாள்!'' என்று உயர்வுக்காகச் சொல்வது உண்டு. ஆனால், உண்மையாகவே வாசலைப் பார்த்துக் கொண்டு இருந்தாள் அல்லி. வாசலில் மதியழகனின் தலை தெரிந்ததும், ஓடிவந்து கேட்டாள்.

''உஸ்...'' என்று இரகசியம் பேசினான் அவன்.

''அம்மா அடுப்படியில் இருக்கிறார்கள்!'' என்றாள், அவள் தாழ்ந்த குரலில்.

அவன் விடுவிடு என்று தங்கள் அறைக்கு வந்து விட்டான்.

''டாக்டரைப் பார்த்தீர்களா?'' அவனைத் தொடர்ந்து வந்த அல்லி கேட்டாள்.

''மருந்து கொடுத்து இருக்கிறார்!'' மொச்சைக்கொட்டை போல இருந்த மாத்திரைகளைக் கையில் எடுத்துக் காட்டினான் மதியழகன்.



''டாக்டர் என்ன சொன்னார்?''

''இந்த மாத்திரைகளைச் சாப்பாட்டுக்குப் பிறகு விழுங்க வேண்டும் என்று நம்ம நாட்டு டாக்டர்கள் மருந்து கொடுக்கிறார்களே; நம்ம நாட்டில் எத்தனை பேர் தினம் மூன்று வேளையும் சாப்பிடுகிறார்கள். தினம் மூன்று வேளையும் மூக்கு முட்டச் சாப்பிடுபவர்கள் மட்டுந்தானே டாக்டர்களிடம் போகிறார்கள்.''

''நீங்கள் அப்படிச் சாப்பிடுவது இல்லையே. உங்களுக்கு ஏன் வயிற்று வலி வருகிறதாம்?''

''டாக்டருக்கே தெரியவில்லையாம்.''

''நீங்கள் நல்ல டாக்டரிடம் போயிருக்க வேண்டும்.''

''அவர் எம்.பி.பி.எஸ்., எப்.ஆர்.சி.எஸ்., டி.எம்.சி. என்று நிறையப் படித்தவர்.''

''நிறையப் படித்ததால் மட்டும் நல்ல டாக்டர் ஆகிவிட முடியாது. அதற்குக் கைராசி வேண்டும்.''

''வயிற்று வலி, தலைவலி இரண்டுக்கும் உடனே காரணம் கண்டுபிடிக்க முடியாதாம்.''

''காரணம் தெரியாமல் எப்படி டாக்டர் மருந்து கொடுத்தாராம்?''

''அல்லி...''

''உம்...''

''நீ வழக்கறிஞருக்குப் படித்திருக்க வேண்டியவள்!''

''டாக்டர் என்ன சொன்னார் என்பதை நீங்கள் சொல்ல மாட்டேனென்கிறீர்களே. நான்தானே துளைத்துத் துளைத்துக் கேட்க வேண்டியிருக்கிறது.''

''டாக்டர் ஓர் அரை மணி நேரமாகச் சோதித்துப் பார்த்தார். கடம் தட்டுவது போல என் வயிற்றைத் தட்டினார். பிறகு இந்த மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடச் சொல்லி, சீட்டு எழுதிக் கொடுத்தார். இதிலேயே வயிற்று வலி சரியாகி விடுமாம். ஆகாவிட்டால், மீண்டும் வந்து பார்க்கச் சொன்னார். வேறு சோதனைகள் நடத்துவாராம்.''

''மாத்திரைகளைக் கொடுங்கள். நேரம் தவறாமல் நான் தருகிறேன்.''

''வேண்டாம். நானே வைத்துக் கொள்ளுகிறேன்.''

''ஏன்?''

''ஏனென்றால்... ஆமாம், நான் இங்கேயும் இருப்பேன்; எங்கள் வீட்டுக்கும் போவேன். என்னிடமே இருந்தால், சாப்பிட்டதும் எடுத்து வாயில் போட்டுக் கொள்ளுவேன், அல்லவா?''

''முதல் மாத்திரை அப்பொழுதே சாப்பிட்டு இருக்க வேண்டுமே?''

''சாப்பிட்டு விட்டேன். எங்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கேயே சாப்பிட்டு விட்டேன். அம்மா உன்னை வரச் சொன்னார்கள். மாலையில் இருவரும் வருகிறோம் என்று சொன்னேன்.''

அவன் கட்டிலில்அமர்ந்து இருந்தான். அவள் அருகில் நின்றுகொண்டு இருந்தாள். அவள் கையைப் பிடித்து இழுத்து அவன் மேலே போட்டுக் கொள்ள வேண்டாம்! ''உட்கார்!'' என்றாவது சொல்லக் கூடாதா? அவளுக்கு உளம் பொங்கிக் கொண்டு இருந்தது.



''இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?''

''என்ன செய்வது? படுத்துத் தூங்க வேண்டியதுதான். ஏதாவது கதைப் புத்தகம் இருந்தால் கொடேன். படித்துக் கொண்டு இருக்கலாம்.''

''நான் கண்ட புத்தகங்களையும் படிப்பது இல்லை.''

''உன் பாடப் புத்தகங்களாவது இருக்குமே! கொடு, புரட்டிக்கொண்டு இருக்கிறேன். நேரம் போக வேண்டுமே.''

'நேரம் போவதே தெரியவில்லை!' என்று சொல்ல வேண்டிய புது மாப்பிள்ளை, நேரத்தைப் போக்க வழி தேடினான்.

அதே அறையில் அலமாரியில் புத்தகங்களை அடுக்கி வைத்து இருந்தாள் அல்லி. இரு கை நிறையப் புத்தகங்களை அள்ளிக்கொண்டு வந்து, ''படித்துக் கொண்டு இருங்கள்!'' என்று அவன் முன்னே கட்டிலில் வேகமாகக் குவித்தாள்.

அவளது தாபம், கோபம் எல்லாம் அவனுக்குப் புரிந்தது. ஆனால், புரிந்து கொள்ளாதது போல நடந்து கொண்டான். ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்து விரித்தான்.

அவன் விசுவாமித்திரர் ஆனதால், அவள் மேனகையாக விசுவரூபம் எடுத்தாள். கட்டிலில் ஏறி மல்லாந்து படுத்துக் கொண்டாள்.

அவளது ''டிரான்சிஸ்டர்'' அருகில் இருந்தது. அவனது படிப்பைக் கெடுப்பதற்காக அதை இயக்கினாள்.

அவளது புகைச்சலைப் புரிந்து கொண்டது போல, அந்த டிரான்சிஸ்டரும் அவளுடன் ஒத்துழைத்தது. அதில் இருந்து ''கணீர்'' என்ற கேட்ட பாட்டு.

''புத்தம் புதிய புத்தகமே—உன்னைப்
புரட்டிப் பார்க்கும் புலவன் நான்...''

அவள் மலர்ச்சியுடன் விழிகளை உருட்டி அவனை நோக்கினாள்.

அதே நேரம் அவனும் அவள் பக்கமாகப் பார்வையைத் திருப்பினான்.

இருவர் கண்களும் இணைந்து பிணைந்தன.

அவள் பொருள் பொதிந்த புன்னகையை உதிர்த்தாள்.

அவள் படுத்து இருந்த அழகே புத்தகம் ஒன்று திறந்து கிடப்பது போலத்தான் இருந்தது!

அந்தப் புத்தம் புதிய புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கும் ஆசையில்லாதவன் போல அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

அவளுக்கு அவமானமாக இருந்தது.

வெறுப்புடன் 'வெடுக்' என்று எழுந்து அமர்ந்தாள்.

விழிகள் அசையாது அவனை வெறித்துப் பார்த்தாள்.

அவன் கையில் எடுத்துப் புரட்டிக் கொண்டு இருந்த புத்தகம் அவள் பார்வையில் பட்டது.

அந்தப் புத்தகத்துக்கு ஜாக்கெட் இல்லை.

அப்படி யிருக்க அவள் மானங்கெட்டவள் அல்ல.

அவள் அப்படியே யிருந்தால்கூட அவன் அவளைப் புரட்டிப் பார்ப்பானா என்பதும் சந்தேகந்தான்.

''சரியான மரக்கட்டை!''



மனதுக்குள் புழுங்கிக் கொண்டே வேகமாக இறங்கி வெளியில் சென்றாள்.

அவளது வேகத்தைப் பார்த்து மதியழகன் சிரித்துக் கொண்டான்.

அவள் போனதும், குவிந்து கிடந்த ஒவ்வொரு புத்தகத்தையும் வேக வேகமாகப் புரட்டினான். அந்தப் புத்தகத்துக்குள் ஏதாவது துப்புக் கிடைக்குமா என்று தேடினான்.

ஏதாவது கடிதம்...

எவன் படமாவது...

அல்லி ரோஷக்காரி. அந்தப் பக்கமே பிறகு திரும்பி வரவில்லை. ''சாப்பிட வாருங்கள்!'' என்று அறைக்கு வெளியில் நின்றுதான் குரல் கொடுத்தாள்.

சாப்பிட்டு விட்டு, அவன் அறைக்குத் திரும்பினான். அல்லி அங்கே போவதைத் தவிர்க்க ஏதாவது ஒரு வேலையைத் தொட்டுக் கொண்டு இருந்தாள்.

''மாப்பிள்ளைக்கு வெற்றிலை கொடுக்கவில்லையா?'' தாய் கேட்டார்.

''அவர் வெற்றிலை போடுவது இல்லையாம்!'' வெடுக்கென்று இவள் பதில் சொன்னாள்.

வெற்றிலை போடுவது நல்லதோ கெட்டதோ. ஆனால், வெற்றிலை போடும் நேரத்தில் தம்பதிகள் இடையே ஒரு தனி அன்பு இழையோடுகிறது.

அங்கங்கே இருந்த சாமான்களை இடம் மாற்றி வைக்கத் தொடங்கினாள் அல்லி.

''போய் அவர் என்ன செய்கிறார் என்று பார். கோபித்துக் கொள்ளப் போகிறார்.''

''புத்தகங்களை யெல்லாம் அள்ளிப் போட்டுக் கொண்டு பரீட்சை எழுதப் போகிறவர் போலப் படித்துக் கொண்டு இருக்கிறார்.''

''தண்ணீராவது கொண்டு போய்க் கொடு.''

''அவருக்குத் தாகமே இல்லை.''

''மோகம்'' என்பதைத்தான் ''தாகம்'' என்று மாற்றிச் சொன்னாள் அவள்!

மாலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு இருவரும் மதியழகனின் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

வழியில் ஒரு பூக்காரி வந்தாள். மதியழகன் அவளை அழைத்துப் பத்து முழம் வாங்கினான்.

''இவ்வளவு எதற்கு?'' என்றாள் அல்லி.

''தலை நிறைய வைத்துக் கொள். அழகாக இருக்கும்!'' அவன் அவள் கையில் கொடுத்தான்.

அழகாக இருந்து என்ன பயன்? அனுபவிக்க ஆள் வேண்டுமே! அவள் நினைத்துக் கொண்டாள்.

மருமகளை வரவேற்க மாமியார் தயாராக இருந்தார். மகனின் வயிற்று வலியைப் பற்றித்தான் முதலில் பேசினார். ''என்னவோ தெரியவில்லை... காலையில் டாக்டரிடம் போனாராம்... மாத்திரைகள் வாங்கி வந்து இருக்கிறார்...'' அல்லி பட்டும் படாமல் பேசினாள்.

''இரவில் அவனுக்குப் பால் கொடுக்கிறாய் அல்லவா?''

''ஆமாம்''

''இது சூடாக இருக்கும். நிறையப் பால் குடிக்க வேண்டும். எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். திருமணம் ஆனவர்களுக்கு இது எல்லாம் அவசியம்.'' மாமியார் பூடகமாகச் சொன்னார்.

அப்படியென்றால்...? இல்லற உறவினால் உடல் சூடு ஆகுமா? அல்லி ஊகித்துக் கொண்டாள்.

''மாத்திரைகளை நிறையச் சாப்பிடக் கூடாது. அதுவே சூடாகி விடும்.''

''அவரிடமே சொல்லுங்கள்.''

''இரவில் கண் விழித்தால் பகலில் கொஞ்ச நேரமாவது தூங்க வேண்டும்.''

அல்லிக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள். அவன் முதல் இரவில் கண் விழித்ததோடு சரி. பிறகு கும்பகர்ணன் தான். ''பகல் முழுக்கத் தூங்கத்தான் செய்கிறார்.''

மதியழகன் வந்தான்.

''அதுதான் என் அறை.''

அவளை அழைத்துக் கொண்டு போனான்.

அவள் அறையை நோட்டமிட்டாள்.

கட்டில்... மேசை... நாற்காலி... தூக்கில் தொங்கிய பாண்ட் சட்டைகள்... திருமணத்துக்காக வெள்ளையடித்து இருந்தார்கள். மாணவனாக, பரிசு பெறும் பையனாகச் சட்டங்களுக்குள் அவன் காட்சியளித்தான். ஓர் அலமாரி நிறையப் புத்தகங்கள்.

''எல்லாம் நான் படித்தது!'' — அவன் பெருமையாக சொன்னான். ''எடுத்துப் பாரேன்.''

அவள் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது?

ஆனாலும், அவன் சொன்னான் என்பதற்காக மேலாக இருந்த ஒரு தடித்த புத்தகத்தைக் கையில் எடுத்தாள்.

அட்டையைப் புரட்டினாள். அவனது பெயரும், ஒரு கல்லூரியின் பெயரும் எழுதப்பட்டு இருந்தன.

பக்கங்களைப் புரட்டினாள்.

நாலாக மடித்த ஒரு தாள் கீழே விழுந்தது.

அவள் குனிந்து எடுத்தாள்.

என்ன தாள்?

இயற்கையாகப் பிரித்துப் பார்த்தாள்.

ஏழெட்டு வரிகள் எழுதப்பட்டு இருந்தன. கடிதம் போல.

முதல் வரியைப் படித்தாள்.

''ஆருயிர்க் காதலன் மதியழகனுக்கு உங்கள் அன்புக் காதலி உஷா எழுதியது...''

''டக்'' என்று அவள் இதயத் துடிப்பு நின்று விட்டது.



## 10

விளக்கு வைக்கும் நேரம்.

விட்டத்தில் மின் விசிறி சுழன்று கொண்டு இருந்தது.

அப்படியிருந்தும், அல்லிக்கு உடல் முழுவதும் குப் என்று வியர்த்து விட்டது.

மழையில் நனைந்த கோழிக் குஞ்சு போல உடல் முழுதும் வெடவெட என்று நடுங்கியது.



குப்பையில் புரண்டு எழுந்த கோழி போல, ஒருமுறை சிலிர்த்துக் கொண்டாள்.

அதன் பின்தான் 'டக்' என்று நின்று போன அவள் இதயம் மீண்டும் 'டிக்...டிக்...டிக்' பாடத் தொடங்கியது.

ஓரக் கண்ணால் பார்த்தாள்.

மதியழகனைக் காணோம்.

விழிகளைச் சுற்றும்முற்றும் சுழலவிட்டாள்.

அவன் தென்படவில்லை.

அவன் எங்கே போனான்?

அம்மாவிடம் பேசிக் கொண்டு இருக்கும் குரல் கேட்டது.

எப்பொழுது போனான்?

அவளுக்குத் தெரியவில்லை.

ரோடு என்ஜின் போல அவள் இதயம் இன்னும் தடதட என்று படபடத்துக் கொண்டு இருந்தது.

அவள் முதல் வரி மட்டுமே படித்த கடிதம் அவள் கையில் இருந்தது.

அடுத்த வரியைப் படிப்பதா? வேண்டாமா?

'வேண்டாம்' என்றது உளம். வேலியில் போகும் ஓணானைப் பிடித்து ஏன் காதுக்குள் விட்டுக் கொள்ள வேண்டும்.

கண்ணோ அடுத்த வரியைத் தேடியது.

பெண்ணின் கண் ஆயிற்றே!

அவளை அறியாமலே தொடர்ந்து படித்தாள்.

''ஆருயிர்க் காதலன் மதியழகனுக்கு உங்கள் அன்பு காதலி உஷா எழுதியது...''

''ஆருயிர்க் காதலன் மதியழகனுக்கு...''

''...உங்கள் அன்புக் காதலி உஷா எழுதியது...''

மனப்பாடம் பண்ணும் மாணவன் போல மீண்டும் மீண்டு முதல் வரியைப் படித்துக் கொண்டு இருந்தாள்!

அடுத்த வரிக்குப் பார்வையைத் திருப்ப வெகு நேர ஆயிற்று.

''பத்து நாளாக ஏன் என்னைப் பார்க்க வரவில்லை?

இன்று மாலை காத்துக் கொண்டு இருப்பேன். தவறாம வாருங்கள்.

ஏமாற்றத்தை இனியும் என்னால் தாங்கிக் கொள் முடியாது.

''உங்கள் உயிர்க் காதலி
உஷா.''

''அது என்ன கடிதம் அல்லி?''

அவள் படித்து முடிக்கவும், மதியழகன் உள்ளே வரவு சரியாக இருந்தது. ''இது... இது...'' ஏனோ அவள் கடிதத்தை மறைக்க முயற்சி செய்தாள்.

அதற்குள் அவள் கையில் இருந்து அவன் பறித்தான்.

''இது... இந்தக் கடிதம்... உனக்கு எப்படிக் கிடைத்தது?'' அவன் அதிர்ச்சியுடன் தடுமாறினான்.



இன்று காலையில் இங்கே வந்தபொழுது இந்தக் கடிதத்தை எழுதி இந்தப் புத்தகத்துக்குள் வைத்து விட்டுப் போனதே, அவன்தான்.

எழுதுமுன் மிகவும் சிரமப்பட்டுவிட்டான். அனுபவம் இல்லை. அசலும் அல்ல. எழுதத் தெரியாமல் திண்டாடினான். எப்படியோ இந்த நாலு வரிகளை எழுதி முடித்தான்.

முள்ளை முள்ளால் எடுக்கும் இந்த முயற்சி ஒரு நச்சுத் தேர்வு என்பதை அவன் உணர்ந்தே இருந்தான். அல்லியின் வெறுப்புக்கு அவன் ஆளாகக் கூடும். அவனது இல்லறத்தில் விரிசல் ஏற்படக் கூடும். எப்படியும் உண்மையைக் கண்டு பிடித்துவிட வேண்டும் என்ற தீவிரத்தில் எதையும் எதிர்கொள்ளத் தயார் ஆனான்.

இவ்வளவையும் செய்து விட்டு, இப்பொழுது நன்றாக நடிக்கவும் செய்தான்.

அவனது கேள்விக்கு அல்லி பதில் சொல்லவில்லை. அமைதியாக அவனைப் பார்த்தாள்.

''இந்தப் புத்தகத்துள் இருந்ததா?'' அவள் கையில் இருந்த கனத்த நூலை வெடுக் என்று பறித்துக் கொண்டான்.

''இது வந்து... அல்லி, நீ தவறாக நினைக்காதே. இங்கே வேண்டாம். வெளியில் போய்ப் பேசுவோம், வா.''

அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு அறைக்கு வெளியில் வந்தான்.

''அம்மா, நாங்கள் போய் வருகிறோம்.''

''இப்பொழுதுதான் வந்தீர்கள். அதற்குள் புறப்பட்டு விட்டீர்களா?''

''வெளியில் போகும் வழியில் உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தோம்... வருகிறோம்.''

பதிலுக்குக் காத்து இராமல் அவளை இழுத்துக் கொண்டு ஓடினான்.

''நிறுத்து... நிறுத்து...''

கடற்கரைச் சாலையில் வாடகைக் கார் நின்றது.

அல்லியை இறங்கச் சொன்ன மதியழகன், வாடகை கொடுத்துக் காரை அனுப்பினான்.

''கடற்கரையில் உட்கார்ந்து பேசுவோம். உனக்கு எல்லா விவரமும் சொல்லுகிறேன்.''

அவன் முன்னே நடந்தான்.

ஆட்டுக்குட்டி போல அவள் பின்னே வந்தாள். அவளிடம் ஒருவிதச் சோர்வு காணப்பட்டது.

பூ மணலில் அவள் கால் பதியவில்லை. அவள் எடையற்றுப் போய்விட்டாள். குனிந்த தலை நிமிரவில்லை. அவள் சிந்தனையுடன் நடந்தாள்.

கூட்டம் குறைந்த இடத்தில் அவன் அமர்ந்தான்.

அவளையும் அருகில் உட்காரச் சொன்னான்.

அவன் பேசவில்லை. நீலக் கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அவள் கையில் மண்ணை அள்ளி ஒழுக விட்டுக் கொண்டு இடை இடையே ஓரக் கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டாள்.



''அல்லி...''

திடீர் என்று அவளது பக்கம் திரும்பினான்.

அவள் ''உம்'' கூடச் சொல்லவில்லை. நிமிர்ந்து அவனைப் பார்க்க மட்டும் செய்தாள்.

''அல்லி, கணவன் மனைவிக்கு இடையே எந்தவித இரகசியமும் இருக்கக் கூடாது என்று சொல்லுவார்கள்...''

நிர்வாணமான உண்மை!

''நான் உன்னிடம் மறைக்க வேண்டும் என்று நினைக்க வில்லை. ஏனென்றால், இந்த உஷாவை நான் காதலிக்கவே இல்லை.''

அவள் மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள்.

''உஷா என்னுடன் படித்தவள். அவளே வந்து என்னுடன் பழகினாள். ''கேர்ல் பிரண்டு'' ஆக அவளை நினைத்தேன். மாணவிகளுக்கு ''பாய் பிரண்டு''கள் இருக்கிறார்கள் அல்லவா?...''

கடைசிச் சொற்களைக் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்லி விட்டு அவளைப் பார்த்தான்.

அவளிடம் எந்த வித எதிரொலியும் இல்லை.

''ஒரு நாள் அவள் என்னைக் காதலிப்பதாகச் சொன்னாள். அத்துடன் அவளது பழக்கத்தை வெட்டி விட்டேன். அதைத்தான் கடிதத்தில் எழுதியிருக்கிறாள்—''ஏன் பத்து நாளாக என்னைப் பார்க்க வரவில்லை?'' என்று. அதன்பின் அவளை நான் பார்க்கவே இல்லை. அவள் என்னைச் சந்திக்க முயற்சி செய்தாள். அதற்கும் நான் இடம் கொடுக்கவில்லை.''

சொல்லி முடித்து விட்டவன் போலக் கடலைப் பார்த்தான்.

அல்லி சிலையாக அமர்ந்து இருந்தாள்.

அவன் அவளது பக்கம் பார்வையைத் திருப்பினான்.

''அல்லி! நான் சொன்னது முழுக்க உண்மை. என்னை நம்புகிறாயா?'' அவள் கையைப் பற்றினான்.

அவள் அவனைப் பார்த்தாள்.

''என்னை நீ தவறாக நினைக்கக் கூடாது அல்லி. நம் இடையே சந்தேகப் பார்வை இருந்தால் அது நமது வாழ்க்கையையே நாசம் ஆக்கி விடும்!'' அவன் அழுது விடுவான் போலிருந்தது.

''உங்கள் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.''

அவள் அவனை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

''அது போதும் எனக்கு!'' அளவுக்கு மீறி மகிழ்ந்தவன் போலக் கூறியவன் அவள் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான்.

''அல்லி! என் மீது நீ சந்தேகப்பட்டாலும், அது நியாயமாகத்தான் இருக்கும். காலம் அந்த அளவுக்குக் கெட்டு விட்டது. பெண்களைச் சேர்த்துக் கொண்டு அலையும் மாணவர்களைப் பார்க்கிறோம். மாணவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு ஊர் சுற்றும் மாணவிகளைக் காண்கிறோம். கல்லூரியில் படித்தவர்கள் என்றாலே சந்தேகக் கண்ணுடன்தான் நோக்க வேண்டியிருக்கிறது. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ! இல்லையா அல்லி?''

''இல்லை!'' அல்லி அழுத்தமாகச் சொன்னாள். ''ஆயிரத்தில் ஒருவர் தவறு செய்யலாம். அதைக் கொண்டு மற்ற எல்லோரையும் மதிப்பிடக் கூடாது.''



''பனை மரத்தடியில் இருந்து பாலைக் குடித்தாலும்...''

''அப்படி நினைப்பதுதான் தவறு என்கிறேன். எங்கள் கல்லூரியில் ஆயிரம் மாணவிகள் படித்தார்கள். அவர்கள் பத்து இருபது பேர் பாய் பிரண்டுகளுடன் சுற்றியிருப்பார்கள். அதைக் கொண்டு எல்லா மாணவிகளுமே அப்படித்தான் என்று சொல்ல முடியுமா?''

''சொல்லக் கூடாதுதான். ஆனால், தெருவில் ஆயிரம் பேர் நடந்து போகிறார்கள். அவர்களை யாரும் பார்ப்பது இல்லை. ஆனால், யாரோ ஒருவர் வாழைப்பழத் தோலை மிதித்து வழுக்கி விழுந்தால், அத்தனை பேர் பார்வையும் அவர் மேலே தானே விழுகிறது!''

''அதை வைத்துக் கொண்டு ஆயிரம் பேருமே வழுக்கி விழுந்தார்கள் என்று சொல்லிவிட முடியுமா?''

அல்லி அழுத்தமாகப் பேசினாள்.

அவளுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? வேகம்?

சூடுபட்ட பூனையாக இருப்பாளோ?

அவளை நோக்கினான்.

''என்ன பார்க்கிறீர்கள்?'' அவள் முறுவலித்தாள்.

''இல்லை... கணவன் மனைவிக்கு இடையே எந்த இரகசியமும் இருக்கக் கூடாது என்பார்கள் அல்லவா?''

''ஆமாம், முதலிலேயே சொன்னீர்களே.''

''என்னைப் பற்றிய எல்லாவற்றையும் ஒளிவு மறைவு இல்லாமல் உன்னிடம் சொல்லி விட்டேன். உன்னைப் பற்றி ஏதாவது இருந்தாலும் இப்பொழுதே சொல்லிவிடு!''

அடிபட்ட பாம்பு போலப் பட் என்று தலையைத் தூக்கி அவனைப் பார்த்தாள் அல்லி!



## 11

ஆத்திரத்தில் ஆடிப் போய்விட்டாள் அல்லி.

அதரங்களை அழுந்தக் கடித்துக் கொண்டாள். அப்பொழுதும் அவளுக்கு ஆத்திரம் அடங்கவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டாள்.

அவள் கண்கள் நெருப்பாகச் சிவந்து விட்டன.

அவளைப் பற்றி அவன் என்ன நினைத்தான்?

ஆத்திரத்தில் அவளால் பேசக்கூட முடியவில்லை. கடல் மணலைக் கை நிறையக் கொத்தாக அள்ளி ஆத்திரத்தை அடக்க முயற்சித்தாள்.

அவளது கோபம் அவனுக்குத் தெரிந்தது.

அவளைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் மதியழகன் இறங்கவில்லை. அவளிடம் தணலை இன்னும் கிளறிவிடவே அவன் விரும்பினான். அவளை எரிமலையாக வெடிக்க வைக்க முயற்சித்தான். ஆவேசத்தில் சிலர் உண்மையை உளறி விடுவது உண்டு!

''நான் என்ன கேட்டேன் என்று இப்படிக் கோபப்படு கிறாய்? கணவன்—மனைவிக்குள் எந்தவித இரகசியமும் இருக்கக் கூடாதே. இருந்தால் வாழ்க்கை பாழ்பட்டுப் போகுமே என்றுதான் கேட்டேன்.''



அவளிடம் என்ன இரகசியம் இருக்கிறது?

முதல் இரவில் அவள் துணிகளையெல்லாம்... அவள் பற்றி இழுக்க இழுக்க... விடாது களைந்து எறிந்து அவளைப் பிறந்த மேனி ஆக்கினானே. இதற்கு மேல் அவனிடம் மறைக்க அவளிடம் என்ன இரகசியம் இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கிறான்?

''தயக்கம் ஏன் அல்லி? நான் கேட்கிறேன் அல்லவா? ஏதாவது இருந்தால் சொல்லிவிடு. பிறகு தெரிய வந்தால் நாம் இருவருமே வருத்தப்பட வேண்டியிருக்கும்.''

அவள் அவமானத்தால் துடித்தாள். அவனைப் பார்க்கக் கூசித் தலை குனிந்தாள்.

''மவுனம் சம்மதத்துக்கு அடையாளம் என்பார்கள்...''

மிருகக் காட்சி சாலையில் கூண்டில் அடைபட்டு இருக்கும் புலி சில நேரம் படுத்து இருப்பது உண்டு. காவல்காரன் அதைக் கம்பியால் குத்தி எழுப்பி வேடிக்கை காட்டுவான். மதியழகனும் அப்படி நடந்து கொள்வது போல அல்லிக்குத் தோன்றியது. சீற்றத்துடன் அவனைப் பார்த்தாள்.

''நீயும் கல்லூரியில் படித்தவள்... உங்கள் கல்லூரியில் படித்த ஆயிரம் பெண்களில் பத்து இருபது பேருக்கு பாய் பிரண்டு உண்டு என்று நீயே சொன்னாய்...''

எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தான் அவன்.

''எல்லோரும் உங்களைப் போல இருப்பார்கள் என்று நினைத்தீர்களா?''

அவள் வெடித்தாள். அவனுக்கு வேண்டியது அதுதான்!

''தன்னைப் போலத்தான் பிறரை நினைப்பார்களாம்.''

''தான் திருடி பிறரை நம்பாள் என்பார்கள்.''

''குற்றமுள்ள நெஞ்சுதான் குறுகுறுக்க வேண்டும். நீ ஏன் கோபப்படுகிறாய்?''

''என்னைப் பற்றி நீங்கள் எவ்வளவு கேவலமாக நினைத்து விட்டீர்கள்!''

அவளுக்குக் காறித் துப்ப வேண்டும் போல இருந்தது.

''நீ ஏன் இவ்வளவு கோபப்படுகிறாய் என்றே எனக்குத் தெரியவில்லை.''

''உங்களுக்கு ஒன்று தெரியுமா?''

''சொல், தெரிந்து கொள்கிறேன்.''

''பள்ளிக்கூடத்தில் படித்த நாளிலும் சரி, கல்லூரியில் படித்த காலத்திலும் சரி, எந்த மாணவியுடனும் சேர்ந்து நான் சினிமாவுக்குப் போனதே கிடையாது.''

''ஏன்?''

''தோழிகளுடன் சேர்ந்து சினிமாவுக்குப் போவது, உல்லாசப் பயணம் செல்வது, புத்தகம் வாங்கப் போகிறேன் என்று தோழியின் வீட்டுக்குச் செல்வது, இன்றைக்கு 'ஸ்பெஷல் கிளாஸ்' தமிழ் மன்றம் கூட்டம் நடந்தது என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குத் தாமதமாக வருவது அல்லது ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு விடுமுறை நாளில் கல்லூரிக்குப் போவதாகச் சொல்வது... இப்படிப்பட்ட பழக்கங்களில் எந்தப் பழக்கமும் எனக்குக் கிடையாது.''

''ஏனாம்?''



''நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் பாய்வதை நேரில் பார்த்து நேர்மையான பாடம் படித்துக் கொண்டவள் நான். தோழிகளுடன் சேர்ந்து வகுப்புக்கு மட்டம் போட்டுவிட்டுப் பகல் காட்சி பார்க்கப் போகும் பழக்கந்தான் பிறகு ஒரு தோழனோடு சேர்ந்து சினிமாவுக்குப் போகும் வழக்கமாக வளர்ந்து விடுகிறது. ஒரு விடுமுறை நாளில் உண்மையாகவே ஸ்பெஷல் கிளாசுக்குப் போகும் பெண், பிறகு ஒருநாள் ஸ்பெஷல் கிளாஸ் என்று பெற்றோரை நம்ப வைத்து விட்டு, எவன் கூடவாவது மகாபலிபுரம் போய்விடுகிறாள். அங்கே ''ஸ்பெஷல் கிளாஸ்'' நடக்கிறது! இதையெல்லாம் கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் எனக்கு நானே கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு விட்டேன். அது எனக்கே நல்லது என்று நான் நம்பினேன். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள் அல்லவா? அவளுக்கு நல்ல வழிகாட்ட வேண்டிய பொறுப்பு எனக்கு இருப்பதையும் நான் உணர்ந்தேன்.''

மூச்சு விடாமல் படபட என்று பேசி முடித்த அல்லி, ஆழ்ந்த மூச்சு எடுத்தாள்.

''அய்யோ அல்லி, உன் மீது சந்தேகப்பட்டா இதை யெல்லாம் கேட்டேன். கணவன் மனைவிக்குள் இரகசியம் இருக்கக் கூடாதே என்றுதான். இதைப் புரிந்து கொள்ளாமல் என் மீது கோபப்படுகிறாயே. நீ என் கண்ணல்ல...! என் பொன்னல்ல...!''

கொஞ்சிக் கொண்டே அவளை வளைத்து அணைத்தான்.

நெருப்பால் சுட்டது போலிருந்தது அவளுக்கு.

''வீட்டுக்குப் போவோம்!'' அவன் பிடியில் இருந்து விடுவித்துக் கொண்டு அவள் எழுந்தாள், நடந்தாள்.

''கோபமா?''

அவள் முந்தானையைப் பிடித்து அவன் இழுத்தான். மார்புச் சேலை முழுவதும் அவன் கையில்.

அவள் சேலையை இழுக்கவில்லை.

''என் உடலையே ஒரு பெரிய இரகசியம் என்று எண்ணி, இந்தச் சேலையால் மூடி மூடி வைத்தேன். அதையே அவிழ்த்து எறிந்து விட்டீர்கள். இதற்கு மேல் உங்களிடம் மறைக்க என்னிடம் என்ன இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?''

எப்பொழுதோ சொல்ல நினைத்ததை இப்பொழுது சொன்னவள், சேலையை இழுத்து மார்பில் போட்டுக் கொண்டு நடந்தாள்.

பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காக முடிந்துவிட்டதே!

மதியழகன் தலையைச் சொறிந்து கொண்டே எழுந்து அவள் பின்னே நடந்தான்.

இரவில் வயிற்று வலி நாடகத்தை நடத்த வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது!

சாப்பாடு - படுக்கை யெல்லாம் ஒரு நாடகம் போல நடந்தன. அவனுக்குப் பால் கொண்டு வந்து வைத்துவிட்டு, அல்லி குப்புறப் படுத்துக் கொண்டாள்.

மதியழகன் சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

அவள் கட்டை போலக் கிடந்தாள்.

முள்ளை முள்ளால் எடுக்கப் போய், இந்த முள்ளும் உள்ளே முறிந்து கொண்டது போல ஆயிற்றே என்று மதியழகன் நினைத்தான்.



அல்லி இன்று அவன் வழிக்கு வரப்போவது இல்லை என்று அவனுக்குத் தெரிந்தது. ஆகவே, அவளைச் சமாதானப் படுத்துவது போல நடித்தான்.

முதலில் மெல்ல அவள் மூங்கில் தோளில் கையை வைத்தான்.

அவள் அந்தக் கையைத் தட்டிவிட்டாள்.

அவளைத் தூக்கி உட்கார வைக்க முயற்சித்தான்.

அவள் நழுவி நழுவி விழுந்து கொண்டாள்.

''என் மீது கோபமா?''

அவளிடம் இருந்து பதில் இல்லை.

''உன்னிடம் கேட்க எனக்கு உரிமை இல்லை?''

அவள் சட் என்று எழுந்து அமர்ந்தாள்.

''அதைவிட நீங்கள் என்னை அடித்துக் கொன்று இருக்கலாம். அதற்குக் கூட உங்களுக்கு உரிமை இருக்கிறது.''

''நான் அப்படி என்ன கேட்டு விட்டேன்.''

''தோழிகளுடன் சேராமல், குப்பை மேட்டில் மேயும் கோழிகள் போல ஊர் சுற்றாமல், தனித்து இருந்த என்னைப் பார்க்கும்பொழுது எல்லாம் மற்ற மாணவிகள், ''வாடியம்மா படிதாண்டாப் பத்தினி!'' என்று கேலி செய்வார்கள். அவ்வளவு அடக்கமாக இருந்த என்னைப் பார்த்து இப்படிக் கேட்டால் கோபம் வராதா?''

''ஏன் கோபப்பட வேண்டும்? இல்லை என்றால், இல்லை என்று சொல்ல வேண்டியதுதானே?''

''உங்களுக்குத் துணை சேர்க்கிறீர்களா? எனக்கும் ஒரு காதலன் இருந்தான் என்று சொன்னால், இருவரும் சமம் ஆகிவிட்டோமென்று உங்களுக்குத் திருப்தி ஏற்படும் என்றால் சொல்லுங்கள், உங்களுக்காகப் பொய் சொல்லுகிறேன்.''

''பொய்யும் மெய்யும் எனக்கு என்ன தெரியும்!''

''நெருப்பிலே குளிக்க வேண்டுமா, சொல்லுங்கள்.''

''உனக்குத்தான் கோபம் வருமா? எனக்கு வராதா?'' கோபத்தில் கொந்தளித்தவன் போல மதியழகன் பேசினான். ''இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று இருக்கிறார்கள். பிறகு பார்த்தால் அந்தப் பூனை வாய் வைக்காத பானையே இல்லை என்று தெரிகிறது. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்.''

அல்லி, ''அம்மா!'' என்று அழுது விட்டாள்.

குப்புற விழுந்து வெகுநேரம் கேவிக் கேவி அழுதாள்.

அவள் உடல் குலுங்குவதைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

அழுதுகொண்டே அவள் தூங்கிப் போனாள்.

அவன் சிந்தனையுடன் அமர்ந்து இருந்தான்.

கரும்பைப் பிழிவதைப் போல அவளைக் கஷ்டப்படுத்தி விட்டான்.

அப்படி யிருந்தும் ஒரு சொட்டுச் சாறுகூடக் கிடைக்க வில்லை.

அவளை வீணாகத் துன்புறுத்தி விட்டோமே என்று வருந்தினான்.



சிறு துப்பும் கிடைக்கவில்லையே என்ற கவலை அதை விட அதிகமாக இருந்தது.

எப்படி உண்மையை வரவழைப்பது?

மூளையைப் பந்தாடினான்!



12

அடுத்த நாலைந்து நாள் ஊமை நாடகம் நடந்தது!

அல்லி — மதியழகன் இருவரும் சரியாகப் பேசிக் கொள்ளவில்லை.

தாமரை இலைத் தண்ணீர் போலப் பட்டும் படாமல் பழகினார்கள்.

அல்லியின் அம்மா கூடக் கேட்டார் — ''என்னடி சண்டை?''

''சண்டையா? ஒன்றும் இல்லையே!'' அல்லி சிரித்து மழுப்பினாள்.

அவளை நேருக்கு நேர் பார்க்கும் பொழுது மதியழகன் சிலநேரம் பல்லைக் காட்டி அசடு வழிந்தான். அவள் கண்டும் காணாதது போல அலட்சியமாகப் போனாள். அதன்பின் அவன் அவளைப் பார்ப்பதே இல்லை.

அவள் அவனுக்குச் சாப்பாடு எடுத்து வைப்பாள். அதன்பின் அவனது அறைப் பக்கம் அவள் போவது இல்லை. ஆனால் இரவில் படுக்கை இருவருக்கும் ஒரே அறையில் தான். அவன் காத்து இருப்பவன் போலக் கட்டிலில் உட்கார்ந்து இருப்பான். அவள் வெறுப்பைக் காட்டுவது

போல அறைக்குள் வந்ததும் குப்புறப் படுத்துக் கொள்ளுவாள். முகத்தைக் காட்ட வேண்டியவனுக்கு முதுகைக் காட்டுவாள். ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு அவனும் படுத்துக் கொள்ளுவான்.

அவள் படுத்துக் கொண்டாலும் தூங்கி விடுவது இல்லை வெகு நேரம் விழித்துக் கிடப்பாள். அவள் உள்ளம் அலை மோதும். சில நேரம் கண்ணீர் கூட வடிப்பாள். அவளைப் பற்றி அவன் எவ்வளவு மோசமாக நினைத்து விட்டான். அவளுக்கு ஆறவே இல்லை.

சில நேரம் அவள் சிந்தனை இப்படியும் ஓடும். முதல் இரவில் அவளுடன் நன்றாகத்தானே இருந்தான். இரண்டாம் இரவில் இருந்துதானே அவளை விலக்கி வைக்கிறான். அவளிடம் இருந்து அவன் விலகிப் போகிறான். முதல் இரவுக்குப் பின் அவள் மீது அவனுக்கு ஏதாவது ஐயப்பாடு ஏற்பட்டு இருக்குமா? அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், வயிற்று வலி என்று நடிக்கிறானா?

அவள் மீது ஐயப்பட என்ன காரணமும் இல்லையே. அவள் நினைத்து நினைத்துப் பார்த்தாள். எதுவுமே அவளுக்கு எட்டவில்லை. அவள் காட்டு மலர். நகரத்தின் நச்சுக் காற்றுக்கூட அவள் மீது பட்டது இல்லை. அப்படிப்பட்டவள் மீது அவன் ஐயப்பட என்ன இருக்கிறது? அவளுக்குப் புரியவே இல்லை.

மூன்று வேளையும் சாப்பாட்டுக்குப் பின் மாத்திரை சாப்பிடும்படி டாக்டர் சொன்னார் என்று கூறினானே?

அப்படி மாத்திரை சாப்பிடுவதாகத் தெரியவில்லையே. அப்படியானால், வயிற்று வலி என்று சொல்வது.... வெறும்



ஏமாற்று வேலைதானா? ஏன் இந்த ஏமாற்று நாடகம்? எதுக்காக நோயாளியாக நடிக்கிறான்? இதுவும் அவளுக்குத் தெரியவில்லை.

வாடிய மலராக அவள் வதங்குவதைக் காண மதியழகனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால், வயிற்று வலி நாடகம் இல்லாமலே அவளிடம் இருந்து ஒதுங்கி இருக்க முடிந்தது. அவன் ஒதுங்குவதற்குப் பதில், அவளே விலகி விலகிப் போனாள். ''இதுவும் நல்லதுதான்!'' என்று இருந்து விட்டான் அவன்.

அவளை இன்னும் எப்படிச் சோதிப்பது, உண்மையை எப்படித் தெரிந்து கொள்வது என்ற சிந்தனையில் இரவும் பகலும் மூழ்கிக் கிடந்தான். ஒரு வழியும் தோன்றவில்லை.

அன்று இரவு பால் தம்ளருடன் அல்லி அறைக்குள் வந்தாள்.

பாலை அவன் எதிரில் வைத்து விட்டு, வழக்கம் போல அவள் குப்புறப் படுத்துக் கொண்டாள்.

மதியழகன் ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டு இருந்தான்.

திடீர் என்று அவள் 'கோ' என்று கதறி விட்டாள்.

''அல்லி!'' திடுக்கிட்டு அவன் அவளை அள்ளி யெடுத்தான்.

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!'' அவன் மடியில் விழுந்து, அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.''

அப்படி யென்றால்...

அவன் ஆச்சரியத்துடன் அவளை நோக்கினான்.

அவள் ஒப்புக் கொண்டு விட்டாளா?

இத்தனை நாளாக அவளைப் பட்டினி போட்டது பலன் கொடுத்து விட்டதா?

உண்மையைக் கண்டுபிடித்து விட்டது போல அவன் முகம் மலர்ந்தது.

''அல்லி!'' ஆதரவுடன் அவளை அரவணைத்துத் தூக்கினான்.

''இந்த வேதனையை இனிமேல் என்னால் தாங்கிக் கொள்ள முடியாதுங்க!'' அவனை அவள் இறுகப் பிடித்துக் கொண்டாள். கயல் ஓடும் அவள் விழிகளில் புனல் ஓடியது.

''அல்லி...''

அவனால் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை.

''நான் ஏதாவது தவறாகப் பேசி இருந்தால், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஆனால், என்னோடு பேசாமல் மட்டும் இருக்காதீர்கள். என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது!'' அவள் விம்மினாள்.

''நான் அப்படியெல்லாம் இல்லை, அல்லி!'' அவன் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

''என் அம்மா மீது ஆணையாகச் சொல்லுகிறேன். நான் எந்தத் தவறும் செய்தவள் அல்ல. நான் தலை நிமிர்ந்து பார்த்த முதல் ஆடவனே நீங்கள்தான்.''



''அது எனக்குத் தெரியாதா, அல்லி? உன் மீது நான் கொஞ்சங்கூடச் சந்தேகப்படவேயில்லை.''

''பிறகு ஏன் அப்படித் துளைத்துத் துளைத்துப் பேசினீர்கள்?''

''அது... அல்லி... நீ சரியாகப் பதில் சொல்லாததால் எனக்குக் கோபம் வந்து விட்டது.''

''நீங்கள் அப்படியெல்லாம் கேட்டால், எனக்குக் கோபம் வராதா?''

''உனக்குக் கோபம் வந்ததும், எனக்குக் கோபம் வந்து விட்டது.''

''என் மீது உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், நேரடியாகக் கேட்டு விடுங்கள்.''

''உறுதியாகச் சொல்லுகிறேன். உன் மீது எனக்குச் சந்தேகமே கிடையாது.''

''சத்தியமாக?''

''நிச்சயமாக.''

''உங்களுக்காவே பிறந்து வளர்ந்தவள் நான். இமயப் பனி உருகிப் பெருகி வரும் கங்கையைப் போலத் தூய்மை யானவள் நான். கற்பில் சிறந்தவள் கண்ணகியா, சீதையா என்று கேட்டால், கண்ணகி என்றே சொல்லுவார்கள். ஏனென்றால், கண்ணகியின் கற்பு சந்தேகத்திற்கு அப்பாற் பட்டது. சீதையோ கணவனின் சந்தேகத்துக்கே ஆளாகித் தான் கற்புக்கரசி என்பதை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டவள். சந்தேகத்துக்கே அப்பாற்பட்ட கண்ணகியாக வளர்ந்தவள் நான் என்று தற்பெருமையாக

அல்ல, உண்மையைச் சொல்லுகிறேன். அப்படி வாழவும் ஆசைப்படுகிறேன் நான். எனக்கு அரணாக நீங்கள் இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். இருப்பீர்களா?''

அல்லி படித்தவள். ஆகவே அமைதியாக, அதே நேரம் அறிவு முதிர்ச்சியுடன் பேசினாள்.

''ஒரு பெண்ணின் கற்புக்குக் காவல் கணவன்தானே!'' என்றான் மதியழகன்.

''கடலுக்குக் கரைபோல!'' என்றாள் அல்லி.

''அப்படிச் சொல்லாதே. ஏனென்றால், கரை தாண்டிச் சென்று ஊரையே அழிக்கும் கடலும் உண்டு!'' என்றான் அவன்.

''அந்தக் கடல் கூட மீண்டும் கரைக்குள் வந்துதான் அடைக்கலம் புகும்!'' என்றாள் அல்லி.

''அப்படியானால் ஆண்களைத்தான் ஆழ்கடல் என்று சொல்ல வேண்டும் அவர்கள் தான் மனைவி என்ற கரையைத் தாண்டிச் சென்று மீண்டும் மனைவியின்மடியிலேயே வந்து விழுகிறார்கள். கோவலன் இல்லையோ? மாதவி வீட்டுக்குப் போனவன் மீண்டும் கண்ணகியிடந்தானே திரும்பி வந்தான்.''

''நானும் உங்களை ஒரு கோவலனாகக் கருதுவேன் என்று நிச்சயம் நினைக்காதீர்கள். நான் அப்படி ஒரு பொழுதும் நினைக்கவில்லை.''

''நானும் அப்படி நடப்பவன் அல்ல. கோவலன்களைக் கேவலன் என்று கருதுகிறவன் நான். அந்தக் கடிதம் கூட....''

''அது பற்றித்தான் நான் எதுவுமே நினைக்கவில்லை என்று சொல்லி விட்டேனே.''



''இதில் வேடிக்கை என்னவென்றால் தவறு செய்த ஆண் கூடத் தனக்குத் தூய்மையான மனைவி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.''

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவதுபோல இருந்தது. ஆனால் அல்லி அதற்கு இடம் கொடுக்க வில்லை. ''இனி அந்தப் பேச்சே வேண்டாம்!'' என்று அழுத்தமாக முற்றுப் புள்ளி வைத்தாள்.

இவ்வளவு பேசிய பின்பு அவள் முகம் தெளிவாக இருந்தது. அவள் கண்கள் புத்தொளி பெற்றன. அவள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள்.

அவள் கொண்டு வந்து வைத்த பால் அப்படியே இருந்தது. அதை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

''மாத்திரை சாப்பிட்டீர்களா?''

அவன் பாலைப் பருகிக் கொண்டு இருந்த பொழுது அவள் கேட்டாள்.

''மறந்து விட்டேன் பார்!'' அவன் அவசரமாகப் பைக்குள் இருந்து ஒரு மாத்திரையை எடுத்தான்.

''நாலைந்து நாட்களாக நீங்கள் மாத்திரை சாப்பிட்டு நான் பார்க்கவே இல்லை.''

''என்னையேதான் நீ பார்க்கவில்லையே!''

''உண்மையாகவே உங்களுக்கு வயிற்றை வலிக்கிறதா?''

பால் தம்ளருக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தான் அவன்.

அவள் அவனது பதிலை எதிர்பார்த்துக் காத்து இருந்தாள்.

''என்ன அப்படிக் கேட்டு விட்டாய்?'' அவன் தம்ளரை அவளிடம் நீட்டினான்.

''என் மீது உள்ள கோபத்தில் விலகிப் போகிறீர்களோ என்று நினைத்தேன்.''

''சே.. சே... அப்படியெல்லாம் இல்லை.''

சுவர்க் கடிகாரத்தின் சிணுங்கல் அறைக்குள் கேட்டது.

''படுக்கலாமா?'' அவள் தயார் ஆனாள்.

''சரி,'' அவன் படுத்து விட்டான்.

அவளும் விளக்கை அணைத்துவிட்டு வந்து அவன் அருகில் படுத்தாள்-வேண்டும் என்றே அவனை உரசிக் கொண்டு.

அவன் அவளைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டான். நடிப்புதான்.

''ஒரு வாரமாக நான் எப்படித் தவித்துப் போனேன். தெரியுமா?''

''நிரம்பப் பசிக்கிறதா?''

''உக்கும்.''

''வயிறு நிறையச் சாப்பிட வேண்டியதுதானே?''

''நாளைக் காலையில் டாக்டரிடம் போக வேண்டும். அவர் சொல்லி விட்டால் அள்ளி விழுங்கி விடுவேன்.''

''விலகி இருக்க வேண்டும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறாரா?''

''ஆமாம்.''



''என்னிடம் நீங்கள் சொல்லவே இல்லையே?''

''சொல்லவில்லையா!''

''ஊகூம்.''

அவளுக்கு என்னவோ போல இருந்தது.

ஆனால், அவள் ஆண்பிள்ளை அல்ல, பெண் மறுத்தாலும் எப்படியோ அவளை வளைத்துக் கொள்ள!

அவன் கையில் தலை வைத்தபடி அவள் தூங்கிப் போனாள்.

அடுத்து வந்த நாட்கள் வேகமாக ஓடின.

இருவரும் மதியழகனின் வீட்டுக்கே போய்விட்டார்கள்.

அவன் டாக்டரைப் பார்த்து வருவதாக ஒரு நாள் போனான்.

''டாக்டர் எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்.''

அதில் இரண்டு, மூன்று நாளைத் தள்ளினான்.

''கெமிகல் டெஸ்ட் பண்ண வேண்டும் என்கிறார் டாக்டர்.''

இதில் ஒரு மூன்று நாளைக் கடத்தினான்.

மீண்டும் ஏதேதோ மாத்திரைகள்.

எப்படியோ அவனுக்கு ஒரு மாத விடுப்பும் போய் விட்டது.

நாளை அவன் பெங்களூருக்குப் புறப்படுகிறான்.

அங்கே வீடு பார்த்துக் கொண்டு இவளை வந்து அழைத்துப் போகிறானாம்.

முதல் நாள் இரவு அவனை அல்லி மிகவும் எதிர்பார்த்தாள்.அவனே அவளைத் தேடி நாடி ஓடி வருவான் என்று காத்து இருந்தாள். அவனோ அவளுடன் பெங்களூர்க் கதை பேசிக் கொண்டே தூங்கிப் போனான்.

அவனை ரெயிலில் ஏற்றிவிட அவளும் போயிருந்தாள்.


அவன் அடிக்கடி அவள் கைகளைப் பற்றிக் கொண்டான். ''சீக்கிரமே திரும்பி வந்து விடுவேன்!'' என்று நூறு முறையாவது சொல்லியிருப்பான்.

''உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். மறந்துவிடாமல் மருந்துகளைச் சாப்பிடுங்கள். அங்கேயே நல்ல டாக்டர் இருந்தால் அவரிடமும் காட்டுங்கள்!'' அவள் பல்லவி பாடிக் கொண்டு இருந்தாள்.ரெயில் நகர்ந்தது.

அவள் பிளாட்பாரத்தில் நின்று கொண்டே கையைத் தூக்கி அசைத்தாள்.

ரெயில் ஊர்ந்தது அவளுக்குத் தெரியவில்லை.

அவள் கண்களைக் கண்ணீர் திரையிட்டது.



## 13

பெங்களூரில் உள்ள ஒரு மின் அணுப் பொறியியல் நிறுவனத்தில் மதியழகன் பணியாற்றினான்.

ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வேலை செய்யும் நிறுவனம் அது. அவன் நடுத்தட்டு அதிகாரியாக இருந்தான். 40, 50 பேர் அவனுடன் நெருங்கிப் பழகக் கூடியவர்கள். அவர்களுக்கு அவன் திருமண அழைப்பிதழ் கொடுத்து இருந்தான். இருவர் திருமணத்துக்கு



நேரிலும் வந்திருந்தார்கள். மற்றவர்கள் அவனது திருமணச் சாப்பாட்டுக்காகக் காத்திருந்தார்கள்.

''நான் வருமுன் நல்ல வீடு ஒன்று பார்த்து வையுங்கள்!'' என்று அவன் நண்பர்களிடம் சொல்லி இருந்தான். அதன்படி அவர்கள் ஒரு வீடு அமர்த்தி, அவனுக்குத் தகவல் தெரிவித்து இருந்தார்கள். அந்த அஞ்சலை அவன் கிழித்துப் போட்டு விட்டான்.

அவன் துணையுடன் வரும் நாளை நண்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ரெயில் நிலையத்தில் எதிர்பாராத பெரிய வரவேற்பு அளித்து, அவனைத் திகைப்பில் ஆழ்த்தவும் அவர்கள் திட்டமிட்டு இருந்தார்கள். ஆனால், அவனோ நண்பர்களை வியப்பில் மூழ்க வைத்தான்.

''என்ன கண்ணா, தனி மரமாக வந்து நிற்கிறாய்?'' ஒரு நண்பன் உரிமையுடன் செல்லமாகக் கேட்டான்.

''ஒரு நல்ல நாள் பார்த்து அவர்களே இங்கே கொண்டு வந்து விடுவதாகச் சொல்லி விட்டார்கள்!'' என்று கூசாமல் புளுகினான் மதியழகன்.

''அப்படினால், எங்களுக்குத் திருமணச் சாப்பாடு இப்பொழுது இல்லையா?''

''சீமந்தச் சாப்பாடு சேர்த்துப் போடுவான் போலிருக்கிறது.'' நண்பர்கள் நகைத்தார்கள்.

மதியழகனுக்கோ தலையைக் குனிந்து கொள்ள வேண்டும் போல இருந்தது. அது முடியாமல் அசடு வழிந்தான்.

வந்த அன்றே அலுவலகத்துக்குச் சென்றான்.

அன்று அவன் பார்த்த முக்கிய வேலை. "நான் நலமாகப் பெங்களூர் வந்து சேர்ந்தேன்!" என்று மனைவிக்கு நாலு வரி எழுதிப் போட்டதுதான்.

வேலையில் உளம் செல்லவில்லை. "புது மாப்பிள்ளை அல்லவா? நினைவெல்லாம் எங்கேயோதான் இருக்கும்!" என்று நண்பர்கள் கண்ணைச் சிமிட்டிப் பேசிக் கொண்டார்கள்.

பிரமசாரியாக வாழ்ந்த அறையை ஏற்கெனவே அவன் காலி செய்து விட்டான். எனவே நண்பர்கள் பார்த்து வைத்திருந்த வீட்டில் குடியேறினான்.

பெண் இல்லாத வீடும், வீடு இல்லாத பெண்ணும் சிறப்பு அடைவது இல்லை.

மதியழகனின் குடித்தனமும் அப்படித்தான் இருந்தது. ஓட்டல் அறையில் தங்கி இருப்பது போலத் தோன்றியது. ஆனால் சாப்பாட்டுக்கு வெளியில் செல்ல வேண்டும். காலையில் குளித்துவிட்டுக் கிளம்புவான். இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டுதான் வீட்டுக்குத் திரும்புவான். மாலையில் வேலை முடிந்ததும், பூங்கா, திரையரங்கு என்று நேரத்தைக் கொன்றான்.

அல்லியிடம் இருந்து நாள்தோறும் அஞ்சல் வந்தது. ஒவ்வொரு கடிதத்திலும் அவனது வயிற்று வலியை விசாரித்து எழுதத் தவற மாட்டாள். அவன் பத்துக் கடிதங்களுக்கு ஒரு கடிதத்துக்குத்தான் பதில் எழுதினான்.

உண்மையா? இல்லையா?"

இந்தக் கேள்வி எந்நேரமும் அவன் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. நாலைந்து நாளில் அலுவலக



வேலையில் ஒன்றிவிட்டான். ஆனால், வீட்டுக்கு வந்ததும், இந்தக் கேள்வி அவனைப் பிடித்துக் கொள்ளும்.

விடை காண முடியாத புதிராகவே இந்த வினா இருந்தது. ஆனாலும், அவனுக்கு ஒரு நம்பிக்கை. "அவள் வயிற்றில் என் குழந்தை வளர்ந்து கொண்டு இருக்கிறது!" என்று மொட்டைக் கடிதத்தில் எழுதப்பட்டு இருந்தது அல்லவா? அது உண்மை என்றால், எத்தனை நாளைக்கு மூடி மறைக்க முடியும்? முழுப் பூசணிக் காயையாவது சோற்றில் மறைத்து விடலாம். வயிற்றில் வளரும் பிள்ளையை மறைக்க முடியாதே!

அந்த நாள் வந்தே தீரும் என்று பொறுமையாக இருந்தான்.

வீடு பார்த்துக் கொண்டு ஒரு மாதத்துக்குள் வந்து அல்லியை அழைத்துப் போவதாக மதியழகன் சொல்லி இருந்தான். நேற்றுப் போல இருக்கிறது; அதற்குள் காலண்டர் செடியில் இருந்து முப்பது இலைகள் பழுத்து உதிர்ந்து விட்டன.

"இன்று ஒரு வீடு பார்த்தேன். எனக்குப் பிடிக்கவில்லை."

"நேற்று மாலை ஒரு நண்பர் அழைத்துப்போய், ஒரு வீடு காட்டினார். நல்ல வசதியான வீடுதான். ஆனால், வெகு தூரத்தில் இருக்கிறது. காலையில் அலுவலகத்துப் போக, முதல் நாள் இரவே வீட்டில் இருந்து புறப்பட வேண்டியிருக்கும்."

இப்படிச் சும்மாவாவது அஞ்சல்களை வரைந்து தள்ளிக் கொண்டு இருந்தான்.

அல்லியிடம் இருந்து வந்த சில கடிதங்கள் கண்ணீரில் நனைந்து இருந்தன. இரவில் அறைக் கதவைப் பூட்டிக்

கொண்டு எழுதியிருப்பாள் போலிருக்கிறது. சில கடிதங்களில் தனது ஏக்கத்தை இலைமறைவு காயாக வெளியிட்டு இருந்தாள். ''எனக்கு வசதியான வீடு தேவையில்லை. உங்களுடன் இருப்பதுதான் முக்கியம்.''

இவனும் ஒப்புக்காகச் சில வரிகளை எழுதினான். ''இரவில் எனக்குத் தூக்கமே வருவது இல்லை. புழுப்போலப் புரண்டு கொண்டு இருக்கின்றேன். உன்னை எப்பொழுது பார்ப்போம் என்று ஒவ்வொரு நாளும் துடித்துக் கொண்டு இருக்கிறேன்.''

ஒரேயடியாக அவளது உறவை முறித்துக் கொள்ள அவன் விரும்பவில்லை.

அவளைச் சொல்லினால் கூட அவன் சுட்டதில்லை. அவள் சுட்ட மண் ஆக, பிறகு சுட்ட மண்ணும், பச்சை மண்ணும் போல ஒட்டாமல் போய்விடக் கூடாதே!

அவனுக்குத் தொடர்ந்து நாலுநாள் விடுமுறை வந்தது. நமது நாட்டில் விடுமுறைக்கு என்ன குறைவு? ''யாருடா சாவார், எத்தனை நாள் விடுமுறை கிடைக்கும்?'' என்று காத்துக் கொண்டு இருக்கிறார்களே! அன்றைக்கு ஏர் பிடித்தால்தான் சுத்தியலை அடித்தால்தான் அரை வயிற்றுச் சோறாவது கிடைக்கும் என்ற நிலையில் கோடிக்கணக்கான பேர் வாழ்ந்து கொண்டு இருக்கும்பொழுது, கிரிக்கெட் பார்க்க நாலு நாள் விடுமுறை விடும் நாடு ஆயிற்றே!

ஆனால், மதியழகனுக்குக் கிடைத்தது, சாவு விடுமுறையும் அல்ல; கிரிக்கெட் விடுமுறையும் அல்ல. ஒரு ஞாயிற்றுக் கிழமை; ஓர் இரண்டாவது சனிக்கிழமை; அதற்கு மேல் ஏதோ ஒரு பண்டிகைக்கு இரண்டு நாள் விடுமுறை.



இதை அல்லி காலண்டரில் பார்த்து இருப்பாள் போலிருக்கிறது. ''உங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!'' என்று எழுதினாள்.

எத்தனையோ முறை, ''ஞாயிற்றுக் கிழமை வந்து போங்கள்,'' என்று அவள் எழுதியிருக்கிறாள். ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி இவன் நழுவி விடுவான். நாலுநாள் அங்கே போய் மாட்டிக் கொள்வானா?

''அன்புள்ள அல்லி!

உன் கடிதம் பார்த்ததும் பறந்து வந்து விடலாம் என்று நினைத்தேன். ஆனால் கடவுள் எனக்கு இறக்கை கொடுக்க வில்லையே. என் வயிற்று வலி இப்பொழுது பரவாயில்லை. ஒரு வாரமாக வலியே யில்லை என்று சொல்லலாம். இந்த நிலையில் ஒரு பிரயாணத்தை மேற்கொண்டு, மீண்டும் வலியை வரவழைத்துக் கொள்ளக் கூடாதே என்று அஞ்சுகிறேன்.

இந்த நாலு நாளில் பெங்களூர் முழுமையையும் வலைவீசி அலசிவிடப் போகிறேன். எப்படியும் ஒரு வீட்டைப் பார்த்து முடிவு செய்து விடுவேன். நீ எத்தனை நாள்தான் தனியாக இருப்பாய்? நீ இருப்பாயோ என்னவோ, ஆனால் இனியும் உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது.

வீடு பார்த்ததும் உன்னை அழைத்து வர ஓடி வருவேன்.

அன்புள்ள,

உன் அத்தான்.''

நமது அஞ்சல் துறை ஆமை வேகத்தில் பணியாற்றுவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், அதை மதியழகனால் நம்ப

முடியவில்லை. அல்லியிடம் இருந்து அவ்வளவு வேகத்தில் அவனுக்குப் பதில் வந்தது.

''அத்தான்!

வீடு பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் புறப்பட்டு வாருங்கள்.

புதன்கிழமை இரவே ரெயில் ஏறுங்கள். வியாழக்கிழமை காலையில் உங்களுக்காக வாசலில் வழிமேல் விழிவைத்து நான் காத்து இருப்பேன்.

தவறாமல் வாருங்கள்.

உங்களுக்கு ஓர் இனிக்கும் செய்தி சொல்லப் போகிறேன்!

ஓடி வருகிறீர்களா?

உங்கள் அன்புள்ள

மனைவி.''

''உங்களுக்கு...''

இந்த வரியை ஏழு எட்டு முறை படித்து விட்டான் மதியழகன். தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது. இதற்கு என்ன பொருள்?

இனிக்கும் செய்தி என்றால் எதுவாக இருக்கும்?

யோசித்து, யோசித்துப் பார்த்தான். ஒன்றும் எட்டவில்லை.

இதாக இருக்குமோ? ''நீங்கள் தந்தையாகப் போகிறீர்கள்...''

அவனுக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. அருவருப்பு அடைந்தான்.



அப்படி மட்டும் இருந்தால்...?

நினைக்கும்பொழுதே அவன் உடல் வெடவெடத்தது. வியர்த்தது.

வேறு எதுவாக இருக்கும்?

எழுதித் தொலைத்தால் என்ன? இதில் என்ன "சஸ்பென்ஸ்?'' பெரிய பி.டி.சாமி என்ற நினைப்போ!

எரிச்சலுடன் பேனாவையும் தாளையும் எடுத்துக் கொண்டு அமர்ந்தான்.

''அன்பே அல்லி!

நீ என்ன எழுதியிருக்கிறாய் என்றே தெரியவில்லை. விளக்கமாக எழுதினால் என்ன? அந்த இனிக்கும் செய்தி என்ன? உடனே எழுது. இல்லை, தந்தி கொடுத்துத் தொலை.''

எழுதியதைப் படித்துப் பார்த்தான்.

நிறைவு தரவில்லை.

கிழித்துப் போட்டான்.

நாலைந்து தாள்கள் குப்பைக் கூடைக்குப் போயின.

கடைசியாக அவன் எழுதிக் கையெழுத்துப் போட்டது:

''அன்பே அல்லி!

உன் அஞ்சல் கண்டு அளவில்லா ஆனந்தம் கொண்டேன்.

நீ சொல்லும் இன்பச் செய்தியைக் கேட்க ஓடிவரத் துடித்தேன். ஆனால், என் கால்கள் கட்டப்பட்டு இருக்கின்றன.

எங்கள் நிறுவனத்தில் பெரிய இயந்திரம் ஒன்று வடித்துக் கொண்டு இருக்கிறோம். இம்மாத இறுதிக்குள் பம்பாய் தொழிற்சாலை ஒன்றுக்கு அதை அனுப்பியாக வேண்டும்.

எனவே, எங்கள் நிறுவனம் விடுமுறை நாளிலும் வேலை செய்ய இருக்கிறது. நான் கட்டாயமாக இங்கே இருக்க வேண்டியுள்ளது.

அந்த இன்பச் செய்தியை என் காதோடு சொல்லி விடேன்

உன் அன்புள்ள

அத்தான்.''

கடிதத்தைப் படித்த அல்லிக்குக் கடுமையாகக் கோபம் வந்தது.

எவ்வளவு இன்பமாக இருக்க வேண்டிய நேரம்! இந்த நேரத்தில் இவ்வளவு எரிச்சல் கூடாதே! தாயின் உளநிலை அப்படியே குழந்தையிடம் பதியும் என்பார்களே கோபக்காரக் குழந்தையாகப் பிறந்துவிடுமே!

மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு மேசை முன்பு அமர்ந்தாள்.

''அன்புள்ள அத்தான்!

உங்கள் காதைக் கொஞ்சம் இப்படிக் கொடுக்கிறீர்களா?

பயப்படாதீர்கள், கடித்துவிட மாட்டேன்! காதைத் திருகி விடவும் மாட்டேன்! தைரியமாகக் காதைக் கொடுங்கள்.

சொல்லட்டுமா?

ஊகும்! வெட்கமாக இருக்கிறது.

இன்னும் நெருக்கமாகக் காதைக் கொண்டு வாருங்களேன்

இப்பொழுது சொல்லட்டுமா?

எப்படிச் சொல்வேன்? நாணம் தடுக்கிறதே.



17059
சிதம்பரநகர்
தூத்துக்குடி

சொல்லி விடுகிறேன். சொல்லாமல் இருக்க முடியுமா? அதிலும் உங்களிடந்தானே முதலில் சொல்ல வேண்டும்.

விரைவில் நீங்கள் தந்தையாகப் போகிறீர்கள்.

இப்பொழுது நான் முழுகாமல் இருக்கிறேன்.

உங்கள் அன்புள்ள

மனைவி''



14

துள்ளிக் குதித்தான் மதியழகன் — தேள் கொட்டியது போல!

இதுதான் இனிக்கும் செய்தியா?

எண்ணெயைக் காய்ச்சி அவன் தலையில் ஊற்றியது போல இருந்தது.

ஆடிப் போய்விட்டான். கடிதத்தின் கடைசி வரியைப் படித்ததும், அவன் இதயமே நின்று விடும் போல இருந்தது. விழிகள் பிதுங்க அந்த வரியை வெறித்து நோக்கினான். ஒவ்வொரு எழுத்தாக அழுத்தமாகப் படித்தான்.

அவள் முழுகாமல் இருக்கிறாளாமே!

என்ன தைரியம் இருந்தால் அவனுக்கே இதை எழுதுவாள்.

காதில் பூ சுற்றியவன் என்று நினைத்து விட்டாளா?

பறந்து போய், ''கேடு கெட்டவளே! போடி வெளியே!'' என்று அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டும் போல இருந்தது.

கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதா? அதுவும் அவளைத் தொடுவது போலத்தானே. அருவருப்பில் அவன் உடல் சிலிர்த்தது.

அவள் எச்சில் இலை!

எவனோ நின்றுவிட்டு வீசி எறிந்த மாங்கொட்டை அவள்

சே! அதை என் தலையில் கட்டி விட்டார்களே!

அம்மா - அப்பா மீது அவனுக்கு அடங்காத கோபம் ஏற்பட்டது.

அழகாக இருக்கிறாள். நகையும் தொகையும் கை நிறைய அள்ளிக் கொடுக்கிறார்கள் என்று ஆசைப்பட்டு, எச்சில் இலையைப் பொறுக்கிக் கொண்டு வந்து இருக்கிறார்களே!

திருமணத்துக்கு அவர்கள் அவசரப்பட்டபொழுதே இவர்கள் ஐயப்பட்டு இருக்க வேண்டாமா?

இளவரசன் சார்லஸ் அழகி டயானாவை மணந்து கொண்ட பொழுது, அவளது கன்னித் தன்மையைச் சோதித்தார்களாம்! அப்படி அல்லவா இவளையும் சோதித்து இருக்க வேண்டும் போலிருக்கிறது.

கற்பிலே கண்ணகி என்று பீற்றிக் கொண்டாளே! கெட்டுச் சீரழிந்துவிட்டு ''கற்புக்கரசி'' என்று வேறு தம்பட்டம் அடித்துக் கொள்ளுகிறாள் என்றால் அவள் எவ்வளவு அழுத்தக்காரியாக இருக்க வேண்டும்?

எவனுக்கோ முந்தானை விரித்து, வயிற்றில் ஒரு பிள்ளையைச் சுமந்து கொண்டு மணமேடையில் அமர, மற்றொருவனுக்கு மாலையிட, அவளுக்குத்தான் எப்படித் துணிச்சல் வந்தது? வெட்கங்கெட்டவள்!



கன்றுடன் சேர்ந்து மாடு வாங்கியது போல ஆகிவிட்டதே!

இந்த அழகில், ''நீங்கள் தந்தையாகப் போகிறீர்கள்!'' என்று கடிதம் வேறு!

எவன் பிள்ளைக்கோ இவன் எப்படித் தந்தை ஆவான்? அப்படியா மானங்கெட்டு விட்டான்!

அவமானத்தில் குன்றிப் போனான் மதியழகன்.

அடக் கடவுளே! அந்த மொட்டைக் கடிதம் ஒருநாள் முந்தி வந்திருக்கக் கூடாதா?

வந்திருக்கும் — முதல் இரவிலேயே அவனது அறையிலேயே அந்தக் கடிதம் இருந்தது. அவன்தான் பார்க்கத் தவறி விட்டான். இதைத்தான் விதி என்பதோ?

அவன் ஒரேயடியாக இடிந்து போனான்.

வெகுநேரம் துயரத்துடன் கட்டிலில் விழுந்து கிடந்தான்.

அவன் உள்ளம் எண்ணாதது எல்லாம் எண்ணிப் புண்ணாயிற்று.

இப்படி ஏமாந்து போனோமே என்று தன்னைத் தானே நொந்து கொண்டான்.

இப்பொழுதாவது உண்மை வெளிப்பட்டதே என்று நினைக்க, சற்று ஆறுதலாக இருந்தது.

நடந்ததை நினைத்து வருந்திப் பயன் இல்லை என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

இனி நடக்க வேண்டியதைப் பார்க்க வேண்டும்.

நடக்க வேண்டியது என்ன? ''ஓடடி உங்கள் அம்மா வீட்டுக்கு!'' என்று அவளை அடித்து விரட்ட வேண்டியது தான். நடத்தை கெட்டவளை வேறு என்ன செய்வது?

அவள் முகத்தில் விழிக்கவே அவன் கூசினான்.

"இனி என் வாழ்க்கையில் குறுக்கிடாதே. மரியாதையாக விலகிப் போய்விடு. இல்லாவிட்டால் உன் மானம் கப்பல் ஏறிவிடும். உன் வண்டவாளத்தைத் தண்டவாளத்தில் ஏற்றி விடுவேன்!" என்று எழுதிப் போட்டு விடலாமா?

அறிஞர் அண்ணா "ரங்கோன் ராதா"வில் எழுதினாரே - "உன்னைத் தலை முழுகிவிட்டேன்!" என்று. அதை அப்படியே எழுதிவிட்டால் என்ன என்று நினைத்தான்.

நினைவுகளில் மிதந்தபடி புரண்டு புரண்டு படுத்தான்.

அவளுக்குக் கடிதம் எழுதுவது கூடப் பாவம் என்று தோன்றியது.

கோபத்தில் எதையாவது எழுதி, கொந்தளிப்பை உண்டாக்கிச் சந்தி சிரிக்கும்படி செய்துவிடக் கூடாது என்று எண்ணினான். அதனால் அவனுக்கும் அவமானமே.

பாவம், அவள் ஒரு பெண். எவனை நம்பி ஏமாந்தாளோ, அவள் வாழ்க்கையை இவன் ஏன் கெடுக்க வேண்டும்? காதும் காதும் வைத்தது போல, "உன் அம்மா வீட்டுக்குப் போய் விடுவதுதான் உனக்கு நல்லது!" என்று அவளிடமே சொல்லி விடலாமே?

ஆனால் அவளை நேரில் சந்திக்க அவனுக்கு விருப்பம் இல்லை. அதைத் தவிர்க்க நினைத்தான். ஆகவே, அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டான். சுருக்கமான கடிதமே.

"அன்புள்ள அம்மா அவர்களுக்கு.

அல்லியை அவளது வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் அன்புள்ள மகன்"



தபால்காரர் வந்தபொழுது அல்லி தூங்கிக் கொண்டு இருந்தாள். இப்பொழுது எல்லாம் அவள் சும்மா சும்மா சுருண்டு படுத்துக் கொள்ளுகிறாள்.

மருமகளை எழுப்ப விரும்பாத பொன்மணி, தானே உறையைக் கிழித்துப் படித்தாள்.

முதலில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

மீண்டும் படித்தாள்.

"அல்லியை அவளது அம்மா வீட்டுக்கு அனுப்பி வையுங்கள்."

"மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான்" என்பது போல இருந்தது. தலையும் இல்லை, வாலும் இல்லை.

கடிதத்தைக் கையில் வைத்தபடி சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்து நின்றாள் பொன்மணி.

ஒரு விவரமும் இல்லாமல் இப்படி எழுதியிருக்கிறானே என்று மகனைக் கடிந்து கொண்டாள்.

அல்லி அவளுடைய அம்மா வீட்டுக்குப் போகாமலா இருக்கிறாள்? அல்லது போகக் கூடாது என்று மாமியார் தடுக்கிறாளா? இல்லையே! அவ்வப்பொழுது போய் ஒரு நாள் இரண்டு நாள் என்று இருந்துவிட்டுத்தான் வருகிறாள்.

"மாப்பிள்ளை வந்து அழைத்துப் போகும்வரை எங்கள் வீட்டில் இருக்கட்டுமே!" என்று அல்லியின் அம்மா ஒருமுறை அழைத்தார். ஆனால், பொன்மணி அதற்கு இடம் கொடுக்க வில்லை. அல்லி மாமியாருக்குச் செல்லப் பெண் ஆகிவிட்டாள். "அவள் இல்லாவிட்டால் வீடே வெறிச் என்று போய்விடும்!" என்று சொல்லிவிட்டாள் பொன்மணி.

மாதமாக இருப்பது பற்றி அல்லி அவனுக்கு எழுதி இருப்பாளோ? எழுதத்தான் செய்வாள். அதைப் படித்து விட்டுத்தான் அவளை அம்மா வீட்டுக்கு அனுப்பச் சொல்லி இருக்கிறானோ?

அசட்டுப் பிள்ளை!

இப்பொழுதா அனுப்புவார்கள்?

ஏழாம் மாதம் அல்லது ஒன்பதாம் மாதம் சோறு பொங்கிப் போட்டு, பூச்சூடி, வளைகாப்பு நடத்தி, அதன்பின் அல்லவா அழைத்துப் போவார்கள்.

பொன்மணி இப்பொழுதே நினைத்துக் கொண்டு இருக்கிறாள் - ஒன்பதாம் மாதந்தான் அனுப்ப வேண்டும். குழந்தை பிறந்த முப்பதாம் நாள் மீண்டும் அழைத்துக் கொள்ள வேண்டும். ஏழாம் மாதம் அனுப்பி, பிள்ளை பிறந்த மூன்றாம் மாதம் அழைத்துக் கொள்வது முடியாது. அவ்வளவு நாள் மருமகளைப் பிரிந்திருக்க முடியாது போலிருந்தது.

அல்லி வேறு எதுவும் அவனுக்கு எழுதியிருப்பாளோ? அம்மா வீட்டுக்குப் போய்க் கொஞ்ச நாள் இருந்துவிட்டு வர நினைத்து இருப்பாளோ?

எழுந்த பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்று சமையல் வேலைகளில் ஈடுபட்டாள் பொன்மணி.

சாப்பாட்டுக்குச் சற்று முன்பு அல்லி எழுந்து வந்தாள். நேராக அடுப்படிக்கே வந்துவிட்டாள்.

''அயர்ந்து தூங்கிவிட்டேன் அத்தை!'' என்று நாணத்துடன் குழைந்தவள், ''ஏதாவது செய்ய வேண்டுமா அத்தை?'' என்று கேட்டாள்.



''பேசாமல் போய்க் கூடத்தில் உட்கார்ந்து இரு!'' என்ற பொன்மணி, தானே அவளை அழைத்துச் சென்று சோபாவில் அமர்த்தினாள்.

மருமகள் மாதமாக இருப்பதில் அவளுக்குக் கொள்ளைப் பெருமை. அதுவும் வீட்டுக்கு வந்து ஒரு 'விலக்கு' கூட ஆகவில்லை. உடனே பிள்ளை உண்டாகி விட்டாள். தெரிந்தவர்களிடம் எல்லாம் இதைப் பெருமையாகச் சொல்லிக் கொண்டாள் பொன்மணி. ''முருகா! எனக்கு ஒரு பேரனைக் கொடு!'' என்று அவள் வேண்டாத நாள் இல்லை.

''குழந்தை உண்டான பெண்கள் குத்துக் கல்லாட்டம் உட்கார்ந்து இருக்கக் கூடாது; சிறு சிறு வேலைகள் செய்து கொண்டே இருக்க வேண்டும்!'' என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஆனால், இதை எந்தத் தாய் அல்லது மருமகள் மீது அன்பு கொண்ட மாமியார் மதிக்கிறார்? பிள்ளைத்தாச்சிக் காரியைப் பூப்போல வைத்துக் கொள்ளத்தானே ஆசைப்படு கிறார்கள்.

அதுவும் அல்லிக்கு இது தலைப் பிரசவம். இப்பொழுது தான் கருப் பிடித்து இருக்கிறது. அது நன்றாக வளர்ந்து நிலை பெறும்வரை அவள் குனிந்து நிமிரக் கூடக் கூடாது என்பது பொன்மணியின் கட்டளை. வீடு பெருக்க - தண்ணீர் எடுக்க - துணி துவைக்க எதற்குமே அனுமதிப்பது இல்லை.

அடுப்படிக்கு வரக்கூடாது என்று கண்டிப்பான கட்டளை.

மின் விசிறியைத் தட்டிவிட்ட பொன்மணி, ''ஆமாம், அவனுக்கு நீ என்ன எழுதினாய்?'' என்று மருமகளிடம் கேட்டாள்.

அல்லி விழித்தாள். ''நான் ஒன்றும் எழுதவில்லையே.''

''நீ மாசமாக இருக்கிறாய் என்று எழுதினாயா?''

அவள் வெட்கத்துடன் தலையசைத்தாள்.

''உன்னை உன் அம்மா வீட்டுக்கு அனுப்பச் சொல்லி எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறான்,'' என்ற பொன்மணி அஞ்சலை எடுத்துக் காட்டினாள்.

அல்லி படித்துப் பார்த்தாள். இரண்டே வரியில் இருந்த கடிதம் அவளையும் குழப்பம் அடைய வைத்தது. மாமியாரை நோக்கினாள்.

''உன்னை எப்பொழுது அம்மா வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?'' பொன்மணி சிரித்தாள். ''அசடு போல எழுதி இருக்கிறான்.''


''அத்தை.''

''என்னம்மா.''

''எனக்கு அவரைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது. நீங்களாவது அவரை வரச் சொல்லி எழுதுகிறீர்களா?''

''எழுதுகிறேன் கண்ணு. நான் சொல்ல நீயே எழுது.''

பேனாவும் தாளும் கொண்டு வந்து கொடுத்தாள் பொன்மணி.



## 15

அம்மாவிடம் இருந்து வந்த கடிதத்தைப் படித்து முடித்ததும், மதியழகனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அந்த ஆத்திரத்துடன் கடிதத்தை ஒரே மூச்சில் மீண்டும் ஒருமுறை படித்தான்.



''அன்புள்ள மகன் மதியழகனுக்கு, அம்மா எழுதியது.

உன் கடிதம் கிடைத்தது. இங்கு நாங்கள் எல்லோரும் நல்ல சுகம். நானும், உன் அப்பாவும், தம்பிகளும், அல்லியும் நலமாக இருக்கிறோம். முருகன் அருளால் நீயும் சுகமாக இருப்பாய் என்று நினைக்கிறேன்.

அல்லி உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப் படுகிறாள். அவள் மாதமாக இருப்பது உனக்குத் தெரிந்து இருக்கும். இந்த நேரத்தில் பெண்கள் கணவனின் அருகில் இருக்க விரும்புவார்கள். கணவனின் அன்புக்கு ஆதரவுக்கு உபசாரத்துக்கு ஏங்குவார்கள். ஆகவே, நீ ஒருமுறை அவசியம் வந்துவிட்டுப் போ.

நீ பெங்களூர் போய் விட்டு உடனே திரும்பி வருகிறேன் என்றாய். ஆனால் நீ போய் இரண்டு மாதம் ஆகப் போகிறது. எனக்கும் உன்னைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. எனவே இந்தக் கடிதம் கண்டதும் அவசியம் நீ புறப்பட்டு வரவும். இல்லாவிட்டால் நான் அங்கே வந்துவிடுவேன், அல்லியையும் அழைத்துக் கொண்டு.

அம்மா.''

ஆரஞ்சுப் பழத்தைச் சாறு பிழிவது போலக் கடிதத்தைக் கசக்கிக் கூடையில் வீசினான்.

சே! இந்த அம்மாவுக்கு ஒன்றுமே தெரியவில்லையே. அல்லியை அம்மா வீட்டுக்கு அனுப்பச் சொன்னால், இவனை அங்கே வரச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறாரே.

அம்மாவே எழுதிய கடிதம்தானா இது?

திடீர் என்று ஐயம் ஏற்பட்டது.

கக்கித் தின்னும் குக்கல் போல, குப்பைக் கூடையில் எறிந்த கடிதத்தை மீண்டும் கையில் எடுத்தான், பிரித்தான், பார்த்தான்.

கடிதத்தை எழுதியிருப்பது அல்லி. அவளது கையெழுத்து அவனுக்கு நன்றாக அறிமுகமாகி இருந்தது.

கடைசியில் கையெழுத்திட்டு இருப்பது? அம்மாதான். அதுவும் அவன் அறிந்ததுதான்.

அம்மா சொல்லச் சொல்ல அல்லி எழுதியிருப்பாள் என்று அவன் ஊகித்துக் கொண்டான்.

அல்லியா அவள்? பெரிய கள்ளி. அவளே அம்மாவை இப்படி எழுதத் தூண்டியிருக்கக் கூடும்!

பாவம், எய்தவர் இருக்க அம்பை நொந்து என்ன பயன்?

இவள் கேடு கெட்டவள் என்பது அம்மாவுக்குத் தெரியாதே. தெரிந்து இருந்தால், இத்தனை நேரம் வீட்டில் வைத்து இருப்பாரா? கூந்தலைப் பிடித்து இழுத்து வீதியில் தள்ளி இருப்பாரே!

சரி, இப்பொழுது என்ன செய்வது?

அம்மாவே புறப்பட்டு வருவதாக மிரட்டியிருக்கிறாரே!

அம்மா செய்யக்கூடியவர்தான். அவன் பெங்களூருக்கு வந்த பொழுது, ''என் பிள்ளையைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது!'' என்று அவன் தம்பியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு ரெயில் ஏறிப் பெங்களூருக்கு வந்தவர்தானே!



இப்பொழுது அல்லியை அழைத்துக் கொண்டு வரப் போகிறாராம். வேறு வினையே வேண்டாம்!

வெள்ளம் வருமுன் அணை போட்டாக வேண்டும்.

அதற்கு வழி?

அவனுக்குச் சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது. ''சை'' என்று கையை உதறிக் கொண்டான்.

அவன் சென்னைக்குப் போய்த்தான் ஆக வேண்டும்.

என்ன பயம்?

போகிறேன்!

போய், அம்மாவிடம் எல்லாவற்றையும் உடைத்துவிட வேண்டியதுதான்.

''அம்மா!''

பொன்மணி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. கன்றின் குரல் கேட்ட பசுப் போல மகிழ்ந்து போனாள். அடுப்படியில் பாலைக் காய்ச்சிக் கொண்டு இருந்தவள் ஓடிவந்தாள்.

அப்பொழுது காலை ஆறு மணியிருக்கும். அவனுடைய அப்பாகூட இன்னும் எழுந்திருக்கவில்லை. அல்லியும், அவன் தம்பிகளும் கூட இன்னும் தூங்கிக் கொண்டுதான் இருந்தார்கள்.

வந்த கையுடன் திரும்பிப் போய்விடப் போகிறவன் போல அவன் வீசிய கையும் வெறுங் கையுமாகக் கூடத்தில் நின்று கொண்டு இருந்தான்.

மகனைப் பார்த்ததும் பொன்மணி பூரித்தாள் "வாப்பா வா!" என்று வாய் குளிர வரவேற்றாள்.

அவன் வீட்டை நோட்டமிட்டான்.

"அல்லி இன்னும் எழவில்லை!" என்றாள் பொன்மணி "வயிற்றுப் பிள்ளைக்காரி ஆயிற்றே. கொஞ்சம் தாமதமாகத் தான் எழுந்திருப்பாள். நீ முகத்தைக் கழுவிக் கொண்டு வா, காபி தருகிறேன்."

அவன் பல் துலக்கிவிட்டு அடுப்படிக்கே வந்துவிட்டான்.

"காபி சாப்பிடு!" பொன்மணி தம்ளரை நீட்டினாள்.

அதை வாங்கிக் கொண்டே மதியழகன் கேட்டான்: "அல்லி இன்னும் நம் வீட்டிலா இருக்கிறாள்?"

"பின்னே? ஏழாம் மாதம்தான் அம்மா வீட்டுக்குப் போவாள். நான் ஒன்பதாம் மாதந்தான் அனுப்பலாம் என்று இருக்கிறேன்.

"இப்பொழுது எத்தனை மாதமாம்?"

"நாலு!" அவன் அதிர்ச்சி அடைந்தான்.

"ஆமாம், ஏன்?" அம்மா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"என்னம்மா, திருமணமாகி இன்னும் முழுசா மூன்று மாதங்கூட ஆகவில்லை. இதற்குள் அவள் நாலு மாதமா?"

பொன்மணி சிரித்தாள். "டேய்... டேய்... உனக்கு இந்தக் கணக்கு எல்லாம் தெரியாதுடா. பெண்கள் கணக்கே தனி."



"நீங்கள்தானம்மா தப்புக் கணக்குப் போடுகிறீர்கள். நாலு மாதம் இருக்கவே முடியாது."

"அவளுக்கு வாந்தி, மசக்கை எல்லாம் இருபது நாள் முன்னே தொடங்கி விட்டன."

"நாலு மாதம் ஆயிற்று என்று அவள் சொன்னாளா?"

"வேறு யார் சொல்லுவார்? அவளுக்குத்தான் தெரியும்."

"அவள் சொன்னால் நீங்கள் நம்பிவிட வேண்டியதுதானா? நீங்கள் பெரியவர்கள். உங்களுக்குத் தெரிய வேண்டாமா?"

"நீ என்ன சொல்லுகிறாய்?"

மற்றவர்களுக்குக் காபி கலக்கிக் கொண்டு இருந்த பொன்மணி மகனைத் திரும்பிப் பார்த்தாள்.

"இப்பொழுது எப்படி நாலு மாதம் ஆகும் என்று கேட்கிறேன்."

"அந்தக் கணக்கே தனி என்று சொன்னேன் அல்லவா? அது உனக்குப் புரியாது. அல்லியிடம் கேள், சொல்லுவாள்." பொன்மணி மீண்டும் சிரித்தாள்.

"நீங்கள்தான் புரியாமல் பேசுகிறீர்கள் அம்மா."

"என்ன புரியவில்லை? உன் பள்ளிக் கணக்கு இங்கே சரிப்பட்டு வராது. உனக்கு எப்போது திருமணம் நடந்தது? தையில். தை... மாசி... பங்குனி... இப்பொழுது சித்திரை. நாலு மாதம் ஆகிவிட்டதா?"

"நல்லா இருக்கிறதே உங்கள் கணக்கு!" இப்பொழுது மதியழகன் சிரித்தான். "டிசம்பர் 31 ஆம் தேதி பிறந்த ஒருவன்

அடுத்த நாள் ஜனவரி 1 ஆம் தேதி நான் பிறந்து இரண்டு ஆண்டு ஆகிவிட்டது என்றானாம். அப்படி அல்லவா இருக்கிறது உங்கள் கணக்கு."

"மாதக் கணக்கு அப்படித்தான் பார்ப்பது. இது முதல் குழந்தைதானே? உனக்குப் புரியாது. அடுத்த குழந்தை பிறக்கும்பொழுது தெரிந்து கொள்ளுவாய்."

மதியழகனுக்கு இன்னும் குழப்பமாகத்தான் இருந்தது. இந்தக் கணக்கு கொஞ்சமும் பிடிபடவில்லை. ஆனாலும், அம்மா இவ்வளவு அழுத்தமாகச் சொல்லவே, அவனால் மேற்கொண்டு மறுக்க முடியவில்லை. சிந்தனையுடன் அடுப்படியை விட்டு வெளியேறினான்.

அப்பொழுது அவன் தம்பி விழித்து எழுந்து தூக்கக் கலக்கத்துடன் எதிரில் வந்தான். அவனைப் பார்த்ததும், "ஆ...அண்ணா!" என்று ஓடிவந்து கட்டிப் பிடித்துக் கொண்டான்.

சட்டென்று நினைத்துக் கொண்டவனாக, "அண்ணியிடம் செல்லுகிறேன்," என்று தடதட என்று ஓடினான். அவள் படுத்திருந்த அறைக்குள் வேகமாக நுழைந்து, "அண்ணி! அண்ணா வந்திருக்காங்க!" என்று அவளைப் பிடித்து உலுக்கினான்.

அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்த அவள் சட் என்று விழித்துக் கொண்டாள்.

"யார் வந்திருக்காங்க?" ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அண்ணா."

"உன் அண்ணாவா?"



"ஆமாம், அண்ணி. வந்து பாருங்களேன்."

கைப்பிடியாக அவளை வெளியில் அழைத்து வந்தான்.

கணவனை எதிர்பாராது பார்த்ததும் அவள் மகிழ்ச்சியில், நாணத்தில் குழைந்து போனாள்.

அவனும் போலிப் புன்னகை காட்டினான்.

"எத்தனை நாள் விடுப்பில் வந்திருக்கிறாய்?" பொன்மணி கேட்டாள்.

"இன்று இரவு ரெயிலுக்கே போகிறேன்."

"அதெல்லாம் முடியாது. இரண்டு நாளாவது இருந்து அவள் ஆசைப்பட்டதை வாங்கிக் கொடுத்து விட்டுப் போ."

"இல்லை அம்மா, நான் இன்றே போக வேண்டும்."

"போக முடியாது. அவள் மனதில் ஆயிரம் ஆசை இருக்கும். அதை எங்களிடம் எல்லாம் சொல்லுவாளா? உன்னிடந்தான் சொல்லுவாள். வந்தவன் அவளுடன் இரண்டுநாள் இருந்துவிட்டுப் போ. அவள் ஆசைப்பட்டதை வாங்கிக் கொடு. இல்லாவிட்டால், என் பேரனுக்குக் காது ஒட்டைக் காது ஆகிவிடும்."

"என் பேரன்..." கேட்கவே அவனுக்கு அருவருப்பாக இருந்தது.

"அண்ணிக்கு மாங்காய் வேண்டுமாம். அன்றைக்கே என்னிடம் கேட்டார்கள்," என்றான் தம்பி.

"வாங்கிக் கொடுடா!" என்றாள் அம்மா, மதியழகனைப் பார்த்து.

''ஏன் வாங்க வேண்டும்? அண்ணன்தான் நன்றாக மாங்காய் அடிப்பாரே!'' என்றான் தம்பி.

அல்லி ''களுக்'' என்று சிரித்து விட்டாள்.

''அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போம்மா!'' மருமகளிடம் பொன்மணி சொன்னாள்.

அல்லி அறையை நோக்கித் திரும்ப, மதியழகனும் அவளைப் பின் தொடர்ந்தான்.

மற்றப் பிள்ளைகள் அங்கே போகாதபடி, ''காபி குடிக்க வாருங்கள்,'' என்று பொன்மணி பிடித்துக் கொண்டாள்.

இருவரும் ஒன்றும் பேசவில்லை. ''பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!'' என்பது போல் இருந்தது.

அவள் தலை குனிந்து நின்றாள்.

என்ன பேசுவது என்று தெரியாமல், அவன் கட்டிலில் அமர்ந்து இருந்தான்.

அல்லியே அமைதியைக் கலைத்தாள். ''ஏன் இப்படி மெலிந்து விட்டீர்கள்?''

''மெலிந்து இருக்கிறேனா? இல்லையே!'' என்றான் அவன்.

''ஆமாம், இது எத்தனை மாதம்?''

அவள் நாணத்துடன் நாலு விரலைக் காட்டினாள்.

''நாலா?''

அவள் தலையை அசைத்தாள்.

''அது எப்படி?''



முகூர்த்த நாளுக்கு முதல் நாள்தான் அவள் தலைக்குக் குளித்து இருந்தாள் அதைக் கணக்கிட்டுத்தான் அவர்களின் மணநாள் குறிக்கப்பட்டது. அதைப் பட்டும் படாமல் அவனிடம் இரகசியம் போல எடுத்துச் சொன்னாள். இரகசியம் பேச வசதியாக அவனுக்கு அருகில் அமர்ந்து கொண்டாள்.

''உங்களைச் சாது என்று நினைத்தேன். ஆனால், நீங்கள் அசல் ஆண் சிங்கம்!'' அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''என்ன சொல்லுகிறாய்?''

''ஒரே ஒரு நாள்தான் என்னுடன் சேர்ந்தீர்கள் - முதலிரவில், அந்த ஒரே நாளில் என்னைத் தாயாக்கி விட்டீர்களே.''

பெருமிதத்துடன் சொன்னவள், தனது நன்றியைத் தெரிவிப்பது போல, அவன் கைகளைத் தூக்கித் தன் அதரங்களை மெல்லப் பதித்தாள்.

அவனோ சிட்டுக்கருவி தலையில் பனங்காயை வைத்தது போல விழித்தான்!



## 16

உச்சந் தலையில் ஓங்கி அடிக்கப் பட்டது போல, மதியழகன் செயலற்றுப் போனான்.

அவனது சிந்தனை கூடக் கட்டிப் போடப்பட்டது போலத் திக்கு முக்காடியது.

என்ன சொல்வது - என்ன பேசுவது என்று தோன்றாதவன் போல, பதுமையாக - ஊமையாக இருந்தான்.

''உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கிறதா!'' அல்லி குறுநகை புரிந்தாள்.

அவன் பார்வையை உயர்த்தி அவளைப் பார்த்தான்.

''ஒரே கல்லில் மாங்காய் விழுந்துவிடுவது இல்லையா?'' அவள் லேசாகச் சொன்னாள்.

''ஆமாம்!'' அவன் தலையை ஆட்டினான்.

''இந்தச் செய்தியைக் கேட்டால் நீங்கள் எப்படித் துள்ளிக் குதிக்க வேண்டும்? ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?'' அவனைப் புரிந்து கொள்ள முடியாமல் அவள் கேட்டாள்.

''நன்றாகத்தானே இருக்கிறேன்!'' அவன் அசடு வழிந்தான்.

''உங்களை வரச்சொல்லி எத்தனை கடிதம் எழுதினேன், ஏன் வரவில்லை?''

''இதோ வந்து விட்டேனே.''

''அம்மா எழுதிய பின்பு வந்து இருக்கிறீர்கள்.''

அவன் மீண்டும் அசடு வழிந்தான்.

''உங்களுக்கு ஒரு பிள்ளை பிறக்கப் போகிறது. நீங்கள் இன்னும் அம்மா பிள்ளையாகவே இருக்கிறீர்கள்.''

''டெல்லிக்குச் சுல்தான் ஆனாலும், அம்மாவுக்குப் பிள்ளைதானே! தாய்க்குப் பின்தான் தாரம்!''

அவன் சிரித்து மழுப்பினான்.

''அதுவரை தாரம் வெகு தூரம் போலிருக்கிறது.''



அவளது அஞ்சல்களுக்கு அவன் சரியாகப் பதில் எழுதாததால் அவள் சிறிது கோபமாக இருந்தாள். அவன் அவளைச் சமாதானப்படுத்த முயற்சித்தான்.

''அல்லி! என்னை நீ தவறாகப் புரிந்து கொண்டாய் என்று நினைக்கிறேன்.''

''உங்களைப் புரிந்து கொள்ள எங்கே இடம் கொடுத்தீர்கள்?''

''இன்று வீடு கிடைத்துவிடும் - நாளை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில்தான் நான் உடனே புறப்பட்டு வரவில்லை.''

''இப்பொழுதாவது என்னை அழைத்துப் போவீர்களா?''

''இப்பொழுது... இப்படி இருக்கிறாயே. அம்மாவிடம் கேட்க வேண்டும்.''

''எனக்கு உங்கள் கூடவே இருக்க வேண்டும் போல இருக்கிறது.''

''எனக்கு மட்டும் அந்த ஆசையில்லையா என்ன?''

''அப்படியானால் என்னை அழைத்துக் கொண்டு போங்கள்.''

''அம்மாவிடம் கேட்போம் என்று சொன்னேனே. வீடும் பார்க்க வேண்டும்.''

''அம்மாவுக்கு அப்படி ஏன் கடிதம் எழுதினீர்கள்?''

''எப்படி?''

''என்னை அம்மா வீட்டுக்கு அனுப்பச் சொல்லி.''

''அது...'' திணறியவனுக்கு அம்மாவின் குரல் கை கொடுத்தது. ''நீ எப்பொழுது அம்மா வீட்டுக்குப் போக வேண்டும் என்று எனக்குத் தெரியாது அல்லவா?

''உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா?''

''பின்னே?''

''என்னைப் பிடிக்கவில்லை யென்றால் சொல்லி விடுங்கள்.''

வெகுநாளாக அவள் உள்ளத்துள் அடக்கி வைத்திருந்தது எல்லாம் அணையை உடைத்துக் கொண்டு விழிவழியே வெள்ளமாகப் பெருகி வெளியேறியது.

''அல்லி! இது என்ன அசட்டுத்தனம்!''

அவளை அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டான். அவளுடைய கண்களைத் துடைத்தான். கூந்தலை இதமாகக் கோதினான்.

''அல்லி! நீ நினைக்கிறபடி எதுவும் இல்லை. என் அன்பு முழுவதையும் உன் மீதுதான் பொழிகிறேன். என்னை நம்பு.''

''நம்பச் சொல்லுகிறீர்களா?''

''ஆமாம்.''

''எப்படி நம்புவது?''

''என்ன செய்ய வேண்டும்? சொல்! மாங்காய் வாங்கி வரட்டுமா?''

அவன் எழுந்தான்.



''அதற்குள் ஓடப் பார்க்கிறீர்களே!'' அவள் கொக்கி போட்டு இழுத்தாள். அவன் மீண்டும் அமர்ந்தான். ''வேறு என்ன வேண்டும்?''

''செய்வீர்களா?''

''நிச்சயம் செய்கிறேன். ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அம்மாவே சொல்லி விட்டார்களே. சொல். என்ன வேண்டும்?''

''எனக்கு நீங்கள்தான் வேண்டும்.''

''நான்தான் உன் பக்கத்திலேயே இருக்கிறேனே.''

''எவ்வளவு நேரத்துக்கு?''

''இன்று முழுவதும் உன் கூடவே இருக்கிறேன். போதுமா?''

''போதாது.''

''பின்னே?''

''நாளையும் என்னுடன் இருக்க வேண்டும்.''

''நாளையுமா? அல்லி! நாளை நான் அலுவலகத்துப் போக வேண்டாமா?''

''பார்த்தீர்களா? ஒரு சிறு சோதனையிலேயே நீங்கள் தோற்று விட்டீர்கள்.''

''அப்படி அல்ல அல்லி. நாளை திங்கட்கிழமை. நான் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.''

''நாளை ஒரு நாள் விடுப்புக் கேட்டுத் தந்தி கொடுக்கலாமே?''

"கொடுக்கலாம், ஆனால்...."

"ஆனா... ஆவன்னா... இனா... ஏன் நிறுத்தி விட்டீர்கள்? சொல்லுங்கள்."

"அலுவலகத்தில் அவசரமான வேலை இருக்கிறது."

"ஆயிரம் பேர் வேலை செய்யும் இடத்தில், ஓர் ஆள் இல்லாததால் எதுவும் மூழ்கிப் போய்விடாது."

அவனால் அதற்கு மேல் மறுத்துப் பேச முடியவில்லை. "சரி அல்லி. நாளை இரவே போகிறேன்," என்றான்.

காலைச் சாப்பாடு முடிந்தது.

மதியழகனுக்குத் தனிமை தேவைப்பட்டது.

"ரெயிலில் சரியாகத் தூங்கவில்லை!" என்றான்.

"படுத்துத் தூங்குங்களேன்," என்றாள் அல்லி.

படுத்து விட்டான்.

அவள் அடுப்படிக்குப் போனாள்.

அவன் அசை போட்டான்.

ஒரு நாள் உறவில் குழந்தை உண்டாகி விடுமா?

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவனவன் அரச மரத்தைச் சுற்றுகிறான்; இராமேசுவரம் போகிறான். ஒரு புழு பூச்சியைக் கூடக் காணோம். இங்கே என்னடா என்றால், ஒரே இரவுக்குள் மாதக் கணக்குச் சொல்லுகிறாள்.

இப்படி நடக்குமா?



கதைகளில் படித்து இருக்கிறான். திரைப்படங்களில் பார்த்து இருக்கிறான். ஆனால், விஞ்ஞான பூர்வமாகச் சாத்தியமா?

சாத்தியம் என்றே தோன்றியது. வீடே பற்றிக் கொள்ள ஒரு சிறு பொறி போதுமே! ஆனாலும், பெங்களூருக்குப் போனதும் இது தொடர்பான நூல்களை வாங்கிப் பார்க்க வேண்டும் என்று எண்ணினான்.

இப்படி முட்டாள்தனம் பண்ணுவேனா என்று நொந்து கொண்டான். அந்தக் கடிதத்தை மட்டும் ஒருநாள் முன்னதாகப் பார்த்து இருந்தால்...? அதையே மீண்டும் மீண்டும் நினைத்து என்ன பயன்?

திடீர் என்று ஓர் எண்ணம்.

கடிதத்தில் கண்டபடி ஏற்கெனவே அவள் வயிற்றில் குழந்தை இருந்தால், கதவு அடைக்கப்பட்டு இருக்குமே. கருப்பாதை சாத்தப்பட்டு இருக்குமே. அப்பொழுது இவனது உறவு பயனற்றதாக ஆகிவிடுமே!

சிந்திக்கச் சிந்திக்க மூளை குழம்பியது. புதிய புதிய சிக்கல் தோன்றியது. படுத்து இருக்க முடியவில்லை. எழுந்து அமர்ந்து கொண்டான்.

அந்தப் பக்கமாக வந்த அல்லி, அறைக்குள் எட்டிப் பார்த்தாள். "தூங்கவில்லையா?"

"அது எப்படிக் குழந்தை உண்டாயிற்று?" அவன் சிந்தனைக் குழப்பத்தில் வாயை விட்டு விட்டான்.

அவள் அருகில் வந்து அமர்ந்தாள். "குழந்தை வேண்டாம் என்ற நினைத்து இருந்தீர்களா?"

அப்பொழுதுதான் அவன் தனது தவறை உணர்ந்தான். "அது அல்ல, அல்லி..." பூசி மெழுக முயற்சித்தான்.

"வேண்டாம் என்றால் சொல்லி விடுங்கள். அழித்த விடலாம்."

"இல்லை இல்லை. நான் அப்படி யெல்லாம் நினைக்க வில்லை."

"பின்னே? குழந்தை வரும் என்று நீங்கள் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லையா?"

"ஆ... அதுதான்."

"குடும்பக் கட்டுப்பாடு திட்டம் என்று வைத்து இருக்கிறீர்களா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. எதிர்பாராது வந்து விட்டதே என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்."

"திருமணம் ஆகிவிட்டால், எதிர்பார்க்க வேண்டிய ஒன்று தானே இது?"

"ஆமாம், ஆமாம்."

"உங்கள் அம்மாவுக்கு எவ்வளவு மகிழ்ச்சி, தெரியுமா?"

"இருக்கத்தானே செய்யும்?"

"எனக்குக் கூடப் பெருமையாக இருக்கிறது. உங்களை நினைத்து நினைத்துப் பெருமிதம் அடைகிறேன்."

அவன் கொட்டாவி விட்டான்.

"இப்படிக் கொட்டாவி விடுகிறவர் எப்படி இவ்வளவு பெரிய சாதனை புரிந்தார் என்பதுதான் ஆச்சரியமாக



இருக்கிறது!" கிண்டல் பண்ணியவள், "படுத்துத் தூங்குங்கள்!" என்று சிரித்துக் கொண்டே எழுந்து போனாள்.

மதியம் சாப்பிட்டதையெல்லாம் அல்லி வாந்தி எடுத்து விட்டாள். அந்த அயர்ச்சியில் படுத்துத் தூங்கியும் விட்டாள்.

மதியழகன் அம்மாவுடன் பேசிக் கொண்டு இருந்தான். பெங்களூரில் வீடு பார்ப்பது பற்றி.

"இப்படிச் சுருண்டு சுருண்டு விழுந்து கிடப்பவள் அங்கே வந்து தனிமையில் என்ன செய்வாள்? நாலைந்து மாதத்தில் பிரசவத்துக்கு அம்மா வீட்டுக்கு வேறுபோய்விடுவாள். பிறகு எப்பொழுது திருப்பி அனுப்புவார்களோ? எனக்கே அவளை அனுப்ப உளமில்லை. குழந்தை பிறந்த பின்பு வீடு பார்க்கலாமே!" என்றாள் பொன்மணி.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது, அம்மா!" என்றான் மதியழகன் குதூகலமாக.

மாலையில் இருவரும் அல்லியின் வீட்டுக்குப் போய் வந்தார்கள்.

இரவில் அவன் தன்னிடம் வருவான் என்று அவள் எதிர்பார்த்தாள். அவனோ விலகிப் படுத்தான். அவள் நெருங்கி வந்தாள். "அம்மா சொல்லியிருக்கிறார்கள்!" என்று அவன் ஒதுங்கினான். அவள் சிரித்துக் கொண்டாள்.

மறுநாளும் நேரம் வேகமாக ஓடிவிட்டது. அவளுக்கு அல்வா, மாங்காய் வாங்கிக் கொடுத்தான். பகல் சாப்பாடு அல்லியின் வீட்டில்... "ஒரு மாதம் அல்லியை இங்கே அனுப்பி வையுங்கள்!" என்று அவள் அம்மா திரும்பத் திரும்பச் சொன்னாள்.

விளக்கு வைக்குமுன் வீட்டுக்குத் திரும்பினார்கள். இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மதியழகன் ரெயிலுக்குக் கிளம்பினான். நிலையத்துக்கு வந்து அவனை வழியனுப்ப அல்லிக்குக் கொள்ளை ஆசை. ஆனால் பொன்மணி அனுமதிக்கவில்லை.

''அம்மா வீட்டுக்குப் போகட்டுமா?'' வாசலில் வைத்து அல்லி கேட்டாள்.



## 17

பெங்களூருக்குத் திரும்பியதும் பெரிய சுமையை இறக்கி வைத்தது போல இருந்தது மதியழகனுக்கு.

சென்னையில் இருந்த இரண்டு நாளையும் இரண்டு ஊழியாகக் கழித்த அவனுக்குப் பெங்களூருக்கு வந்ததும் உள்ளத்தில் ஒரு வித அமைதி மலர்ந்தது.

அல்லியுடன் இருந்த அந்த இரு நாட்களும், நாயர் பிடித்த புலிவால் போல இருந்தன. விடவும் முடியவில்லை; பிடித்துக் கொண்டு இருக்கவும் இயலவில்லை. ஒட்டிப் பழக இவனுக்கு வெறுப்பாக இருந்தது. எட்டிப் போனால் அவள் முறைத்தாள். இருதலைக் கொள்ளி எறும்பு போல இரண்டு நாளும் தவித்துப் போனான்.

நாள் இரண்டு என்றாலும், அவளுடன் படுத்து உறங்கியது ஒரே ஒரு நாள்தான். மீண்டும் வயிற்று வலி நாடகத்தைத் தொடங்க வேண்டியிருக்குமோ என்று நினைத்துக் கொண்டு இருந்தான். ஆனால், பகலில், ''உங்கள் வயிற்று வலி



குணமாகி விட்டதா?'' என்று அவள் கேட்டபொழுது, அவசரப்பட்டு, ''ஆமாம்'' என்று வேறு சொல்லிவிட்டான். இரவு வயிற்றை வலிக்கிறது என்றால்,நிச்சயம் அவள் ஐயப்படத்தான் செய்வாள். நல்ல வேளை, ''அம்மா சொல்லியிருக்கிறார்கள்.'' என்று தப்பித்துக் கொண்டான்.

''அத்தை! நீங்கள் சொன்னீர்களா?'' என்று அவள் போய்க் கேட்கப் போவது இல்லையே!

இரண்டாம் நாள் பகலைச் சிறிது சிரமத்துடன்தான் கழிக்க வேண்டியிருந்தது. ''பாவம், திருமணம் ஆகியும் பிரமசாரியாக இருக்கிறீர்கள்!'' என்று அல்லியே போலியாகவோ, மெய்யாகவோ அனுதாபப்பட்டாள். ''குழந்தைப் பேற்றுக்காக அல்லாது காம இச்சைக்காக உறவு கொள்வது மிருகத்தனம் ஆகும் என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள்!'' என்று அவன் தப்பித்துக் கொண்டான்.

''ஒவ்வோர் ஆண் பிள்ளையும் உங்களைப் போல நல்ல பிள்ளைகளாக இருந்தால், குடும்பக் கட்டுப்பாடே வேண்டியது இல்லை!'' என்று அவள் மெல்ல நகைத்தாள்.

''இந்த நிலையில் உறவு வைத்துக் கொள்வது உனக்கும் நல்லது அல்ல; உன் வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கும் நல்லது அல்ல!'' என்றான் அவன்.

அவள் பதில் சொல்லவில்லை. முத்துப் பல் தெரியாதபடி அதரங்களை மட்டும் மலர்த்தினாள். ''எனக்கு ஏற்கெனவே காது குத்தியாகிவிட்டது!'' என்று சொல்வது போல இருந்தது அது. அவளும் படித்த பெண்தானே!

"சும்மாவே துர்பிணி! இப்பொழுது வேறு கர்ப்பிணி" என்பார்கள். அல்லி! அது போல நடந்து கொள்ளக்கூடாதே என்று அவன் அஞ்சியிருந்தான். முதல் நாள் போனதும் அல்லியின் பேச்சு அப்படித்தான் இருந்தது. அவன் குழைந்து நடிக்க நடிக்க, அவள் மாறிப் போனாள். "நானா இவ்வளவு நன்றாக நடித்தேன்!" என்று இப்பொழுது நினைத்தாலும் அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

மாலைப் பொழுதில் அல்லியின் வீட்டுக்குப் போய் வந்தார்கள். இரவில் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ரெயில் ஏறிவிட்டான்.

ரெயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டு இருந்த பொழுது, "நான் அம்மா வீட்டுக்குப் போகட்டுமா?" என்று அவள் கேட்டது பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இருந்தது, மதியழகனுக்கு.

அம்மாவிடம் பேசினான்.

"அதெல்லாம் முடியாது!" என்றாள் பொன்மணி. "அவளை விட்டு விட்டு இருக்க என்னால் முடியாது."

"அம்மா, பெண்கள் மசக்கை நேரத்தில் தாயிடம் இருக்கத்தான் பிரியப் படுவார்களாம்!" அம்மாவுக்கே உபதேசம் செய்தான் அவன்.

"எனக்குத் தெரியுமப்பா. நானும் நாலு பெற்றவள்தான்!" என்றாள் பொன்மணி. "அவளுக்கு இங்கே என்ன குறை? அவள் அம்மாவைவிட ஆயிரம் மடங்கு நான் அவளிடம் அன்பாக நடந்து கொள்ளுகிறேன். இல்லையா அல்லி?" மருமகளைப் பார்த்தாள்.



"அவள் ஆசைப்படுவதைச் செய்ய வேண்டும் என்று நீங்கள்தானே சொன்னீர்கள்?" அம்மாவை மடக்கினான் அவன்.

பொன்மணி ஒப்புக் கொண்டாள். "சரி, அம்மா வீட்டுக்குப்போய் வரட்டும். ஆனால் பத்து நாளில் திரும்பி வந்து விடவேண்டும். பிறகு போய்த்தான் மாதக்கணக்கில் இருப்பாளே."

"ஆசை தீரும்வரை அங்கே இருந்துவிட்டு வரட்டுமே அம்மா!" அவன் பலமாகப் பரிந்துரை செய்து, அல்லியிடமும் அப்படியே சொல்லிவிட்டு ரெயிலுக்கு வந்தான்.

ரெயிலில் ஏற்கெனவே படுக்கை பதிவு செய்து கொண்டான். ஆனால் தூக்கந்தான் வரவில்லை. சிந்தனை செக்கு மாடு ஆயிற்று.

ஒரே இரவில் குழந்தை உண்டாகுமா?

கதைகளில் படிப்பது, படங்களில் பார்ப்பது எல்லாம் கற்பனைதானே! உண்மை வாழ்க்கையில் அப்படி நடக்குமா?

இரவு பகலாகப் பெய்யும் மழையில் ஏதோ ஒரு துளிதான் முத்துச் சிப்பியில் விழுகிறது. அது எந்தத் துளி என்று எப்படிச் சொல்ல முடியும்?

மாங்காய் அடிக்கும் சிறுவன் ஒரு கல்லுக்குப் பத்துக் கல்லை வீசுகிறான். எந்தக் கல் பட்டுக் காய் விழுகிறது என்று கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் இது தெரியாதே!

ஒவ்வோர் இரவிலும் ஒவ்வோர் உறவிலும் நிச்சயம் ஒரு குழந்தை உண்டாகாது. அதுபோல ஒரே இரவில் குழந்தை உண்டாகி விடுமா?

மதியழகனால் நம்ப முடியவில்லை.

ஆனால் கல்லை வீசியாயிற்று. காயும் விழுந்தாயிற்று. இனி நழுவி ஓட முடியாதே.

இப்படி வேண்டுமானால் செய்திருக்கலாம்.

''இப்பொழுது குழந்தை வேண்டாம் என்று நினைக்கிறீர்களா?' என்று அல்லி கேட்டபொழுதே, ''ஆம்!'' என்று சொல்லியிருக்கலாம்.

''என்ன அவசரம்! முதல் இரவு முடிந்ததுமே கட்டிலுக்குப் பக்கத்தில் தொட்டில் போட்டுக் கொள்ள வேண்டுமா? இரண்டு ஆண்டு குதூகலமாக இருப்போமே! பிறகு பெற்றுக் கொள்வோம். நமக்கு என்ன வயதா இல்லை. இதை அழித்து விடு!'' என்று அடித்துக் கூறியிருக்கலாம்.

இப்பொழுதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. மாத்திரைகள் வாங்கிக் கொடுத்து அழித்து விட்டால்...?

உள்ளத்தில் ஒரு மூலையிலிருந்து மெல்லிய குரல் ஒன்று கேட்டது. ''அவள் வயிற்றில் வளர்வது உன் குழந்தையாகவே இருந்தால்...?''

சிறகு ஒடிந்த பறவை போல உள்ளம் ஒரு கணம் உணர்ச்சியில் துடித்துக் கொண்டது.

ஆனால் மறுகணம் உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டான். ஐயத்துக்கு ஆளான பிறவி அழிந்துதான் போகட்டுமே என்று நினைத்தான்.

சரி, பிண்டம் அழிந்து போகும். அதன்பின் அவளை அவன் ஏற்றுக் கொள்வானா? அல்லது, அதனாலேயே அவளது களங்கம் கழுவப்பட்டு விடுமா?



அதெல்லாம் ஒத்துவரும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. அந்தக் கடிதம் உண்மையா, இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதைத் தவிர வேறு வழியேயில்லை.

எப்படிக் கண்டுபிடிப்பது?

வயிற்றைப் பார்த்தால் தெரிந்து விடும் என்று காத்து இருந்தான். வயிற்றில் குழந்தை வளர்வது உறுதியாகி விட்டது. ஆனால், அதிலும் ஒரு சிக்கல். முதல் இரவில் அவளுடன் அவன் உறவு கொண்டு விட்டான். ''ஒரே கல்லில் மாங்காய் அடித்து விட்டீர்களே! நீங்கள் ஆண் சிங்கந்தான்!'' என்று அவள் பாராட்ட வேறு செய்கிறாள். அப்படி நடக்காது என்று தள்ளி விடுவதற்கும் இல்லை. இனி எப்படி உண்மையைக் கண்டுபிடிப்பது?

குழந்தை யாரைப் போல இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

ஆனால் குழந்தை பிறக்க இன்னும் ஆறு மாதம் ஆகுமே!

ஆறு மாதம் - அரை ஆண்டு - அதுவரை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? வயிற்றை வலித்தாலே அரைமணி நேரங்கூடத் தாங்கிக் கொள்ள முடிவது இல்லை. நெஞ்சே வலித்தால் ஆறு மாதம் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

தலை தப்பியது என்று ரெயிலுக்கு ஓடி வந்தவன், வேங்கையிடம் தப்பிய மான் வேடனிடம் அகப்பட்டுக் கொண்டது போல ஆனான்.

அந்தப் பெட்டியில் இருந்த அத்தனை பேரும் தூங்கி விட்டார்கள். அவன் மட்டும் வெயிலில் விழுந்த புழுவாகக் கிடந்தான். அதிகாலையில் பெங்களூரை

அடைந்தான். ஓர் "ஆட்டோ" பிடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

இனி அவனுக்கு வீடு வேண்டியது இல்லை. இன்னும் ஏழெட்டு மாதத்துக்குப் பிரமசாரி வாழ்க்கைதான். பழைய அறைக்கே திரும்பி விடலாம்.

ஆனால் நண்பர்களிடம் என்ன சொல்வது?

"நான் தந்தையாகப் போகிறேன். குழந்தையுடன்தான் என் மனைவி வருவாள். அப்பொழுதுதான் வீடு தேவை," என்று சொல்ல முடியுமா?

அவன் தயங்கினான். வெளியில் சொல்லவே வெட்கப் பட்டான். குழந்தைக்குத் தந்தை யார் என்று தாலிகட்டிய அவனுக்கே தெரியாதே. இன்னும் என்னென்ன கூத்து நடக்குமோ?

வீடு பற்றி உடனடியாக முடிவு ஒன்றும் எடுக்கவில்லை. இரவு எல்லாம் தூங்காதது களைப்பாக இருந்தது. கட்டிலில் விழுந்தான். எப்படியோ கண் அயர்ந்து போனான். கண் விழித்ததும், குளித்துவிட்டு அவசர அவசரமாக அலுவலகத் துக்கு ஓடினான்.

மாலைவரை வேலைகளில் பதுங்கிக் கொண்டான். ஆறு மாதம் காத்திருக்க வேண்டுமே என்பதை நினைக்க நினைக்க அவனுக்கு மலைப்பாக இருந்தது. அதற்கு முன் ஒரு முடிவு காண முடியாதா?

அலுவலகத்தில் இருந்து வெளியில் வந்ததும், மனக்குரங்கு சிந்தனைக் கிளைகளில் தாவிக் குதித்தது.

அதை மறக்கத் திரை அரங்கை நோக்கி நடந்தான்.



வழியில்—

ஒரே பரபரப்பு.

நூறு இருநூறு பேர் கூட்டமாகச் சென்று கொண்டு இருந்தார்கள். கட்டுப்பாடு இல்லாத கூட்டம். வழியில் போவோர் வருவோர் எல்லாம் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

மதியழகனும் முண்டியடித்துக் கொண்டு கூட்டத்துக்குள் புகுந்தான்.

மக்கள் புடைசூழ மாபெரும் வெற்றி வீரனைப் போலக் கூட்டத்தின் நடுவே ஒருவன் நடந்து சென்று கொண்டு இருந்தான்.

அவனைப் பார்த்ததும், மதியழகன் திடுக்கிட்டுப் போனான்.

அந்த வீரன் வலக்கையில் ஒரு பெண்ணின் தலையைப் பிடித்து இருந்தான்.

பனங்காய் சீவப்பட்டது போல வெட்டப்பட்ட அந்தத் தலையில் இருந்து செக்கச் செவேர் என்ற குருதி சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டு இருந்தது.



## 18

ஒரு கொலையை நேரில் பார்த்தது போலக் குலை நடுங்கிப் போனான் மதியழகன்.

அவன் பச்சை இரத்தத்தை இதுவரை பார்த்தது இல்லை. ஆட்டு இரத்தத்தைக்

கூடக் கண்ணால் கண்டது இல்லை, ஏன், ஆடு வெட்டுவதைக் கூடப் பார்த்தது கிடையாது. நகர சபைக் குழாயில் தண்ணீர் வருவது போல சொட்டுச் சொட்டாகச் செங்குருதி வடிந்ததை நேரில் பார்த்த பொழுது இவனுக்குத் தலையைச் சுற்றுவது போல இருந்தது.

திரைப்படத்துக்குச் செல்லக்கூட உளம் இல்லை. பேதலித்த நிலையில் வீட்டுக்கே வந்துவிட்டான். உடைகளைக் கூட மாற்றிக் கொள்ளாமல், கட்டிலில் படுத்துக் கொண்டும் விட்டான்.

அவன் பத்திரிகையில் எப்பொழுதோ, செய்தி படித்து இருக்கிறான் - ''மனைவி தலையுடன் போலீஸ் நிலையத்துக்கு ஊர்வலம் போனவர்!'' என்று. ஆனால், அதையே நேரில் பார்த்தபொழுது பேயடித்தவன் போல ஆகிவிட்டான்.

அப்பப்பா, அதைப் பார்த்துக்கொண்டுஎப்படித்தான் இத்தனை பேர் அவன் பின்னே போனார்களோ!

அவனுந்தான், அந்த மாலைப்பொழுதில், நடமாட்டமிக்க சாலையில், ஒரு மாநிலத்தின் தலைநகரில் எப்படித்தான் அவ்வளவு துணிச்சலுடன் வெட்டிய தலையைக் கொள்ளிச் சட்டி மேல் கையில் பிடித்துக் கொண்டு ஊர்வலம் போனானோ!

அந்தப் பெண்ணுக்கு 25 வயதுதான் இருக்கும். நல்ல சிவந்த நிறம். பெரிய கண்கள். நீண்ட மூக்கு. நெற்றியில் குங்குமம். அடர்ந்த கார் கூந்தல். கூந்தல் நிறைய மல்லிகைப் பூ. கூந்தலைப் பிடித்துக் கொண்டு, சதக்... படுபாவி!

பார்த்துப் பயந்து, மதியழகன் தயங்கி நின்றபொழுது, சில குரல்கள் அவன் காதில் விழுந்தன.



''அந்த ஆள் குவைத்துக்குப் போயிருந்தானாம்...''

''போய் ஓராண்டு ஆகிறதாம்...''

''இன்றுதான் திடீர் என்று திரும்பி வந்தானாம்.''

''மனைவியைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனானாம்.''

''ஏனாம்?''

''அவள் மாதமாக இருந்து இருக்கிறாள்.''

''எப்படி?''

''சோரம் போய்விட்டாள். இவன் அந்தப் பக்கம் போனதும், அவள் வேறு பக்கம் திரும்பி விட்டாள் போலிருக்கிறது.''

''அரிவாளை எடுத்தான், ஒரே வெட்டு! கதை முடிந்து விட்டது.''

''அப்படிப்பட்டவளுக்கு இது வேண்டியதுதான்.''

''நாலு ஆண்கள் இப்படிக் கிளம்பினால்தான் பெண்கள் யோக்கியமாக இருப்பார்கள்.''

இப்பொழுதுதான் பேசிக் கொள்வது போல, எல்லாம் அவன் காதில் எதிரொலித்தது.

கொலையைவிட இதுதான் அவனை அதிகமாக அதிர்ச்சி அடையச் செய்தது.

அல்லி ஏதோ சொன்னாளே. இவனை ஆண் சிங்கம் என்று!

இவனா ஆண் சிங்கம்? அசிங்கம்!

மனைவியின் தலையை வெட்டிக் கையில் எடுத்துக் கொண்டு ஊர்வலம் போகிறானே, அவன் அல்லவா அசல் ஆண் சிங்கம்!

''நான் முழுகாமல் இருக்கிறேன்!'' என்று அல்லி எழுதிய கடிதம் வந்ததுமே, இவனும் ஓர் அரிவாளைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால், இவனும் ஆண் சிங்கம்!

சே! இவனும் ஆண்பிள்ளை என்று இருக்கிறானே, வேட்டி கட்டிக் கொண்டு.

தன்னையே நொந்து கொண்டான் மதியழகன்.

''நான் ஏன் இப்படிக் கோழையாகிப் போனேன்?''

தன்னையே கேட்டுக் கொண்டான்.

அவள் எதுவும் நினைத்துவிடக் கூடாது என்று பயந்து பயந்து நடக்கிறானே! அவள் உளம் புண்பட்டு விடக் கூடாதே என்று அவளிடம் நடிக்கிறானே! அவளை அணைக்கிறான்; கொஞ்சுகிறான்; அவளிடம் குழைகிறான். சே! வெட்கக்கேடு. இப்படியெல்லாம் நடிக்கவேண்டிய அவசியம் என்ன வந்தது?

தன் மீதே கோபம் வந்தது அவனுக்கு.

பாக்கு வெட்டுவது போல ''நறுக்'' என்று அவளிடம் கேட்டுவிட வேண்டியது தானே! இதில் தயக்கம் எதற்கு?

இத்தனை நாளாகத் தயக்கம் காட்டியது தவறு என்று நினைத்தான்.

இப்பொழுது ஊருக்குப் போன பொழுதாவது, ''இந்தக் குழந்தைக்குத் தந்தை யார்?'' என்று கேட்டு இருக்கலாம். அதைவிட்டு இன்னும் ஆறுமாதம் காத்து இருப்பது என்றால்...



தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறானா?

அல்லது-

கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கப் போகிறானா?

வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று முடிக்க வேண்டிய வேலையை இப்படி முற்றவிட்டுக் கொண்டு போகிறானே. பைத்தியக்காரத்தனம்!

உளம் வியர்த்தது.

எழுந்தான்.

குளித்தால் நன்றாக இருக்கும் போலத் தோன்றியது.

குளியலறைக்குள் நுழைந்தான்.

செங்கல் சூளையில் வைத்தது போலத் தான் இப்படி வெந்து வேக வேண்டிய தேவையில்லை என்று அவனுக்குத் தோன்றியது.

அந்த மொட்டைக் கடிதத்தைப் படித்ததுமே, அல்லியிடம் காட்டி, உண்மையைக் கேட்டு இருக்க வேண்டும். இப்படிக் கழுத்தைச் சுற்றி மூக்கைத் தொட முயற்சிக்க வேண்டியது இல்லை.

அது ஆதாரமற்ற மொட்டைக் கடிதமாக இருந்தால், அல்லி வீணாகக் கவலைப்படுவாளே, புது வாழ்வின் தொடக்கமே விரிசலாகப் போய்விடுமே என்று பாவ புண்ணியம் பார்த்தான்.

இப்பொழுது இவன் ஆப்பு அசைத்த குரங்கு போல அவதிப்படுகிறான்!

மனைவியை வெட்டிக் கொன்றவன் ஓராண்டுக்கு மேலாக ஊரிலேயே இல்லை. எனவே, அவள் வயிற்றில் இருந்த குழந்தைக்கு நிச்சயமாக இவன் தந்தையாக இருக்க முடியாது. எனவே அவன் உறுதியாக ஒரு முடிவு எடுத்தான் - துணிச்சலாகச் செயல்படுத்தினான்.

ஆனால், இவன் நிலை அப்படி இல்லையே; திரிசங்கு நரகம் போல அல்லவா இருக்கிறது.

அந்த முதல் இரவு மட்டும் நடவாது இருந்து இருந்தால் இவனும் இப்பொழுது உறுதியான முடிவு எடுக்க இயலும். அரிவாளைத் தூக்கினாலும் அதில் நியாயமும் இருக்கும். அதற்கு இப்பொழுது வாய்ப்பு இல்லாமல் போய் விட்டதே.

எவ்வளவு இனிமையாக இருக்க வேண்டிய மண வாழ்க்கை. எந்தப் பாவி இப்படிக் கெடுத்தான்? அந்தக் ''கழுதை''யிடம் இருந்து, வேறு கடிதம் கூட இல்லையே! அந்த ஒரே ஒரு மொட்டைக் கடிதத்துடன் சரி. அதன்பின் ஏன் கடிதமே இல்லை.

சிந்தனைச் சிதறல்கள் இடையே குளித்துவிட்டு வந்தான். சாப்பாட்டுக்கு வெளியில் போக வேண்டும். உளம் இல்லை. ஓய்வாகச் சோபாவில் அமர்ந்து கொண்டான்.

காலையில் வந்த நாளிதழ் கைபடாத ரோஜா போலக் கன்னிமை கழியாமல் அப்படியே கிடந்தது. அதைக் கையில் எடுத்துப் பிரித்தான்.

மத்திய அமைச்சரவையில் மாறுதல்...

கேரள அரசு தப்பியது...

நடிகை தீபாவுக்குக் குழந்தை பிறந்தது...



பக்கத்தைப் புரட்டினான்.

புதுப்பெண் தற்கொலை! தூக்கில் தொங்கினாள்!!

மொட்டைக் கடிதத்தால் வந்த வினை!

மதியழகனிடம் ஒரு பரபரப்பு காணப்பட்டது. நன்றாக நிமிர்ந்து அமர்ந்தான். மீண்டும் தலைப்பில் இருந்து படித்தான்.

புதுப்பெண் தற்கொலை! தூக்கில் தொங்கினாள்!!

மொட்டைக் கடிதத்தால் வந்த வினை!!

சென்னை, பிப்.16—நேற்று காலையில்தான் திருமணமான ஒரு புதுப்பெண், நேற்று இரவில், முதல் இரவு அறையில்; தூக்கில் தொங்கினாள்!

அவளது நடத்தையைப் பற்றி ஒரு மொட்டைக் கடிதம் வந்ததே இதற்குக் காரணம்.

**படித்த பெண்**

சென்னை, புரசைவாக்கத்தைச் சேர்ந்தவள் புவனா. வயது 23. கல்லூரியில் படித்தவள்.பி.ஏ. பட்டம் வாங்கியிருக்கிறாள்.

நேற்றுக் காலையில் புவனாவுக்கும் இளைஞன் தங்க மணிக்கும் திருமணம் நடந்தது. தங்கமணி எம்.ஏ. படித்தவர். ஒரு நிறுவனத்தில் நிர்வாகியாகப் பணியாற்றுகிறார்.

**மொட்டைக் கடிதம்**

நேற்று இரவே முதல் இரவுக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள்.

இதற்கு இடையே தங்கமணி பெயருக்கு ஒரு மொட்டைக் கடிதம் வந்து இருந்தது. புவனாவின் பழைய காதலன் எழுதிய

கடிதம் என்று கூறப்படுகிறது. "புவனாவின் வயிற்றில் என் குழந்தை வளர்ந்து கொண்டு இருக்கிறது!" என்று கடிதத்தில் எழுதப்பட்டு இருந்ததாம்.

மறுப்பு

இந்தக் கடிதம் பற்றிப் புவனாவிடம் தங்கமணி கேட்டார். ஆனால் புவனா அடியோடு மறுத்தாள். "எனக்குக் காதலனே கிடையாது!" என்று சத்தியம் செய்தாள். "எந்த டாக்டரிடம் வேண்டுமானாலும் என்னை அழைத்துப் போய்ச் சோதித்துப் பாருங்கள். நான் கன்னி கழியாதவள்!" என்று உறுதியாகச் சொன்னாள்.

ஆனால் தங்கமணி இதை யெல்லாம் நம்பவில்லை. படுக்கையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்குப் போய்ப் படுத்துக் கொண்டார்.

தூக்கில்

இன்று காலையில் பார்த்த பொழுது, புவனா தூக்கில் தொங்கிக் கொண்டு இருந்தாள். தான் கட்டியிருந்த சேலையை மின்விசிறியில் கட்டித் தூக்கிலிட்டுக் கொண்டாள்.

அவமானம் தாங்காது புவனா தற்கொலை செய்து கொண்டாள் என்று கருதப்படுகிறது. அவளது உடல், பரிசோதனைக்காக, அரசாங்க மருத்துவ மனைக்கு அனுப்பப் பட்டது.

கணவர் தங்கமணியை அழைத்துப் போலீசார் விசாரித்தார்கள். அவர் இந்த விவரங்களைப் போலீசாரிடம் தெரிவித்தார்.



இது பற்றி போலீஸ் கமிஷனர் உத்தரவுப்படி, துணை கமிஷனர் துரைசாமி, உதவி கமிஷனர் ஒப்பிலியப்பன் ஆகியோர் மேற்பார்வையில், இன்ஸ்பெக்டர் இன்பநாதன் சப்-இன்ஸ்பெக்டர் சண்முகம் ஆகியோர் தலைமையில் ஏட்டு ஏகாம்பரம் மேற்கொண்டு தீவிரமாகப் புலன் விசாரித்து வருகிறார்.

மதியழகன் பெருமூச்சு விட்டான்.

'படித்த பெண்களை நம்ப முடியவில்லையே!' என்று நினைத்துக் கொண்டான்.

பளிச்சென்று மற்றோர் எண்ணம்.

நல்லவேளை, மொட்டைக் கடிதத்தைப் பற்றி அல்லியிடம் மூச்சு விடவில்லை. விட்டு இருந்தால் அவளும் தூக்கிலே தொங்கியிருக்கக் கூடும்.

இப்பொழுது அவன் சற்று ஆறுதலாக இருந்தான். அமைதியாகக் காணப்பட்டான். "கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு!" என்ற பொன்மொழியை நினைத்துக் கொண்டான்.

ஒரு வாரம் நகர்ந்தது.

ஊர் சுற்றிவிட்டு வீட்டுக்குத் திரும்பினான் மதியழகன்.

கதவைத் திறந்ததும் அவன் காலடியில் ஒரு கடிதம் கிடந்தது.

குனிந்து கையில் எடுத்ததும் யார் எழுதியது என்று பார்த்தான்.

அல்லியின் கையெழுத்து அவன் முகத்தில் ஒரு சலனத்தை உண்டாக்கியது.

சென்னை,

16-4-2004



19

அன்புள்ள அத்தான்!

நீங்கள் பெங்களூருக்குப் போனதும் கடிதம் எழுதுவீர்கள் என்று எதிர்பார்த்தேன். வழக்கம் போல ஏமாற்றி விட்டீர்கள். ஏன் இந்தப் பாராமுகம்? அல்லது உங்கள் குணமே இதுதானா?

நீங்கள் சென்ற மறுநாளே நான் அம்மா வீட்டுக்கு வந்துவிட்டேன். நேற்று நானும் அம்மாவும் டாக்டரிடம் போய் வந்தோம். டாக்டரம்மா என்னைச் சோதித்துப் பார்த்தார்கள். வளர்ச்சி நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள் 'டானிக்', 'வைட்டமின்' மாத்திரைகள் எழுதிக் கொடுத்தார். அப்பா வாங்கித் தந்து இருக்கிறார்.

அத்தான்! நீங்கள் எவ்வளவோ பூரிப்புடன் இருக்க வேண்டிய நேரம் இது. ஆனால், உங்களிடம் உற்சாகத்தையே காணோம். உங்களிடம் மகிழ்ச்சி இல்லை என்றதும், எனக்கும் குதூகலம் இல்லை. ''ஏன் இந்தக் குழந்தை வந்தது?'' என்றுகூடச் சில நேரம் தோன்றுகிறது.

நேற்று ஒரு கதை படித்தேன் ஒரு புது மணமக்கள். மனைவி குழந்தை உண்டாகிறாள். என்ன குழந்தை பிறக்கும் என்று இருவரும் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆண் குழந்தை வேண்டும் என்கிறான் கணவன். ''ஏன், பெண் பிறந்தால்



என்ன?'' என்கிறாள் மனைவி. ''பெண் குழந்தை வேண்டாம். பெரிய தொல்லை!'' என்கிறான் கணவன். ''எங்கள் அப்பாவும் இப்படி நினைத்து இருந்தால் நான் உங்களுக்குக் கிடைத் திருக்க மாட்டேனே!'' என்கிறாள் மனைவி. ''பிள்ளை பெறுகிற பெண் கூடத் தனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்றுதானே ஆசைப்படுகிறாள்!'' என்கிறான் கணவன். என்ன செய்வது? பெண் பிறவியே புண் பிறவியாக இருக்கிறதே. தான் படும் துன்பம் தன் குழந்தையும் பட வேண்டாம் என்று தாய் நினைக்கத்தானே செய்வாள் என்று மனைவி வருந்துகிறாள். ''ஏன் உனக்கு என்ன குறை?'' என்று கணவன் அவளை மடக்குகிறான். இப்படியாக நாள்தோறும் இரவில் இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்கிறார்கள்.

அதைப் படிக்கும் பொழுது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? அடக்க முடியாமல் அழுதே விட்டேன். நானே தான் என் கண்ணீரைத் துடைத்துக் கொள்ள வேண்டி இருந்தது.

நாம் இருவரும் நேரில்தான் பேசிக் கொள்ள முடிய வில்லை. கடிதத்திலாவது பேசிக் கொள்ளலாமா? உங்களைப் போல அழகான ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது! உங்களுக்கு என்ன குழந்தை வேண்டும்?

நேரத்துக்குச் சாப்பிடுங்கள். வீணாக வெளியில் அலையா தீர்கள். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். மீண்டும் வயிற்று வலியை இழுத்துக் கொள்ளாதீர்கள். (நான் பக்கத்தில் வந்தால்தானே அதுவும் வரும்? நான்தான் 250 மைலுக்கு அப்பால் இருக்கிறேனே!)

நாலு வரியாவது பதில் எழுதுங்கள். உங்கள் கடிதத்தைப் பார்த்தாலாவது உங்களைப் பார்த்தது போல இருக்கும்.

இப்படிக்கு

தங்கள அன்புள்ள மனைவி"

பெங்களூர்.

25-4-2004

அன்புள்ள அல்லிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. நீ நன்றாக இருப்பது அறிந்து மகிழ்ச்சி. நானும் நன்றாக இருக்கிறேன். திருமணத்துக்கு முன் எனக்கு வயிற்றுவலியே வந்தது கிடையாது. நீதான் கொண்டு வந்துவிட்டாயோ என்னவோ!

ஆங்கில அறிஞர் பெர்னார்ட்ஷா பற்றி ஒரு துணுக்குப் படித்து இருக்கிறாயா? அவரிடம் ஒரு நடிகை போனாளாம். ''நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாமா? உங்களைப் போல அறிவும், என்னைப் போல அழகும் உள்ள அதிசயமான குழந்தை பிறக்கும்!'' என்று சொன்னாளாம். அதற்கு பெர்னார்ட்ஷா, என்னைப் போல அசிங்கமாகவும், உன்னைப் போல முட்டாள் ஆகவும் உள்ள குழந்தை பிறந்து விட்டால் என்ன செய்வது?'' என்று கேட்டாராம்.

உன் ஆசையைப் படித்ததும் எனக்கு இந்தத் துணுக்குதான் நினைவுக்கு வந்தது. என்ன குழந்தை பிறக்கும், எப்படிப்பட்ட குழந்தை பிறக்குமென்று நாம் எப்படிச் சொல்ல முடியும்?

நம் ஆசைப்படியே எல்லாம் நடந்து விடுமா என்ன?



இங்கே வந்ததும் குழந்தை பிறப்புப் பற்றி ஓர் ஆங்கில நூல் வாங்கிப் படித்தேன். குழந்தை பிறப்பே மிகப்பெரிய புதிர் என்று அதில் எழுதப்பட்டு இருக்கிறது. ஐம்பது ஆண்டுகாலம் ஒரு கணவனும் மனைவியும் இல்லறத்தில் இணைந்து வாழுகிறார்கள். அவர்களுக்குக் குழந்தை பிறப்பது இல்லை. ஆனால், ஒரே ஒரு நாள் உறவு கொள்ளும் கள்ளக் காதலர்களுக்குக் குழந்தை உண்டாகி விடுகிறது. சில தம்பதிகள் டஜன் கணக்கில் குழந்தை பெறுகிறார்கள். சிலருக்குக் குழந்தையே இல்லை. சில பெண்களுக்கு ஆண்டுதோறும் குழந்தை பிறக்கிறது. வேறு சில பெண்களுக்கு முதல் குழந்தை பிறந்து, 10,15 ஆண்டு கழித்து அடுத்த குழந்தை பிறக்கிறது. சிலர் 16 பெறுகிறார்கள். வேறு சிலருக்கு இயற்கையாகவே ஒன்று, இரண்டுடன் நின்று விடுகிறது. சிலருக்குப் பிறப்பது எல்லாம் பெண். வேறு சிலர் ஆண் குழந்தையாகப் பெறுகிறார்கள். குழந்தைப் பிறப்புக்கு இலக்கணமோ, வரைமுறையோ எதுவும் இல்லை. மனிதனால் கண்டுபிடிக்க முடியாத பெரும் விந்தையாக இது இருக்கிறது.

குழந்தைகள் அழகாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆணோ, பெண்ணோ, பிற்காலத்தில், ''நல்ல குழந்தை' என்று பெயர் எடுக்க வேண்டும் ''இவன் தந்தை என்னோற்றான் கொல்?'' என்று வள்ளுவர் சொன்னார் அல்லவா? அதுதான் என் அசை.

அம்மா வீடு வசதியாக இருக்கிறதா? உன் ஆசை தீரும் வரை அங்கேயே இரு.

இங்கே எனக்கு வேலை அதிகமாக இருக்கிறது. அதனால்தான் அடிக்கடி அஞ்சல் எழுத முடிவது இல்லை. உன்

அம்மா, அப்பா, தங்கை எல்லோரும்நலமாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

உன் அன்புள்ள

அத்தான்."

சென்னை,

1-3-2004

அன்புள்ள அத்தான்!

உங்களுக்கு வேலை அதிகமாக இருப்பதால், அடிக்கடி கடிதம் எழுதித் தொல்லை பண்ண வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால், பாழும் உளம் கேட்கிறதா? ''எழுதடி எழுது!'' என்கிறது. எனவே, எழுத உட்கார்ந்து விட்டேன்.

உங்களைக் கல்யாணம் பண்ணியும் பிரமசாரி என்று தான் நினைத்தேன். எப்பொழுது சந்நியாசி ஆனீர்கள்? இருப்பது ஒரே மனைவி.பிறக்கப் போவது, முதல் குழந்தை. இதற்குள் வாழ்க்கை மீது ஏன் இந்த வெறுப்பு? பெரிய பெரிய தத்துவம் எல்லாம் பேசுகிறீர்களே!

உங்களுக்கு என்ன குழந்தை வேண்டும் என்று கேட்டு இருந்தேன். அதற்குப் பதிலையே காணோம். அதற்குப் பதில் பெரிய வேதாந்தம். ஏன், குழந்தையேவேண்டாம் என்று நினைக்கிறீர்களா? அதைச் சொல்ல என்ன பயம்? உங்களுக்கு வேண்டாததை அழித்து விட நானும் தயாராகத்தானே இருக்கிறேன்.

நான் எப்பொழுதோ படித்தேன் - ஆசையே இல்லாதவன் முட்டாளாம்! ஆசைகள் இல்லாதவன் வாழ்க்கையில் எப்படி முன்னேற முடியும்? மனம் போலத்தானே வாழ்வு! ஆண் குழந்தை வேண்டும், அல்லது பெண் குழந்தை வேண்டும் என்று ஆசைப்படுவதில் என்ன தவறு? என்னைப் போல முட்டாளாகப் பிறந்து விடக் கூடாதே என்று பயப்படு கிறீர்களா? அஞ்சாதீர்கள், அத்தான், அஞ்சாதீர்கள்! நிச்சயம் உங்களைப் போல அழகான அறிவார்ந்த குழந்தையே பெற்றுத் தருகிறேன்!

உங்களிடம் திருக்குறள் இருக்கிறதா? இருந்தால் எடுத்துப் பாருங்கள். ''இவன் தந்தை என்னோற்றான் கொல்?'' எனுஞ் சொல் பிறவியிலேயே வந்து விடாது. வளர்ப்பு முறையில் தான் வரும். ''தந்தை மகற்கு ஆற்றும் நன்றி...'' என்று ஒரு குறள் இருக்கிறதா? அடுத்து ''தம்மின் தம்மக்கள் அறிவுடைமை'' என்ற குறள் இருக்கிறதா? இதையும் அடுத்து, ''ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்...'' என்ற குறள் இருக்கிறதா? இதற்குப் பிறகு அல்லவா ''என்னோற்றான் கொல்'' இருக்கிறது? அறிவுடைமை ஆக்குவது தந்தையின் கடமை. சான்றோன் ஆக்குவது, தாயின் கடமை. அப்படி வளர்க்கப்படும் குழந்தைகளே ''என்னோற்றான் கொல்'' எனும் சொல்லைப் பெறும்! பிறக்கும் பொழுதே எந்தக் குழந்தையும் மகாத்மாவாகப் பிறந்து விடுவது இல்லை.

இரண்டாம் இரவில் இருந்து நீங்கள் என்னைத் தொட்டது கூட இல்லை. நானே வந்தாலும் விலகி விலகிப் போகிறீர்கள். எனவே ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். நாளையே உங்கள்

வீட்டுக்குப் போகப் போகிறேன்! இனிமேல் உங்களை விட
போவது இல்லை.

இப்படிக்கு
உங்கள் அன்
இல்லாத மனைவி."

பெங்களூர்
3-5-200

அன்புள்ள அல்லிக்கு,

அடேயப்பா! என்ன கோபம்! உன் கடிதத்தில் கனல் பறந்தது. தீயைப் பரவ விடக்கூடாது. உடனே அணைக்க வேண்டும் என்றுதான் உன் கடிதத்தைப் படித்ததும் நான் பதில் எழுத உட்கார்ந்து விட்டேன்.

உன் மீது எனக்கு இருக்கும் அன்பை எத்தனையோ முறை உன்னிடம் சொல்லிவிட்டேன். நீ என்னைக் குத்தும் பொழுது நானும் ஏதாவது சொல்லி விடுகிறேன்; அல்லது எழுதி விடுகிறேன், இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே.

நீ கோபப்படக்கூடாது. பிறகு, உன் வயிற்றில் வளரும் குழந்தையும் கோபக்காரக் குழந்தையாக ஆகிவிடும். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருக்கப் பழகு.

உன் அன்புள்ள
அத்தான்."



சென்னை,
7-8-2004

அன்புள்ள மகன் மதியழகனுக்கு அம்மா எழுதியது.

இங்கு நாங்கள் எல்லோரும் நல்ல சுகம். நீயும் சுகமாக இருப்பாய் என்று நினைக்கிறேன்.

நேற்று அல்லியின் அம்மா வந்து இருந்தார்கள். அவளுக்குச் சீர் செய்து, அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போக விரும்புகிறார்கள். அப்பொழுது நீயும் இங்கே இருந்தால் நன்றாக இருக்கும். நீ எப்பொழுது வர முடியும்? உடனே எழுது. அதன்பின்தான் நல்ல நாள் பார்க்க வேண்டும்.

அன்புள்ள
உன் அம்மா.

பெங்களூர்,
15-8-2004

அன்புள்ள அம்மா அவர்களுக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது.

எனக்குச் சமீபத்தில் பதவி உயர்வு வரும் போல இருக்கிறது. அப்பொழுது நான் இங்கே இருக்க வேண்டும். எனவே, இப்பொழுது நான் அங்கே வர இயலாது. செய்ய வேண்டிய எல்லாவற்றையும் நீங்களே செய்து விடுங்கள்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள மகன்

சிதம்பரநகர்
தூத்துக்குடி





## 20

மருமகளைப் பார்க்கப் பொன்மணி வந்து இருந்தாள்.

வளைகாப்பு எல்லாம் முடிந்து அல்லி தாய் வீட்டுக்கு வந்தது முதல் தன் வீடே வெறிச்சென்று இருப்பது போல இருந்தது பொன்மணிக்கு. மகன் பெங்களூருக்குப் போன பொழுதுகூட இந்த அளவு வெறுமையை அவள் உணர வில்லை. மருமகள் மீது அவ்வளவு பாசம் ஏற்பட்டு விட்டது.

அடுத்த மாதம் குழந்தையை எதிர்பார்த்துக் கொண்டு இருந்த அல்லியால், ஓடியாடி மாமியாருக்கு உபசாரம் செய்ய இயலவில்லை. ''வாருங்கள் அத்தை!'' என்று அழைத்து அமரச் செய்தாள். சிற்றுண்டி கொண்டு வந்து கொடுத்தாள். அவள் அம்மா காப்பி கலக்க அடுப்படிக்குச் சென்றாள்.

''அவரிடம் இருந்து கடிதம் ஏதாவது வந்ததா, அத்தை?'' அருகில் அமர்ந்து இருந்த அல்லி ஆற்றாமையுடன் கேட்டாள்.

கேட்கக் கூடாது என்றுதான் வெகு நேரமாக அடக்கிக் கொண்டு இருந்தாள். ஆனால் முடியவில்லை.

அவளது வளைகாப்புக்கு மதியழகன் வரவில்லை. அவன் எழுதியிருந்தது போலவே, அவனுக்குப் பதவி உயர்வு வந்து இருந்தது. இப்பொழுது பொறுப்புகள் அதிகம். ஆனால், ஒரு ஞாயிற்றுக்கிழமையில் வந்து போகக் கூடாதா? அல்லிக்குச் சொல்ல முடியாத துயரம். விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் குமைந்து கொண்டு இருந்தாள்.

ஆள்தான் வரவில்லை. அவளுக்கு அஞ்சலாவது எழுதக் கூடாதா? ''உங்கள் குழந்தை அதிர்ஷ்டக்காரக் குழந்தை பிறக்கு முன்பே உங்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து

17054



விட்டது!'' என்று இவள் கடிதம் எழுதினாளே, அதற்குப் பதிலாவது போடக் கூடாதா?

அவனிடம் இருந்து கடிதம் இல்லை என்றதும், இவளும் அவனுக்குக் கடிதம் எழுதுவது இல்லை.

எதுவும் நினைக்கக் கூடாது என்றுதான் எண்ணுகிறாள். வயிற்றில் இருக்கும் குழந்தையைப் பாதிக்குமே என்று பயப்படுகிறாள். ஆனால், முடியவில்லையே. பகல் பொழுதாவது எப்படியாவது போய்விடுகிறது. இரவில் தலையணையை நனைக்க வேண்டியிருக்கிறதே!

''அவனிடம் இருந்து கடிதமே இல்லை. வேலை அதிகம் போலிருக்கிறது!'' என்றாள் பொன்மணி.

அல்லி சிறிது நேரம் தலையைக் குனிந்து கொண்டு இருந்தாள். பிறகு கேட்டாள். ''அத்தை! அவரது சம்மதத் துடன்தானே இந்தத் திருமணம் நடந்தது?''

பொன்மணி வியப்புடன் மருமகளைப் பார்த்தாள். ''ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''என்னை அவருக்குப் பிடிக்கவில்லையோ என்று நினைக்கிறேன். கட்டாயப்படுத்தி என்னைக் கட்டிக் கொள்ளச் சொன்னீர்களா?'' அல்லியின் ஆழ்கடல் கண்களில் இருந்து முத்துக்கள் உதிர்ந்தன.

''சே சே! அசடு போலப் பேசாதே! உன்னை அவனுக்கு எவ்வளவு பிடித்து இருக்கிறது தெரியுமா? திருமணம் முடிந்ததும் உன்னைப் பற்றி என்னிடம் எவ்வளவோ பெருமையாகச் சொன்னான். அப்பொழுதுதானே அவன் முதன் முதல் உன்னைப் பார்த்தான்.

''முதல் நாள் என்னிடம் கூட நன்றாகத்தான் இருந்தார். அடுத்த நாளில் இருந்து அடியோடு மாறிப் போனார்.''

''அடுத்த நாள் அவனுக்கு வயிற்று வலி வந்து விட்டது அல்லவா?''

''அதற்கு நான்தான் காரணம் என்று நினைக்கிறாரா? அவருக்கு வயிற்றுவலி என்பதைக் கூட என்னால் நம்ப முடியவில்லை.''

''அல்லி! நீ வயிற்றுப் பிள்ளைக்காரி. கண்டதையும் எண்ணி கவலைப்படக் கூடாது. எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். அதுதான் உனக்கும் நல்லது. உன் பிள்ளைக்கும் நல்லது.''

''நானும் அப்படி இருக்கத்தான் முயற்சி செய்கிறேன், அத்தை. ஆனால், முடியவில்லை. என்னிடம் என்ன தவறு கண்டார்? என்ன குறை கண்டார்? கூறட்டும். திருத்திக் கொள்ளுகிறேன்.''

சம்பந்தி அம்மா காபி கொண்டு வந்தாள்.

இவர்கள் இவரும் பேச்சை நிறுத்தி விட்டார்கள்.

காபியைக் குடித்துவிட்டுப் பொன்மணி கிளம்பினாள்.

போகும்பொழுது மருமகளுக்கு மட்டும் கேட்கும்படி சொன்னாள் - ''நீ ஒன்றும் கவலைப்படாதே, அம்மா. நான் போய் அவனுக்குக் கடிதம் எழுதுகிறேன்.''

அடுத்த இரண்டு நாளில் அம்மாவிடம் இருந்து மதியழகனுக்குக் கடிதம் வந்தது.

அல்லி கவலைப்படுகிறாளாம். படட்டுமே!

அல்லி அழுகிறாளாம். அழட்டுமே!



அவளுக்கு இது தலைப் பிரசவமாம். யார் கண்டது? அவள் சொன்னால் சரிதான்.

பிரசவ நேரத்தில் கணவன் அருகிலேயே இருக்க வேண்டும் என்று பெண்கள் விரும்புவார்களாம். ஆண்களுக்கு வேறு வேலையே கிடையாது அல்லவா!

வண்டி வண்டியாக ஆலோசனைகள் கூறியிருந்தாள் பொன்மணி. ''எல்லாம் எனக்குத் தெரியாதா என்ன!'' என்று எண்ணினான் மதியழகன்.

''எல்லா மனைவிகளையும் போல அவள் இருந்தால், அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்வேனே!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

கேடு கெட்டவள்! அவள் கூடவே இருக்க நானும் வெட்கம் கெட்டு விடவில்லையே!

குழந்தை பிறக்கும்பொழுது அவள் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று இவனும் எண்ணத்தான் செய்தான். ஆனால், அதற்குக் காரணந்தான் வேறு.

குழந்தை யாரைப் போல இருக்கிறது?

இதைப் பார்க்க வேண்டும்.

அது யார் குழந்தை என்பதை அறிய இப்பொழுது அவனுக்குத் தோன்றிய ஒரே வழி இதுதான்.

அவள் அருகில் இருந்தால் பிறந்ததும் குழந்தையைப் பார்த்து விடலாம்.

குழந்தை அவனைப் போல இல்லாமல், வேறு யாரைப் போலவோ இருந்தால்...

அவனால் தாங்கிக் கொள்ளவே முடியாது. ஒரு முழக்கயிறைத் தேடிக் கொள்ள வேண்டியதுதான். இதனால்

தான் போவதற்கு அவன் அஞ்சினான். குழந்தை பிறந்த பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

அம்மாவுக்கு உடனடியாகப் பதில் எழுதவில்லை. ஒரு வாரம் கழித்து எழுதினான்.

''அன்புள்ள அம்மா அவர்களுக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது.

குழந்தை என்றைக்குப் பிறக்கும் என்பது திட்டவட்டமாகத் தெரியாமல், நான் அங்கே வந்து காத்துக் கொண்டு இருக்க இயலாது. இங்கே எனக்குப் பொறுப்புகள் அதிகம்.

குழந்தை பிறக்கும் நாள் என்று டாக்டர்கள் ஒருநாளைக் குறித்துக் கொடுத்து இருப்பார்கள். ஆனால்,அந்த நாளில் குழந்தை பிறப்பது இல்லை. பத்துநாள் கூட முன்பின் ஆகும். இருபது, முப்பது நாள் கூட பிந்திப் பிறக்கும் என்பார்கள். என் வேலைகளைப் போட்டு விட்டு, இத்தனை நாள் நான் அங்கே வந்து இருக்க முடியுமா?

இங்கே ஒருவன் வேலை செய்கிறான். அவன் பாட்டி மரணப் படுக்கையில் இருப்பதாகத் தந்தி வந்தது. நாலு நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு ஊருக்குப் போனான். அந்தக் கிழம் எப்பொழுது கண்ணை மூடும் என்று காத்துக் கொண்டு இருந்து இருக்கிறான். ''இப்பவோ அப்பவோ'' என்று இருந்த கிழம், பத்து நாள் ஆகியும் இழுபறியில் கிடந்தது. இவன் திரும்பி வந்துவிட்டான். வீண் அலைச்சல், வேண்டாத செலவு. பாட்டி செத்து விட்டதாக நேற்றுத் தந்தி வந்தது. மீண்டும் ஊருக்குப் போயிருக்கின்றான்.

அவன் சாதாரண ஊழியன், வேலையைப் போட்டு நினைத்த நேரம் ஊருக்குப் போக முடியும். நான் அப்படி



முடியுமா? குழந்தை பிறந்த பிறகு எனக்கு எழுதுங்கள். பார்க்க வருகிறேன்.

இப்படிக்கு,

உங்கள் அன்புள்ள மகன்''

கடிதத்தைப் படித்துவிட்டுப் பொன்மணி அழுது விட்டாள்.

தன் மகன் எப்படி இப்படி மாறிப் போனான் என்று ஆச்சரியப்பட்டாள்.

தான் சாகக் கிடந்தால் கூட மகன் பார்க்க வரமாட்டானோ என்று ஆத்திரப்பட்டாள்.

அல்லி மீது அவனுக்கு என்ன கோபம்? ஏன் இந்தப் பாரா முகம்? அவளுக்குப் பிடிபடவில்லை.

குழந்தை பிறந்ததும் கடிதம் எழுத வேண்டுமாம். வந்து பார்ப்பானாமே. ''தந்தி கொடுங்கள். போன் பண்ணுங்கள்!'' என்று எழுதக்கூட அவனுக்குக் கைவரவில்லையே!

ஏழு, எட்டா பெற்று விட்டான்?

இது முதல் குழந்தை. இந்தக் குழந்தையைப் பார்க்கக் கூட ஆசையில்லாமல் போய் விட்டானே!

அல்லி மீது கோபம் இருக்கட்டும். அதற்குக் குழந்தை என்ன செய்யும்?

இந்தக் குழந்தை பிறந்தாவது அவர்கள் இடையே நல்ல உறவு ஏற்பட வேண்டும் என்று முருகனை வேண்டிக் கொண்டாள்.

மருமகளைப் பார்க்கப் போகவில்லை. போனால், ''அத்தை! அவரிடம் இருந்து கடிதம் வந்ததா?'' என்று கேட்பாளே.

மகனுக்கும் பிறகு கடிதம் எழுதவில்லை. இவ்வளவு கல் நெஞ்சம் படைத்தவனுக்கு என்ன எழுதுவது?

நாள் ஆக ஆக அல்லியிடம் வெறுப்பு வளர்ந்து கொண்டே வந்தது. அம்மிக் குழவியை எடுத்து வயிற்றில் இடித்துக் கொள்ளலாமா என்கிற அளவுக்கு அவள் உளம் போய் விட்டது.

நேரில் பார்க்கும்பொழுது அவளிடம் அவன் சிரித்துப் பேசினாலும், அவனது பாராமுகத்தை இப்பொழுது அவள் நன்றாக உணர முடிந்தது. அதற்கு என்ன காரணம் என்பது புரியாமல் நெருப்பில் விழுந்த புழுவாகத் துடித்தாள். ''இந்த அழகில் குழந்தை வேறா?'' என்று நொந்து கொண்டாள். குறித்த நாள் நெருங்க நெருங்க அவளை வெறுப்பு கொஞ்சம் கொஞ்சமாக அரித்துத் தின்னத் தொடங்கிவிட்டது.

ஆனால், குழந்தை எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. கால்களை உதைக்கத் தொடங்கிவிட்டது. ஒன்பதாம் மாதமே இருட்டறையில் இருந்து வெளி உலகுக்கு வரத் துடித்தது. அவளுக்கு இடுப்பில் சரியான வலி. உடனே மருத்துவ மனைக்கு அழைத்துப் போனார்கள்.

பிரசவ அறையில் அவள் வெறி பிடித்தவள் போல ''ஓ'' என்று அழுதாள். ''என்னைக் கொன்றுவிடுங்கள்!'' என்று அலறினாள். வலிப்பு வந்தது. டாக்டர் ஊசி போட்டு அதைச் சரிப்படுத்தியதும் மயங்கிப் போனாள்.

தாயின் மயக்கத்திலேயே குழந்தை பிறந்தது.

ஆனால், அவள் ஆசை ஆசையாக எதிர்பார்த்த குழந்தை அல்ல அது.





## 21

மதியழகன் நல்ல அழகன். அவன் பெண்ணாக இருந்து இருந்தால், ரதியாக வர்ணிக்கப்பட்டு இருப்பாள், அவனைப் போல ஒரு பெண் குழந்தை பிறந்தால், தங்கத்தில் வைரத்தைப் பதித்தது போலக் கொள்ளை அழகாக இருப்பாள் என்று அல்லி முதலில் ஆசைப்பட்டது உண்மைதான்.

பிறகு அவன் மீது வெறுப்பு ஏற்பட்டதும், 'பெண்ணாகப் பிறந்து நான் படுகிற பாடு போதாதா? என் மகளும் ஏன் இந்தப் பாடுபட வேண்டும்? ஆண் குழந்தையே பிறக்கட்டும்' என்று எண்ணினாள்.

அவன் மீது ஏற்பட்ட வெறுப்பு நாளுக்கு நாள் வளர வளர, ''அப்பன் படுத்துகிற பாடே போதும். இதுவும் ஆணாகப் பிறந்து இன்னொரு பெண்ணின் வயிற்றெரிச்சலை அள்ளிக் கட்டிக் கொள்ள வேண்டாம். பிறப்பது பிறக்கட்டும்!'' என்று நினைத்தாள்.

வெறுப்பு நெருப்பாகி, வாழ்க்கையே கசந்துவிட்ட பொழுது, ''நான் கெட்ட கேட்டுக்குக் குழந்தை ஒரு கேடா? இது பிறக்கவே வேண்டாம். என் வயிற்றிலேயே செத்துத் தொலையட்டும்!'' என்று குமைந்தாள்.

இத்தனை குழப்பங்களுக்கு இடையே, அந்தக் கரு அழிந்துவிடாமல், அலியாகப் போய் விடாமல், ஆணாகப் பிறந்தது. குறை மாதக் குழந்தை என்றாலும், வளர்ச்சி முழுமையாக இருந்தது.

ஆண் குழந்தை என்றதும் அல்லியின் தாய், மாமியார் மற்ற எல்லோர் முகமும் மகிழ்ச்சியில் மின்னியது. ஆனால் ஒரு கணம்தான். மறுகணம் அவர்கள் முகம் இருண்டது.

குழந்தை மிகவும் தொல்லைப் பட்டுப் பிறந்தது. டாக்டர் ஒரு போராட்டமே நடத்த வேண்டியிருந்தது. அந்தப் போராட்டத்தில் கருவிகளையும் பயன்படுத்தினார். கடைசியில் குழந்தை நல்லபடியாக வெளியில் வந்து சேர்ந்தது.

அல்லியை மாதந்தோறும் கவனித்து வந்தது இந்த டாக்டர் அம்மாதான். சுகப் பிரசவமாக இருக்கும் என்று அவர் எதிர்பார்த்தார். இவ்வளவுதொல்லை கொடுத்தது அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. முதல் பேறு என்பதால் அல்லி மிகவும் பயந்து தன்னுடன் ஒத்துழைக்கவில்லை என்று டாக்டரம்மா கருதினார்.

குழந்தை நல்லபடியாகப் பிறந்து விட்டாலும், பெற்றவள் வெட்டிப் போட்ட வெற்றிலைக் கொடி போலத் துவண்டு கிடந்தாள். அவளுடைய உயிரைக் காப்பாற்ற டாக்டர் அவசர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது. குருதியும் உயிர்க்காற்றும் செலுத்தினார். நாலைந்து ஊசிகள் போட்டார்கள். டாக்டரம்மா பக்கத்திலேயே இருந்தார்.

அரை நாள் போராட்டத்துக்குப் பிறகு அல்லி கண் விழித்தாள்.

சுற்றி நின்ற அனைவரையும் ஒரு முறை பார்த்தாள்.

அம்மா... டாக்டர்... மாமியார்... தங்கை... நர்சு... மீண்டும் கண்களைச் சுழற்றினாள்.

யாரைத் தேடுகிறாள்?

நிச்சயமாக அவள் குழந்தை ''அப்பா'' என்று அழைக்கப் போகிறவனைத்தான்.

அவனைக் காணாமல் அவள் மீண்டும் சோர்ந்து போனாள்.



''இப்பொழுது எப்படியம்மா இருக்கிறது?'' தாய் பரிவுடன் கேட்டாள்.

அல்லி அன்னையை நோக்கினாள். ஆனால் பதில் சொல்லவில்லை.

''ஆண் குழந்தை. பார்க்கிறாயா?'' மாமியார் வினவினார்.

அல்லியிடம் ஒருவித உணர்ச்சியும் எதிரொலிக்கவில்லை. மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

''மகளே....'' அவளுடைய அம்மா விம்மி விட்டாள்.

டாக்டர் அவசரமாக நாடி பார்த்தார். இரத்த அழுத்தம் பார்த்தார். ''எல்லாம் நன்றாக இருக்கிறது. கவலை வேண்டாம். களைப்பாக இருக்கிறாள். தூங்கட்டும்!'' என்றார்.

இரண்டு மணி நேரத்தில் அல்லி மீண்டும் கண் விழித்தாள்.

அப்பொழுது அவளுடைய தாய் மட்டுமே அருகில் இருந்தாள்.

''அல்லி!'' என்று வாஞ்சையுடன் மகளின் கூந்தலைத் தடவினாள்.

''நான் பிழைத்துக் கொண்டேனா, அம்மா?'' அல்லி கேட்டாள்.

''ஏனம்மா இப்படியெல்லாம் பேசுகிறாய்?'' தாய் அழுது விட்டாள்.

''அழாதீர்கள் அம்மா. இனி நான் சாக மாட்டேன். குழந்தைக்காகவாவது இனி வாழ்ந்துதானே தீர வேண்டும்?'' அவள் கண்களிலும் நீர் வடிந்தது.

பேச்சுக் குரல் கேட்டு மாமியார் பொன்மணி வந்தாள். அவள் கைகளில் குழந்தை! ''உன் குழந்தையைப் பார்த்தாயா

அல்லி? ஆண் குழந்தை!'' பேரன் பிறந்துவிட்ட பூரிப்பு அவள் குரலில் நன்றாகத் தெரிந்தது.

அல்லி குழந்தையைப் பார்த்தாள்.

அவள் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை. நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன. ''இந்தக் குழந்தை எந்தப் பெண்ணை என்ன பாடுபடுத்தப் போகிறதோ?'' என்று நினைத்து இருப்பாளோ?

''அவர் வரவில்லையே அத்தை?'' துயரத்தோடு கேட்டாள்.

''எல்லோரும் உன்னைக் கவனித்துக் கொண்டு இருந்ததில், அவனுக்குத் தகவல் சொல்லக்கூட முடியவில்லை. இங்கே போன் இருக்கிறது. போனில் கூப்பிட்டுச் சொல்லுகிறேன்,'' என்றாள் பொன்மணி.

''வேண்டாம், அத்தை.''

அல்லி தடுத்தாள்.

''ஏன்?''

''அவர் வரமாட்டார். சும்மாவே வராதவர், சொல்லியும் வராவிட்டால், என் இதயம் வெடித்துப் போகும்.''

''அப்படி யெல்லாம் சொல்லாதே. அவன் நிச்சயம் வருவான்!'' என்றாள் பொன்மணி.

மகளுக்கும், அவள் கணவனுக்கும் இடையே ஏதோ மனத்தாங்கல் இருக்கிறது என்று அல்லியின் அன்னை ஊகித்துக் கொண்டாள். ஆனால் அதுபற்றி அப்பொழுது அவள் ஒன்றும் கேட்டுக் கொள்ளவில்லை.

மருத்துவ மனையில் தொலைபேசி இருந்தது.



டாக்டரின் அனுமதி பெற்ற பொன்மணி பெங்களூருக்குப் பேசினாள்.

மறுமுனையில் வரவேற்புப் பெண் குரல் கொடுத்தாள். மதியழகன் ஊரில் இல்லையாம். நேற்றுதான் டெல்லிக்குப் போனானாம். திரும்பி வர நாலைந்து நாள் ஆகுமாம்.

பொன்மணி திரும்பி வந்து மருமகளிடம் விவரம் சொன்னாள்.

அந்தத் துயரத்திலும் அவள் முறுவலித்தாள். ''இரண்டு நாளில் குழந்தை பிறக்கும் என்று அவருக்குத் தெரிந்து இருக்கும். அதுதான் டெல்லிக்கு ஓடிவிட்டார்.''

''அப்படியெல்லாம் இல்லை அம்மா. ஏதோ அவசர வேலை என்று சொன்னார்கள்.''

''பிரசவம் என்பது செத்துப் பிழைப்பது - மறுபிறவி எடுப்பது என்பது அவருக்குத் தெரியாதா? மனைவி செத்தாளா, இருக்கிறாளா என்பதைத் தெரிந்து கொள்வதை விட, தன் இரத்தத்தின் இரத்தமாகப் பிறந்த குழந்தையைப் பார்ப்பதைவிட, அப்படி என்ன முக்கியமான வேலையாம்.''

''டெல்லியில் எங்கே இருக்கிறான் என்று கேட்டு டெல்லிக்கே நான் போன் செய்கிறேன். மகன் பிறந்து இருக்கும் செய்தி கேட்டதும், டெல்லியில் இருந்தே இங்கே பறந்து வருவான் பார்.''

''பார்த்துப் பார்த்து நான் ஏமாந்தது போதும், அத்தை''

''நடந்ததை எல்லாம் மறந்து விடு. மகன் பிறந்து விட்டானே. இனி உனக்குப் புதுவாழ்வுதான். மதியழகன் உன்னையே சுற்றிச் சுற்றி வரப் போகிறான்.''

அல்லி வறட்சியாகச் சிரித்துக் கொண்டாள்.

''திருமணம் ஆனதும் உங்களைப் பிரித்து வைத்தது தான் தப்பு. கையோடு உன்னைப் பெங்களூருக்கு அழைத்துக் கொண்டு போகச் சொல்லியிருக்க வேண்டும். போகட்டும். குழந்தைக்குப் பெயர் வைத்ததும், அவனோடு உன்னை அனுப்பி வைத்து விடுகிறோம்.''

''பாவம், அத்தை. அவருக்கு மீண்டும் வயிற்றுவலி வந்து விடப் போகிறது!'' அல்லி கேலி செய்தாள்.

உண்மையாகவே அலுவலக வேலையாகத்தான் மதியழகன் டெல்லிக்குப் போயிருந்தான். அங்கே அதிகாரி களையும், அமைச்சர் ஒருவரையும் பார்க்க வேண்டியிருந்தது. ஆனால், ''தெய்வ தரிசனம்'' கிடைக்க நாள் ஆகிவிட்டது. பத்து நாள் கழித்துத்தான் பெங்களூருக்குத் திரும்பினான்.

அவன் டெல்லியில் இருந்தபொழுதே பொன்மணி அவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். குழந்தை பிறந்துவிட்ட செய்தியைக் கேட்டதும், மதியழகன் அதிர்ச்சியடைந்தான். ''ஒன்பது மாதம்தானே ஆகிறது?'' என்று கத்தினான்.

''குறைமாதக் குழந்தையடா. ஆனால் குறையில்லாமல் இருக்கிறது. வந்து பார். உடனே புறப்பட்டு வருகிறாயா?'' பொன்மணி கண்டிப்பான குரலில் பேசினாள்.

''இன்று ஓர் அமைச்சரைப் பார்க்க வேண்டும். மாலை நாலுமணிக்கு வரச் சொல்லியிருக்கிறார்,'' என்று கூறிவிட்டு, ஒலிவாங்கியை வைத்துவிட்டான் மதியழகன்.

அவன் பெங்களூருக்குத் திரும்பிய பின்பும் பொன்மணி தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். ''கொஞ்சம் வேலையிருக்கிறது அம்மா. முடிந்ததும் நானே புறப்பட்டு வருகிறேன்,'' என்றான்.



அதை இதைச் சொல்லி நாளைக் கடத்தினான். நேரில் சென்று குழந்தையைப் பார்க்க அவனுக்கு அச்சமாக இருந்தது. அது வேறு யாருக்கோ பிறந்த குழந்தை என்பது நிச்சயமாகி விட்டால்...

நிச்சயமாகி விட்டதாகத்தான் அவன் நினைத்தான். இல்லாவிட்டால், எப்படி ஒன்பதாம் மாதமே குழந்தை பிறக்கும்? வெட்கக் கேடு, சினை மாட்டை அவன் தலையில் கட்டி விட்டார்கள்!

குறை மாதத்தில் பிறந்தாலும், குழந்தை குறையில்லாமல் இருக்கிறதாமே! அது எப்படியிருக்க முடியும்? உண்மை தெரியாதவர்கள் ''குறை மாதம்'' என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள்.

இப்பொழுது உண்மை வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது என்று நினைத்தான் அவன். ஒன்பதாம் மாதமே குழந்தை பிறந்து இருக்கிறதே... வேறு என்ன சான்று வேண்டும்? எனவே, குழந்தை பிறந்ததை நண்பர்கள் யாரிடமும் அவன் சொல்லவில்லை.

குழந்தை அவனைப் போல இல்லை என்பதும் உறுதியாகி விட்டால், வேறு பேச்சுக்கே இடம் இருக்காது.

''அம்மா! குழந்தை யாரைப் போல இருக்கிறது?'' தொலைபேசியில் பேசிய அம்மாவிடம் ஒருமுறை கேட்டான் அவன். ''வந்து பாருடா!'' என்று கன்னத்தில் அறைந்தது போல அம்மா சொல்லி விட்டார்.

எப்படியோ போய்ப் பார்த்துத்தானே ஆகவேண்டும்? எத்தனை நாளைக்குத் தள்ளிப்போட முடியும்?

இந்த நிலையில் பொன்மணியிடம் இருந்து கடிதம் வந்தது.

குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா நடக்க இருக்கிறதாம். அவன் அவசியம் வர வேண்டுமாம்! விழா முடிந்ததும், அல்லியையும், குழந்தையையும் பெங்களூருக்கு அழைத்துப் போய் விட வேண்டுமாம். அங்கு ஓட்டலில் தங்கிக் கொண்டு வீடு பார்த்துக் கொள்ளலாமாம்.

ஆகா! வெள்ளம் தலைக்குமேல் வந்துவிட்டதே! இனியும் தள்ளிப்போட முடியாது. இரண்டில் ஒன்றைப் பார்த்து விட வேண்டும்.

குழந்தை மட்டும் அவன் சாயலாக இல்லாவிட்டால்...

குறைமாதம் என்ற கட்டுக் கதை தூள் தூள் ஆகிவிடும்!

''இனி நான் உன் கணவனும் அல்ல; நீ என் மனைவியும் அல்ல. இந்தக் குழந்தைக்கு நான் தந்தையும் அல்ல.''

அவள் முகத்தில் காறித் துப்பிவிட்டு வந்துவிட வேண்டியதுதான்!

உறுதியான முடிவுடன் மதியழகன் ரெயில் ஏறினான்.



## 22

''அம்மா! அண்ணா வந்திருக்காங்க.''

அடுப்படிக்குள் குதித்துக் கூவினாள் கடைக்குட்டி.

''யாரு?'' பொன்மணி அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தாள். ''உன் அண்ணனா?''

''ஆமாம், அம்மா.''

இதற்குள் மதியழகன் அடுப்படிக்கு வந்தான், ''அம்மா...''



பொன்மணி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''அம்மா!'' மதியழகன் அருகில் வந்தான்.

''உன்னோடு பேசமாட்டேன் போ!'' பொன்மணி வேக வேகமாக வேலையைப் பார்த்தாள்.

''ஏனம்மா?''

''உன் முகத்தில் விழிக்கக் கூட எனக்கு வெறுப்பாக இருக்கிறது.''

''நான் உடனே வரவில்லை என்று கோபமா, அம்மா?''

''எனக்கு என்ன கோபம்? மன்னனுக்கு இப்பொழுதுதான் வழி தெரிந்து இருக்கிறது.''

''அப்படியெல்லாம் இல்லை அம்மா. பதவி உயர்வு வந்ததில் இருந்து வேலை அதிகம்.''

''அல்லியைப் பார்த்தாயா? முதலில் அவளையும், பிள்ளையையும் பார்த்துவிட்டு வா. இல்லாவிட்டால், உன்னோடு பேசக் கூட மாட்டேன்.''

''பார்க்கத்தானே அம்மா வந்து இருக்கிறேன்.''

''எப்பொழுது வந்து இருக்கிறாய்? உன் பிள்ளையை இன்று மாலை தொட்டிலில் போடுகிறார்கள். பெயர் சூட்டுகிறார்கள். நீ காலையில் வந்து நிற்கிறாய். கேட்பவர்களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியவில்லை என்னால்.''

''மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா!'' தாய் கோபமாக இருக்கவே இவன் தாழ்ந்து பேசினான்.

''உறவினர்களை அழைக்க வேண்டும். குழந்தைக்கு நகைகள், சாமான்கள் வாங்க வேண்டும். இவையெல்லாம்

யார் செய்வார்கள் என்று நினைத்தாய்? மரம் போல் வந்து நிற்கிறாய்.''

''எவன் பிள்ளைக்கோ நான் ஏன் செய்ய வேண்டும்?'' என்று சொல்ல நினைத்தான். ஆனால், நாவை அடக்கிக் கொண்டான். ''என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் அம்மா. ஒரு நொடியில் செய்து முடிக்கிறேன்.''

''முதல் வேலையாக அல்லியைப் போய்ப் பார். எப்படியிருந்த பெண் எப்படிப் போய்விட்டாள்! எலும்பும் தோலுந்தான் மிச்சம். பிரசவத்தில் அவள் பிழைத்ததே மறு பிழைப்புதான்.''

மதியழகன் நகத்தைக் கடித்துக் கொண்டு நின்றான்.

''கணவன் மனைவிக்குள் ஆயிரம் இருக்கும். அதில் அடுத்தவர்கள் தலையிடக் கூடாதுதான். ஆனால், இவ்வளவு முற்றிய பிறகு பெரியவர்கள் கண்டும் காணாமல் இருக்க முடியுமா? அதிலும் நான் உன்னைப் பெற்றவள். நீ நன்றாக இருந்தால்தான் என் பெற்ற வயிறு குளிரும். உங்களுக்குள் என்ன சண்டை, சொல். அல்லியை ஏன் இப்படி அலட்சியமாக நடத்துகிறாய்?''

''அவளுக்காக ஏன் இப்படிப் பரிந்து கொண்டு வருகிறீர்கள்? அவள் அதற்கு அருகதையற்றவள்!'' என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. ஆனால், அடக்கிக் கொண்டு நின்றான்.

''சொல்லப்பா, நாலு சுவர்களுக்குள் மட்டும் ஏதாவது நடந்து இருந்தால், நான் ஒன்றும் கேட்டிருக்க மாட்டேன். ஆனால், உன் அலட்சியப் போக்கினால் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அல்லி அழுவதைப் பார்த்து அவளுடைய அம்மா கண்கலங்குகிறார்கள். பெற்ற மகள் கண் கலங்கினால்



பெற்றவள் என்ன பாடுபடுவாள் என்பது எனக்குத்தான் தெரியும். ஏன் அவளை அப்படிக் கண்கலங்க விடுகிறாய்? உனக்கு அவளைப் பிடிக்கவில்லையா? ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொண்ட பிறகு, ''பெண்டாட்டி பிடிக்கவில்லை!'' என்று சொன்னால் ஊர் சிரிக்கும்.''

''அது என் பிள்ளை இல்லை அம்மா!'' உள்ளம் உரைத்தது. உதடுகள் துடித்தன. ஆனால் குரல் வெளியில் வரவில்லை.

''என்னடா முனகுகிறாய்? சொல்வதைத் தெளிவாகச் சொல்.''

''நீங்கள் நினைக்கிறபடியெல்லாம் எதுவும் இல்லை!'' மதியழகன் பட்டும் படாமல் பேசினான்.

''போய் முதலில் அல்லியையும், பிள்ளையையும் பார்த்து விட்டுவா. மாலையில் விழா நல்லபடி முடியட்டும். பிறகு உன்னிடம் பேசிக் கொள்ளுகிறேன்.''

மதியழகன் தலை குனிந்தபடி நின்று இருந்தான். அவன் உளம் பேசியது. ''பார்க்கத்தான் போகிறேன், பேசத்தான் போகிறேன்.''

''அவர்களைப் பார்க்கப் போவது இல்லையா?'' பொன்மணியின் குரல் சூடாக ஒலித்தது.

மதியழகன் நகர்ந்தான்.

''எங்கே போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போ.''

''அங்கேதான் போகிறேன்.''

''அங்கே போயும் இப்படி மண்ணாந்தை மாதிரி நிற்காதே. அவள் ஒரேயடியாக உடைந்து போயிருக்கிறாள். நல்லபடி பேசி அவளைச் சமாதானப்படுத்து.''

ஒன்றும் சொல்லாதபடி அவன் நடந்தான்.

மாலையில் குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழா.

அதற்கான வேலைகள் அல்லியின் வீட்டில் நடந்து கொண்டு இருந்தன. சின்ன வீடுதான். வண்ணத்தாள்கள் கட்டி, பலூன்கள் தொங்கவிட்டு, அழகுபடுத்தும் வேலையில் ஈடுபட்டு இருந்தார்கள்.

''மாப்பிள்ளையை இன்னும் காணோமே?'' அல்லியின் தாய் அலை மோதினாள்.

''நேற்று இரவு பெங்களூருக்குப் போன் பண்ணினேன். மாப்பிள்ளை புறப்பட்டு விட்டார் என்றார்கள். எப்படியும் வந்து விடுவார்.''

''இங்கே வருவதாகச் சொன்னாராம்மா?''

''ஆமாம், குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா நடக்கிறது; போக வேண்டும் என்று தலைமை நிர்வாகியிடம் லீவு கேட்டாராம். அதன் பின் தான் குழந்தை பிறந்து இருக்கும் விவரம் அங்கே எல்லோருக்கும் தெரியுமாம்.''

''மாப்பிள்ளை ஏன் இப்படி இருக்கிறார் என்று தெரிய வில்லை. அல்லியும் ஒன்றும் சொல்ல மாட்டேனென்கிறாள்.''

''மாப்பிள்ளை இன்று வருகிறார் அல்லவா? அவரிடமே பேசி விடுவோம். அவருக்கு ஏதாவது குறை இருந்தால், அதையும் தீர்த்து வைப்போம்.''

அல்லி அறைக்குள் இருந்தாள். கட்டிலுக்குப் பக்கத்தில் தொட்டில். குழந்தை நிம்மதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தது. அல்லி அழுது அழுது மரத்துப் போனாள். துயரத்துடன் கட்டிலில் விழுந்து கிடந்தாள்.



விழா நடத்துவதில் அவளுக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை. அவள் பெற்றோர்தான், இது முதல் பேரக்குழந்தை என்று சொல்லித் தடபுடலாக ஏற்பாடு செய்து விட்டார்கள்.

''அவர் வரவில்லையா என்று கேட்பவர்களுக்கு என்னப்பா பதில் சொல்லுவேன்?''

''அவர் எப்படியும் வந்துவிடுவார், அம்மா.''

அவள் தங்கை ஊதிக்கொண்டு இருந்த ஒரு பலூன் படார் என்று வெடித்தது. எல்லோரும் அவள் பக்கம் திரும்பினார்கள். அதே நேரம் மதியழகன் உள்ளே நுழைந்து கொண்டு இருந்தான்.

அவனைப் பார்த்ததும் மாமியாரும், மாமனாரும் ரேஷன் கடையில் 'பாம் ஆயில்' கிடைத்தது போல மகிழ்ந்து போனார்கள்.

''வாருங்கள் மாப்பிள்ளை, மாப்பிள்ளை!'' மாமனார் ஓடி வந்து வாய் குளிர வரவேற்றார்.

''வாங்க!'' மாமியார் தூண் மறைவில் நின்று கொண்டார்.

''அல்லியை எங்கே?'' அவன் கேட்டான்.

''அக்கா படுத்து இருக்காங்க!'' தங்கை அவனை அறைக்கு அழைத்துப் போனாள்.

அல்லி தூங்குகிறாளா? சும்மா படுத்து இருக்கிறாளா? அவன் அந்த அறைக்குள் வந்த பின்பும் அவள் எழுந்திருக்க வில்லை.

தொட்டிலில் கிடந்த குழந்தையை அவன் பார்த்தான். முகத்தை நோக்கினான். குழந்தை யாரைப் போல இருக்கிறது என்று ஆராய்ந்தான். நிச்சயமாக அவனைப் போல இல்லை.



## 23

தொட்டிலில் கிடந்த குழந்தை "வீல் வீல்" என்று அழுது கொண்டு இருந்தது.

கட்டிலில் அமர்ந்து இருந்த அல்லியைப் பார்த்தபடி நின்றான் மதியழகன்.

அவனைப் பார்க்கவே விரும்பாதவள் போல அல்லி தலைகுனிந்து செயலற்றுச் சிலையாக இருந்தாள்.

"அக்கா..." தங்கை கூவி அழைத்தாள்.

அதன் பின்தான் அவளிடம் அசைவு ஏற்பட்டது. "தூக்கிக் கொடு!" என்பது போலக் குழந்தையை நோக்கிக் கையை நீட்டினாள்.

தங்கை குழந்தையைத் தூக்கி அல்லியின் கையில் கொடுத்தாள்.

இரவிக்கையின் பித்தான்களைத் தளர்த்திக் கொள்ளக் கையைக் கொண்டு போனவள், நினைவு வந்தவளாக, மதியழகனை நோக்கினாள். "வெளியில் போங்கள்."

சாட்டையால் அடித்தது போல அவனுக்குச் 'சுரீர்' என்றது. உடலைச் சிலிர்த்துக் கொண்டு அவன் அந்த அறையை விட்டு வெளியேறினான்.

வெளியில் வந்த அவனை மாமனார் பார்த்தார். அவர் உள்ளே நோக்கினார். அல்லி குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டு இருப்பது தெரிந்தது. "இப்படி உட்காருங்கள், மாப்பிள்ளை."

அவன் அசடு வழிய 'சோபா'வில் அமர்ந்தான். மாமனாரும் வந்து எதிரில் உட்கார்ந்தார்.



"குழந்தை பிறந்தபொழுது நீங்கள் ஊரில் இல்லை போலிருக்கிறது."

"ஆமாம்."

"டெல்லிக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள்."

"ஆமாம்."

"இன்று காலையில்தான் வந்தீர்களா?"

"ஆமாம்."

"அல்லி பிழைத்தது மறுபிறவிதான்."

"ஆமாம்..."

அவன் பேசக்கூடிய நிலையில் இல்லை. "வெளியில் போங்கள்!" என்று அல்லி சொல்லி விட்டாளே! அவனை அந்நியமாக நினைத்து விட்டாளே! "போடா வெளியே!" என்பதைத்தான் அவ்வளவு நாகரிகமாகக் கூறினாளா? அவன் சூடுபட்டது போல ஆனான். அந்த நினைவில் மிதந்து கொண்டு இருந்தான்.

"குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்?"

"ஆமாம்."

"மாப்பிள்ளை..." அவர் கொஞ்சம் உரக்கக் குரல் கொடுத்தார்.

"ஆ...என்ன சொன்னீர்கள்?" அவன் விழித்துக் கொண்டான்.

"இன்று மாலை குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டும். நீங்களும் அல்லியும் ஆலோசித்து, ஒரு நல்ல பெயராகத் தேர்ந்து எடுங்கள்!"

''பெரியவர்கள் பார்த்து வைத்தால் சரிதான்!'' அவன் நழுவினான்.

''நீங்கள் இருவரும் சேர்ந்துதான் தீர்மானிக்க வேண்டும்!'' என்றார் மாமனார்.

மாமியார் சிற்றுண்டி கொண்டு வந்து வைத்தார்.

''சாப்பிடுங்கள், மாப்பிள்ளை!'' என்றார் மாமனார்.

அப்பொழுது குழந்தையை மீண்டும் கிடத்திவிட்டு அல்லியின் தங்கை வெளியில் வந்தாள்.

அதைப் பார்த்த மதியழகன், ''உள்ளே போவதா வேண்டாமா?'' என்று ஊஞ்சலாடினான்.

ஆனால், அந்தக் குறும்புக்காரியோ, போகிற போக்கில் ''அத்தான்! இனி நீங்கள் உள்ளே போகலாம்!'' என்று கூறி விட்டுப் போனாள்.

மதியழகன் சிரித்துக் கொண்டே எழுந்தான். அறையை நோக்கிச் சென்றான்.

அல்லி மீண்டும் படுத்துவிட்டாள். ஒரு பக்கமாகச் சாய்ந்து கிடந்த அவள், விழித்துத்தான் இருந்தாள்.

அவன் கட்டில் அருகில் சென்று நின்றான்.

அவள் பார்த்தாள். ஆனால் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். எழவும் இல்லை.

அவன் அவள் அருகில் அமர்ந்தான்.

''அல்லி!''

அவள் எழுந்தாள்.

வெளியில் போனாள்.



அவன் முகத்தில் அடிபட்டது போலத் திகைத்து அமர்ந்தே இருந்தான்.

ஏன் இப்படி அவமானப்பட வேண்டும்?

எழுந்து போய் விடலாம் என்று நினைத்தான்.

அதற்குள் அவள் திரும்பி வந்தாள்.

நின்றாள்.

ஏன் நிற்க வேண்டும் என்று நினைத்தவள் போல, பிறகு கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

அங்கே சிறிது நேரம் ஓர் ஊமை நாடகம் நடந்தது.

''அல்லி!''

அவன் அமைதியைக் கலைத்தான்.

''என்ன?'' அவள் குரல் அழுத்தமாக இருந்தது.

''கோபமாக இருக்கிறாய் போலிருக்கிறது.''

''இல்லை. குளுகுளு என்று இருக்கிறேன்.''

''பதவி உயர்வு வந்த பின்பு அங்கே இங்கே அசைய முடிவது இல்லை. அவ்வளவு வேலை. அதுதான் வர முடியவில்லை.''

''இப்பொழுது ஏன் வந்தீர்கள்? நான் இருக்கிறேனா, செத்து விட்டேனா என்று பார்க்கவா?''

''அல்லி...'' அடிபட்ட பாம்பு போல, அவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

''என்ன?'' அவள் சண்டைக் கோழி போல உடலைச் சிலிர்த்துக் கொண்டாள். ''உங்கள் பார்வைக்காகத் தவம் கிடந்த காலம் போய்விட்டது.''

''இப்பொழுது என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய்?''

''இடத்தைக் காலி பண்ணுங்கள் என்று சொல்லுகிறேன்.''

''என்னை வெளியே போகச் சொல்லுகிறாயா?''

''உங்களுக்கு இங்கே என்ன வேலை?''

''ஆமாம். இங்கே எனக்கு வேலையில்லைதான்.''

அவன் வேகமாக வெளியேறினான்.

அவள் கண்கள் பெருகின.

பல்லைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

மாப்பிள்ளை போகும் வேகத்தைப் பார்த்து அல்லியின் அம்மாவும் அப்பாவும் அவளிடம் ஓடிவந்தார்கள்.

''என்னம்மா நடந்தது?''

''மாப்பிள்ளை எங்கேம்மா போகிறார்?''

''அம்மா!'' என்று அலறினாள் அல்லி.

''நீ ஏதாவது சொன்னாயா?'' அம்மா பதறிப் போய்க் கேட்டார்.

''வந்தவரை அடித்து விரட்டி விட்டாயே!'' தந்தை பதறினார்.

''நான் பாவி! பாவி!'' முகத்தில் அடித்துக் கொண்டு அழுதாள் அல்லி.

மதியழகன் நேராகத் தனது வீட்டுக்கு வந்தான்.

''பெருத்த அவமானம்!'' என்று அவன் கொதித்துப் போனான்.

''எப்படியடா அவளைக் கை கழுவுவது என்று நான் தவித்துக் கொண்டு இருந்தேன். இப்பொழுது வேலை எளிதாக



முடிந்துவிட்டது!'' என்று தனக்குத் தானே ஆறுதல் தேடிக் கொள்ள முயற்சித்தான்.

''கடிதம் வந்த அன்றே அவளைத் தலை முழுகியிருக்க வேண்டும். பாவம் பார்த்தது என் முட்டாள்தனம்!'' வழிநெடுகப் புகைந்து கொண்டே வந்தான்.

''முடிந்தது! எல்லாம் முடிந்து விட்டது! எனக்கும் அவளுக்கும் இனி உறவு கிடையாது!'' சுழன்றான் அவன்.

வீட்டுக்கு வந்ததும், ''என்ன அதற்குள் திரும்பிவிட்டாய்?'' என்று பொன்மணி கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை. அறையை நோக்கிப் போனான்.

''அல்லியைப் பார்த்தாயா?'' பொன்மணி பின்னேயே வந்தாள்.

அவன் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

''என்னடா நடந்தது? நான் கேட்கிறேன். நீ பதில் பேச மாட்டேனென்கிறாய்?'' பொன்மணி கோபப்பட்டாள்.

அவன் விருட் என்று எழுந்து அமர்ந்தான். ''உங்கள் பேச்சைக் கேட்டுப் போனதற்கு அங்கே எனக்கு நல்ல மரியாதை கிடைத்தது.''

''வீட்டு மாப்பிள்ளை ஆயிற்றே. மரியாதை கிடைக்கத் தான் செய்யும்.

''மண்ணாங்கட்டி! எங்கே வந்தீர்கள், வெளியே போங்கள் என்று சொல்லி விட்டாள்.''

''யார்?''

''அல்லி.''

"சொல்லத்தான் செய்வாள்."

அவன் அம்மாவை வெறித்து நோக்கினான்.

"என்னடா விழிக்கிறாய்? நீ எத்தனை நாள் அவளை ஒதுக்கித் தள்ளினாய்? உன்னைப் பார்க்க வேண்டும் என்று அவள் எத்தனை நாள் துடித்தாள். ஒருநாளாவது நீ வந்தாயா? பிள்ளை பிறந்த அன்று செத்துப் பிழைத்தாளே, வந்து பார்த்தாயா? அந்தக் கோபத்தில் அவள் ஏதோ சொல்லி விட்டாள். நீ மானி! உடனே வந்து விட்டாயாக்கும்."

"நான் மானிதான்."

"அவள் மட்டும் மானங்கெட்டவளா?"

"பின்னே..." அவன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"டேய்... டேய்... நாக்கு அழுகிப் போகுமடா!" அவசரமாகச் சொன்ன பொன்மணி பிறகு நிதானித்தாள். "என்னவோ சொல்ல வந்தாயே, சொல்லுடா. கணவன் -மனைவிக்குள் ஒளிவு மறைவு கூடாது. மனதுக்குள் வைத்துக் கொண்டே மருகிக் கொண்டு இருக்காதே. ஏதாவது இருந்தால் சொல்லிவிடு."

சொல்லி விடலாமா?

நல்ல வாய்ப்பு.

மதியழகன் நினைத்தான். ஆனாலும் அவனது அறிவு அதற்கு இடம் தரவில்லை. அதனால் குழப்பம்தான் ஏற்படும். "ஒரு மொட்டைக் கடிதத்தையா நம்பினாய்? நீயும் படித்தவன்தானா!" என்று இவன் மீதே பழி சொல்லுவார்கள். எனவே உறுதிப்படுத்திக் கொள்ளாமல் எதையும் சொல்லக் கூடாது என்று சும்மா இருந்தான்.

"மதி, ஏதாவது இருந்தால் சொல்லப்பா?" தாய் அன்புடன் வற்புறுத்தினாள்.

"ஒன்றும் இல்லை அம்மா."



"அல்லியின் நடத்தையைப் பற்றி யாராவது ஏதாவது சொன்னார்களா?"

"இல்லை, இல்லை. அதெல்லாம் இல்லை."

"அவள் பத்தரைமாற்றுப் பசும்பொன்!" உரசிப் பார்த்தவள் போல உறுதியாகச் சொன்னாள் பொன்மணி.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை என்று சொல்லி விட்டேனே, அம்மா."

"பிறகு ஏன் அவளை ஒதுக்கி வைக்கிறாய்?"

"என் வேலை அப்படி. இதை யாருமே புரிந்து கொள்ள மாட்டேனென்கிறீர்களே!"

"உண்மையாகத்தான் சொல்லுகிறாயா?"

"ஆமாம்."

"சரி, நான் நம்புகிறேன். அல்லி ஏதோ கோபத்தில் பேசிவிட்டாள். அதை மனதில் வைத்துக் கொள்ளாதே. மாலையில் விழா இருக்கிறது. நீ வந்து கலகலப்போடு கலந்து கொள்ள வேண்டும். உங்கள் இருவரையும் பார்ப்பவர்கள், இப்படிப்பட்ட இனிய ஜோடியைப் பார்த்ததே இல்லை என்று சொல்ல வேண்டும். அல்லிக்கு என்ன வாங்கிக் கொண்டு போனாய்? குழந்தைக்கு என்ன வாங்கினாய்?"

"என்ன வாங்கிக் கொண்டு போக வேண்டும்?"

"ஒன்றுமே வாங்கிக் கொள்ளாமலா போனாய்? பிறகு அவள் கோபப்படாமல் என்ன செய்வாள்? குழந்தைக்கு நானும் ஒரு சங்கிலி போட வேண்டும். பணம் தருகிறேன். அப்படியே நீயும் பொம்மைகள், நடைவண்டி, சட்டை என்று குழந்தைக்குச் சாமான்கள் வாங்கிக் கொள். அல்லிக்கும் ஏதாவது வாங்கு. நேரமில்லை. உன் கோபதாபத்தை எல்லாம்

மூட்டை கட்டி வை. மடமட என்று கடைவீதிக்குப் போய் வா.''

பொன்மணி பணம் கொண்டு வந்து, மகன் கையில் கொடுத்தாள். ''சீக்கிரம் வந்து சேர். உன் பிள்ளைக்கு விழா. நீ இருந்துதானே எல்லாம் செய்ய வேண்டும்? போனேன் வந்தேன் என்று வா.''

தலையை ஆட்டிவிட்டு மதியழகன் கிளம்பினான்.

அவன் பின்னேயே அம்மாவின் குரலும் வந்தது.

''உன் பிள்ளைக்கு விழா... உன் பிள்ளை...''

அத்தனை பேரும் இப்படித்தானே சொல்லுவார்கள்?

இதற்கு ஒரு முடிவு காண வேண்டாமா?

இன்றைக்கே முடிவு காணாவிட்டால், எல்லோரும் சேர்ந்து இவன் பிள்ளை என்று முத்திரை குத்தி விடுவார்களே!

சிந்தனையுடன் நடந்து கொண்டு இருந்தவனின் கண்ணில், ''டாக்டர் குமரன்'' என்ற பெயர்ப் பலகை மோதியது.

'சட்' என்று அவனுக்கு ஒரு யோசனை.

விருட் என்று டாக்டர் வீட்டுக்குள் நுழைந்தான்.



## 24

மதியழகன் மிகவும் நொந்து போனான்.

''இருதலைக் கொள்ளி எறும்பு'' என்பார்களே, அதை விட அவன் மோசமாக இருந்தான்.

''உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத் துக்கு இரு பக்கம் இடி!'' என்பார்கள். அவனுக்கோ நாலா பக்கமும் இடியாக இருந்தது.



அம்மா ஒரு பக்கம் அவன் குமட்டில் குத்தினார்!

அல்லி அடுத்த குமட்டில் குத்துகிறாள்!

மொட்டைக் கடிதம் அவன் முதுகில் அடித்தது.

சோதனையோ அவன் வயிற்றில் குத்தியது.

நடுத்தெருவில் நின்று கொண்டு, ''சோதனை மேல் சோதனை போதுமடா சாமி!'' என்று பாட வேண்டும் போல இருந்தது அவனுக்கு.

பின்ன என்ன?

அந்தக் கடிதத்தை முதல் இரவிலேயே அவன் பார்த்து இருக்கக் கூடாதா? பார்த்து இருந்தால், முதல் இரவிலேயே வயிற்று வலி நாடகத்தை அரங்கேற்றியிருக்கலாம்.

அவள் குழந்தை உண்டானது தெரிந்ததும், ''கையும் களவுமாகப் பிடிபட்டாள்!'' என்று நினைத்தான். ஆனால், ஓர் இரவு அவளுடன் அவன் உறவு கொண்டு விட்டானே!

''அது சரி, அதுக்குள் எப்படி நாலு மாதம் ஆகும்?'' என்று கொக்கி போட்டான். ''அந்தக் கணக்கு அப்படித்தான்!'' என்று அடித்துச் சொல்லி விட்டார்கள்.

ஒன்பதாம் மாதமே குழந்தை பிறந்தது.

'இந்தச் சாட்சி போதும்' என்று நினைத்தான். ஆனால், ''குறைமாதக் குழந்தை!'' என்று கூறி விட்டார்கள்.

குழந்தை தன்னைப் போல இல்லாட்டால், தனக்குப் பிறந்த குழந்தை இல்லை என்று சொல்லி விடலாம் என்று எண்ணினான். அந்த எண்ணத்திலும் குழந்தையே மண்ணைப் போட்டுவிட்டது. அது அல்லியின் அச்சாகப் பிறந்துவிட்டது.

கீழே வருவாராம். உட்கார்ந்து இருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

யாரோ ஒரு பையனாம். மோட்டார் சைக்கிளில் போகும் பொழுது லாரியில் மோதி விட்டானாம். பலத்த அடியாம். பிழைப்பது கடினமாம். அமர்ந்து இருந்தவர்கள் பேசிக் கொண்டது மதியழகன் காதில் விழுந்தது.

எல்லாம் முடிந்து எப்பொழுது டாக்டர் கீழே வருவாரோ? அவன் கவலை அவனுக்கு. அம்மா வேறு சீக்கிரம் திரும்பி வரச் சொன்னார். மதியழகன் கன்னத்தில் கை வைத்துக் கொண்டான்.

மாடிப் படியில் பேச்சுக் குரல் கேட்டது. ஆட்கள் இறங்கி வருவது போலத் தெரிந்தது. அத்தனை பேர் பார்வையும் மாடிப் படிகள் மீது பதிந்தது.

இரண்டு இளைஞர்கள் பேசிக் கொண்டே கீழே வந்தார்கள். உட்கார இடம் பார்த்தார்கள்.

மதியழகன் அமர்ந்து இருந்த பலகையில்தான் சிறிது இடம் இருந்தது. அவன் சற்றே தள்ளிக் கொண்டான். இரு இளைஞர்களும் அவனை அடுத்து அமர்ந்தார்கள்.

''கண்ணன் பிழைத்துக் கொள்வான் அல்லவா? உயிருக்கு ஆபத்து இல்லை என்று டாக்டர் சொல்லிவிட்டாரே!''

மோட்டார் சைக்கிள் விபத்தில் அடிபட்டவன் பெயர் கண்ணன் என்று மதியழகன் ஊகித்துக் கொண்டான்.

''பிழைத்துக் கொண்டு என்ன பயன்?''

''ஏன்?''



''அவனுக்கு வாழ்க்கையே இல்லாமல் போய்விட்டதே.''

கால், கை எதுவும் போய்விட்டதோ? மதியழகன் அவர்கள் பக்கம் கண்களைத் திருப்பவில்லை. காதை மட்டும் திருப்பிக் கொண்டான். இவர்கள் இருவரும் அந்தக் கண்ணனுக்கு நண்பர்கள் போலிருக்கிறது.

''டாக்டர் சொன்னாரா?''

''ஆமாம்.''

''என்ன சொன்னார்?''

''அடிபடக் கூடாத இடத்தில் கண்ணனுக்கு அடிபட்டு இருக்கிறதாம்.''

''அப்படியென்றால்...''

''அவன் திருமணமே செய்து கொள்ள முடியாதாம். செய்து கொண்டாலும், பெண்ணுடன் உறவு கொள்ள முடியாதாம். அவனுக்குக் குழந்தையே பிறக்காதாம். அப்படிப்பட்ட இடத்தில் அடிபட்டு இருக்கிறதாம்.''

''அடப் பாவமே.''

''பாவமாகத்தான் இருக்கிறது. ஆனால், இவன் செய்த அக்கிரமங்களுக்கு இது சரியான தண்டனைதான்.''

''என்ன சொல்கிறாய், மதன்?''

''உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியும்.''

''கண்ணன் என்ன செய்தான்?''

''கிருஷ்ண லீலையை விட மோசம்.''

''அப்படியா? கண்ணன் எவள் வீட்டுக்கும் போய் நான் பார்த்ததே இல்லையே.''

''அவன் ஒரு கோழை. அழகான பெண்ணைப் பார்த்தால் ஆசைப்படுவான். ஆனால் அனுபவிக்கிற துணிச்சல் கிடையாது. ஆனால், அவளுடன் கொஞ்சிக் குலாவுவது போலக் கற்பனை செய்து கொள்வான்.''

''ஒரு பெண் மீது ஆசைப்படுவது தப்பு இல்லையே.''

''ஒரு பெண்ணா? ஊரில் ஒரு பெண்ணை விட மாட்டான். அவன் கண்ணில் அழகான பெண்கள் பட்டு விடக் கூடாது.''

''பட்டால் என்ன? அவன்தான் வைக்கோல் போர் காக்கும் நாய் என்று சொல்லி விட்டாயே! வைக்கோலை நாய் என்ன செய்யும்?''

''வைக்கோல் போர் காக்கும் நாய்! சரியாகச் சொன்னாய். நாய் தானும் வைக்கோலைத் தின்னாது. தின்ன வரும் மாட்டையும் தின்னவிடாது. கண்ணனும் அப்படித்தான். பல பெண்களின் வாழ்க்கையைக் கெடுத்தான். அந்தப் பாவந்தான்...''

''மதன்! நீ சொல்வது எனக்குப் புரியவேயில்லை. கண்ணன் கற்பனையில்தானே பெண்களுடன் கொஞ்சிக் குலாவுவான் என்றாய்.''

''அவன் எத்தனையோ பெண்களுக்குக் கர்ப்பதானம் செய்து இருக்கிறான். அந்தப் பாவந்தான், இப்பொழுது ஆண்மையையே இழந்து விட்டான்.''

மதியழகனுக்குக் குழப்பமாக இருந்தது. அவனுக்கு வேண்டிய விஷயம் போலவும் இருந்தது. காதைத் தீட்டிக் கொண்டான்.



''அது எப்படி, மதன்? கற்பனையிலே கொஞ்சுவதிலேயே ஒரு பெண் கர்ப்பம் ஆகிவிடுவாளா என்ன?''

''அந்த இரகசியம் எனக்கு மட்டும் தெரியும், மோகன். கண்ணன் என்ன செய்வான் தெரியுமா? தான் கனவுக் கன்னியாக வைத்திருக்கும் பெண்ணுக்குத் திருமணம் நடந்தால், அவளைக் கட்டிக் கொள்ளப் போகிறவனுக்கு ஒரு மொட்டைக் கடிதம் எழுதிப் போடுவான்.''

''என்ன எழுதுவான்?''

''நண்பனே! இன்று உனக்கு முதல் இரவு. உனக்கு மட்டுமே இன்று முதல் இரவு. உன் மனைவிக்கு இது இரண்டாவது இரவு. என் குழந்தை அவள் வயிற்றில் வளர்ந்து கொண்டு இருக்கிறது. இப்படிக்கு உன் நலம் நாடும் நண்பன் என்று எழுதிப் போட்டு விடுவான்.''

மதியழகன் அதிர்ச்சியுடன் அவர்களைத் திரும்பிப் பார்த்தான்.

அவர்கள் அவனைக் கவனிக்கவில்லை. தொடர்ந்து பேசிக் கொண்டு இருந்தார்கள்.

''அடப்பாவி! இப்படியும் ஒருவன் இருப்பானா?''

''அவனுக்கு இது விளையாட்டு. ஆனால், இதனால் எத்தனை பெண்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு இருக்கிறது தெரியுமா?''

''மொட்டைக் கடிதத்தையும் நம்புவார்களா என்ன?''

''எத்தனையோ முட்டாள்கள் இருக்கிறார்களே! இந்தக் கடிதத்தால், ஒரு பெண் முதல் இரவில் தூக்குப் போட்டுக் கொண்டாள். சமீபத்தில் பத்திரிகையில் கூடச் செய்தி வந்ததே!''

"கிருஷ்ண லீலையை விடப் பயங்கரமாக இருக்கிறது."

"பயங்கரம் அல்ல, பரிதாபம்."

"டாக்டர் வருகிறார்!" என்று சின்னக் குரல்கள் கேட்டன.

மதியழகன் வேகமாக எழுந்தான்.

அதைவிட வேகமாக வெளியேறினான்.



## 25

"இந்த வீடுதான். நிறுத்து."

டாக்சி நின்றது.

வேகமாகக் கீழே இறங்கிய மதியழகன், "இறங்குங்கள் அம்மா!" என்று தாயையும் அவசரப்படுத்தினான்.

கார் நிறையச் சாமான்கள். வகை வகையான பொம்மைகள், சட்டைகள், விளையாட்டுச் சாமான்கள், இன்னும் என்னென்னவோ ஒரு லாரியில் ஏற்ற வேண்டியதைக் காரில் திணித்து இருந்தான்.

டாக்டர் குமரனின் மருத்துவமனையில் இருந்து வேகமாக வெளியேறிய மதியழகன் பறந்து பறந்து கடைகளில் சாமான்களை வாங்கினான். வாடகைக் காரில் அள்ளிப் போட்டுக்கொண்டு வீட்டுக்குப் போனான். "உன்னைத் தேடி உன் மாமனார் வந்தார். அல்லி அழுது கொண்டே இருக்கிறாளாம். உன்னை அழைத்துக் கொண்டு நானே வருகிறேன் என்று அவரை அனுப்பி வைத்தேன்," என்றாள் பொன்மணி.



"வாருங்கள், அம்மா. போவோம்," என்று தரதர என்று கையைப் பிடித்து இழுத்து வந்து காரில் ஏற்றினான். மகனின் போக்கு பொன்மணிக்குப் புரியாவிட்டாலும், மகிழ்ச்சியாக இருந்தாள்.

இருவரும் கை நிறையச் சாமான்களை அள்ளிக்கொண்டு காரில் இருந்து இறங்கி, வீட்டுக்குள் வந்தார்கள்.

பொன்மணியைப் பார்த்த சம்பந்தி, "மாப்பிள்ளை எங்கே?" என்று கேட்டார்.

"இதோ..." என்றாள் பொன்மணி.

அவன் முகம் தெரியாத அளவுக்குக் கைகளில் சாமான்கள் அடுக்கப்பட்டு இருந்தன.

அப்படியே தங்கள் அறைக்கு அவன் போனான்.

வாத்துப் போலத் தத்தித் தத்தி அவன் போனதைப் பார்த்து எல்லோரும் "கொல்" என்று சிரித்து விட்டார்கள்.

அறைக்குள் நுழைந்தான்.

அங்கே அல்லி இன்னும் கேவிக்கொண்டு இருந்தாள்.

அவன் முகம் தெரியாமல் யார் என்று அவள் திகைத்தாள்.

கைகளைச் சற்றே விரித்து, சாமான்கள் இடையே அவன் முகத்தைக் காட்டினான்.

புன்னகை தவழ்ந்த அவன் முகத்தைப் பார்த்ததும், அவள் முகமும் மலர்ந்தது.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா என்பது போல நின்றவள், தடால் என்று அவன் கால்களில் விழுந்தாள் - "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்."

அவளை அள்ளி யெடுக்கும் அவசரத்தில், கைகளில் இருந்த சாமான்களை யெல்லாம் அவள் மீது போட்டு விட்டான்.

அவளை அணைத்துக் கொண்டவன், "நீதான் என்னை மன்னிக்க வேண்டும்!" என்றான்.

பின்பு இருவருமாகக் கீழே கிடந்த சாமான்களை எடுத்துக் கட்டிலில் பரப்பினார்கள்.

"இது உனக்கு?"

பட்டுச் சேலை ஒன்று பளபளத்தது.

"இதுவும் உனக்குத்தான்."

இன்னொரு பட்டுச் சேலை.

"எனக்கா இவ்வளவு?"

"பத்து மாதமாக நான் உனக்கு ஒன்றுமே கொடுக்க வில்லையே. இதைப் பார்த்தாயா?"

ஒரு தங்கச் சங்கிலி.

"குழந்தைக்கா?"

"இல்லை. உனக்குத்தான்!" அவள் கழுத்தில் போட்டு விட்டான்.

"எனக்கு எதற்கு இதெல்லாம்?"



170659

"பத்து மாதமாக நான் உனக்கு ஒன்றுமே கொடுக்க வில்லையே."

"குழந்தைக்கு என்ன வாங்கினீர்கள்?"

"ஏராளமாக!" பெட்டி பெட்டியாகத் திறந்து காட்டினான்.

மாலையில் பெயர் சூட்டு விழா கோலாகலமாக நடந்தது.

மகிழ்ச்சி தொடங்கிய அந்த நாளை முன்னிட்டு "மகிழ்ச்சி" என்று குழந்தைக்குப் பெயர் வைத்தார்கள்.

"அது என்னங்க மகிழ்ச்சி?" ஒரு பெரியவர் பக்கத்தில் இருந்தவர் காதைக் கடித்தார்.

"சந்தோஷம் இல்லை, அதுதான் மகிழ்ச்சி!" என்றார் அருகில் இருந்தவர்.

"மகிழ்ச்சி!" என்று சொல்லிப் பார்த்தார் பெரியவர் அனுபவித்து.

விழா விருந்து எல்லாம் முடிந்து, வீட்டில் அமைதி திரும்பப் பத்து மணி ஆகிவிட்டது.

பால் செம்புடன் அறைக்குள் வந்தாள் அல்லி.

தொட்டிலில் "மகிழ்ச்சி" தூங்கிக் கொண்டு இருந்தான்.

கட்டில் காலியாகக் கிடக்கிறதே!

அவள் வினாக் குறியுடன் நின்றுகொண்டு இருக்கும் பொழுதே, பின் பக்கம் கதவுகள் சாத்தப்பட்டன.

10103181

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

குறும்புச் சிரிப்புடன் நின்றான் மதியழகன்.

17059


கரும்பு வில்லாக நாணத்தில் வளைந்த அல்லி, பால் சொம்பை அருகில் வைத்தாள்.

அவள் அதரம்... கன்னம்... மூக்கு... கண்கள்... நெற்றி... உச்சி... முத்த மாரி பொழிந்தான்.

அவள் திணறிப் போனாள். ''என்ன இது...'' இன்ப வேதனையுடன் முனகினாள்.

''பத்து மாதமாக நான் உனக்கு ஒன்றுமே கொடுக்கவில்லையே!'' அவன் சிரித்தான்.

''ஒன்று கொடுத்தீர்கள்!'' அவள் நாணத்தில் சிவந்தாள்.

''என்ன கொடுத்தேன்?''

அவள் தொட்டிலைச் சுட்டிக் காட்டினாள்.

''இன்று இரண்டாவதைக் கொடுக்கப் போகிறேன்.''

அவன் அணைத்தான், முதலில் விளக்கை. பிறகு அவளை.



01031161